# உதயன்




www.onlineuthayan.com

22: பக்கங்கள் சுடர் 27 கதிர் 265 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 02 வெள்ளிக்கிழமை (17/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00


# டெசோ தீர்மானம் ஐ.நா. சபைக்கு

## அனுப்பி வைத்து தி.மு.க. அதிரடி; சர்வதேச கவனத்தை ஈர்க்க முடிவு

**டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் வலிமையை அதிகரிக்கும் வகையில் தி.மு.க. இத்தகைய நடவடிக்கையை எடுத்துள்ளது.**

சென்னை, ஓக. 17

'டெசோ' மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 14 தீர்மானங்களையும் ஐ.நா. சபை, ஜெனிவா மனித உரிமைகளின் ஆணைக் குழு, சர்வதேச நீதிமன்றம் உள்ளிட்ட உலக நாடுகள், சமூக அமைப்புகள் ஆகிய வற்றுக்கு தி.மு.க. சார்பில் அனுப்பிவைக்கப்பட்டுள் ளன என்று தி.மு.க. வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

கடந்த 12ஆம் திகதி சென்னையில் 'டெசோ' மாநாடு நடந்தது. அந்த மாநாட்டின் ஆய்வரங்கில் 30இற்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள், உலக நாடுகளின் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள், வட மாநில அரசியல் கட்சித்தலை

பார்க்க பக்கம் 4

## டெசோ தீர்மானங்கள் தொடர்பில் ஆராயப்படும்

### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 17

'டெசோ' அமைப்பின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றன என்று அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் அரசதகவல்திணைக் களத்தில் நடைபெற்றது.

இதன்போது, ஊடகவியலாளரொருவர், "இந்தியாவின் தமிழகத்தில் நடைபெற்ற

பார்க்க பக்கம் 4

## பூந்தமல்லி அகதிகள் முகாமில் 8 இலங்கையர் உண்ணாவிரதம்

சென்னை, ஓக 17

தமிழகத்தின் பூந்தமல்லி விசேட அகதிகள் முகாமிலுள்ள இலங்கையர்கள் 8 பேர் காலவரையறையற்ற உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

செந்தூரன் என்பவர், விசேட முகாம்கள் மூடப்பட வேண்டுமெனக் கோரி உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போவதாக அறிவித்ததையடுத்து கடந்த 4 ஆம் திகதி செங்கல்பட்டு முகாமிலிருந்து பூந்தமல்லி முகாமுக்கு மாற்றப்பட்டார். அகதிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் இவர் இருந்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது.

எவ்வித குற்றச்சாட்டுகளுமின்றி அகதிகள் இந்த முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என அகதியொருவர் தெரிவித்துள்ளார்.

பார்க்க பக்கம் 4


புலிகளின் தலைவர் பிரபாகரனின் போர் நடவடிக்கை மையத்தை 22 புலம் பெயர் தமிழர்களுடன் கே.பி. பார்வையிட்டுள்ளார். 2

பெங்களூரில் வட இந்தியர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக வதந்தி பரவியதால் பதற்றம் 8

பாகிஸ்தான் விமானத் தளம் மீது நேற்று அதிகாலை அதிரடித் தாக்குதல். 9

தமிழர்களின் உரிமையை சர்வதேசம் அங்கீகரிக்க கூட்டமைப்புக்கு வாக்களிக்குமாறு மாவை எம்.பி. அழைப்பு 13


## மனிதஉரிமை சவால்களை எதிர்கொள்வதற்குத் தயார்

### அரசு அறிவிப்பு

கொழும்பு, ஓக. 17

மனிதஉரிமை விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிட்டவர்களின் சவால்களை ஏற்க நாம் தயாராகவே உள்ளோம் என சூளுரைத்த இலங்கை அரசு, மனித விவகாரத்தைப் பெரிதுபடுத்தி இலங்கைக்கு எதிராகச் செயற்பட்டவர்கள், இனவாத பிரசாரத்தை முன்னெடுத்தவர்கள் என எவர் வேண்டுமானாலும் நாட்டுக்குவந்து இங்குள்ள உண்மையான நிலைவரத்தைப் பார்வையிடலாம் என்றும் அழைப்பும் விடுத்துள்ளது.

எவர் வேண்டுமானாலும் வந்து நிலைமைகளைப் பார்வையிடலாம். ஆனால், இறைமையுள்ள நாடு என்ற அடிப்படையில் எந்தவொரு முடிவையும் நாமே மேற்கொள்வோம் என்று அரசு மீண்டும் இடித்துரைத்துள்ளது.

பார்க்க பக்கம் 4

## தென்னாபிரிக்க அனுசரணையை இலங்கை ஒருபோதும் ஏற்காது

### வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு,ஓக 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீண்டும் பேச்சு மேசைக்கு கொண்டு வருவதற்கு, தென்னாபிரிக்க அரசு வழங்க முன்வந்துள்ள அனுசரணையை இலங்கை அரசு ஒருபோதும் ஏற்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போருக்குப் பிந்திய நல்லிணக்க முயற்சிகள் மற்றும் அரசியல் தீர்வுக்கு, தமது அனுபவங்களின் அடிப்படையில் இலங்கைக்கு உதவத் தயாராக இருப்பதாக, கொழும்பு வந்த தென்னாபிரிக்காவின் அனைத்துலக உறவுகளுக்கான பிரதி அமைச்சர் எப்ராகிம் தலைமையிலான குழு இலங்கை அரசதரப்பு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றிடம் கூறியிருந்தது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள், உள்ளூர் அரசியல் முயற்சிகளில் வெளிநாட்டுச் சக்திகளின் தலையீடு தேவையில்லை என்று கூறியுள்ளன. அதற்கு இலங்கை அரசு ஒருபோதும் இணங்காது எனவும் அவை கூறியுள்ளன.

ஐரோப்பா மற்றும் அமெ

பார்க்க பக்கம் 4

## 13 லத்தீன் அமெரிக்க நாடுகளுடன் இலங்கை அரசு இராஜதந்திர உறவு

கொழும்பு, ஓக. 17

13 லத்தீன் அமெரிக்க நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது. இது குறித்து வெளிவிவகார அமைச்சு முன்வைத்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்கும் 33 லத்தீன் அமெரிக்க நாடுகளில் 20 நாடுகளுடன் இலங்கை ஏற்கனவே இராஜதந்திர உறவுகளைப் பேணிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

பார்க்க பக்கம் 4

## லட்சோப மக்களின் வாய்கள் உச்சரித்து


## வான் பிளந்த 'அரோகரா' ஒலியுடன் நல்லூர் கந்தன் தேரில் வீதி உலா

யாழ்ப்பாணம், ஓக. 17

லட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ 'அரோகரா' கோஷம் வானைப் பிளக்க நேற்றுக்காலை தேரில் ஏறி வலம் வந்தான் நல்லூர்க் கந்தன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி தேர்த் திருவிழா நேற்று வியாழக் கிழமை பக்திபூர்வமாக நடந்தேறியது. வியாழக்கிழமை

பார்க்க பக்கம் 4



## நுரைச்சோலையின் படத்தை 100 ரூபா தாளிலிருந்து நீக்குக

### கோருகிறது ஐ.தே.கட்சி

கொழும்பு,ஓக 17

2011ஆம் ஆண்டு இலங்கை அரசால் வெளியிடப்பட்ட 100 ரூபா நாணயத்தாளில் சீன நிறுவனமான 'சீன இயந்திரம் மற்றும் பொறியியல் கூட்டுத்தாபனம்' வழங்கிய 455 மில்லி

பார்க்க பக்கம் 4

## தேர்தலுக்கு அரச வளம்: விசாரணைக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஓக. 17

தேர்தல் பிரசாரத்தின் போது அரச வளங்கள் பயன்படுத்துவது குறித்து ஆராய்ந்து சட்டத்தைப் பாவிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

பார்க்க பக்கம் 4

## சர்வமதக் குழுவினர் இன்று மன்னாருக்கு

மன்னார், ஓக 17

மன்னாரின் தற்போதைய நிலையைக் கண்டறிந்து இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தும் வகையில் சர்வமதக் குழுவினர் இன்று வெள்ளிக்கிழமை மன்னாருக்குப் பயணம் செய்கின்றனர்.

மன்னாருக்குப் பயணம் செய்யும் குழுவினர், மன்னார் மாவட்டத்தில் வாழும், முஸ்லிம், இந்து, கத்தோலிக்க,

பார்க்க பக்கம் 4

## அமெரிக்கா - இலங்கை இடையே பாதுகாப்பு உறவுக்கு இணக்கம்

### இலங்கைத் தூதரகம் கூறுகிறது

வொஷிங்டன், ஓக 17

தெற்கு மற்றும் தென்கிழக் காசியாவுக்கான அமெரிக்காவின் பிரதி உதவிப் பாதுகாப்பு அமைச்சராக. புதிதாக நியமிக்கப்பட்டுள்ள விக்ரம் சிங்கை அமெரிக்காவுக்கான இலங்கைத் துதுவர் ஜாலிய விக்கிரமசூரிய சந்தித்துப் பேசியுள்ளார். வொஷிங்டனில் கடந்த திங்கட்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்புகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுவாகக் கட்டியெழுப்புவதற்கு உகந்த

பார்க்க பக்கம் 4

## இலங்கை செல்லும் பிரஜைகளுக்கு பிரிட்டன் புதிய பயண எச்சரிக்கை

லண்டன், ஓக. 17

இலங்கைக்குப் பயணம் செய்யும் தமது நாட்டுக் குடிமக்களுக்கு பிரிட்டன் மிகவும் அவதானமாக இருக்கும்படி புதிய பயண எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இந்தப் பயண எச்சரிக்கைக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

"விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் 2009 மே மாதம் முடிவுற்றாலும், இலங்கையில் தேசியவாதம் எழுச்சி கண்டுள்ளது. இதன் விளைவாக மேற்குலக எதிர்ப்பு, குறிப்பாக பிரிட்டன் எதிர்ப்பு வாதம் வலுவடைந்துள்ளது. இது பிரிட்டன் தூதரகம் மற்றும் ஏனைய இராஜதந்திர சுற்றுப்புறங்களில் எதிர்ப்பு வன்முறைப்போராட்டங்களுக்கு

பார்க்க பக்கம் 4

# பொலிஸார் - பொது மக்கள் இடையே நல்லூரில் நேற்று திடீர் முறுகல்

யாழ்ப்பாணம், ஓக. 17

நல்லூர் ஆலயத் தேர்த்திருவிழாவான நேற்றையதினம் மேற்குப்புற வீதித் தடையில் நின்றிருந்த பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையே திடீர் முறுகல் ஏற்பட்டது.


வீதித் தடையில் காவலுக்கு நின்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் வாகனச் சாரதியைத் தாக்கியதை அடுத்து இந்த முறுகல் ஏற்பட்டதாகச் சாட்சிகள் தெரிவித்தன.

கந்தர்மடம் பகுதியில் இருந்து வந்த வாகனம் ஒன்றின் சாரதியை, கடமையில் இருந்த தமிழ்ப் பொலிஸ் கான்ஸ்டபிள் தாக்கினார் என்று கூறப்படுகிறது. இதனால் அரசடி, முதலாம் ஒழுங்கையைச் சேர்ந்த சிவச்சந்திரன் என்ற இளைஞருக்குப் தலையின் பின்புறத்தில் சிறிய காயம் ஏற்பட்டது. பின்னர் அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்.

இளைஞர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு கூடியிருந்த மக்கள் பொலிஸாருடன் முரண்பட்டனர். வீதியில் காவல் கடமைக்காகப் பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனரே தவிர, மக்களைத் தாக்குவதற்காக அல்ல என்று அவர்கள் வாக்குவாதப்பட்டனர்.

முறுகல் நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து அங்கு சனக்கூட்டம் நிறைந்தது. எனினும் மேலதிக பொலிஸார் அந்த இடத்துக்கு வரவழைக்கப்பட்டு நிலைமை சுமூகமாக்கப்பட்டு. கூட்டம் கலைந்துபோக வைக்கப்பட்டது.

சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படும் என்றும் பிரச்சினை உடனடியாகவே சுமூகமாகத் தீர்க்கப்பட்டது என்றும் பொலிஸார் கூறினர். (உ-01)





## ரணிலை விவாதத்துக்காக அழைக்கிறார் மைத்திரிபால

கொழும்பு,ஓக 17

1994ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளர் காமினி திஸாநாயக்கவுக்கு எதிராகவும் ஸ்ரீ.சு.க. வேட்பாளர் சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஆதரவாகவும் செயற்பட்டமை குறித்து விவாதத்துக்கு வருமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர், அமைச்சர் மைத்திரிபால சிறிசேன எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவின் இந்தச் செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான இரகசிய ஆவணங்கள் தன்னிடம் உள்ளதாக மைத்திரிபால சிறிசேன நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க தலைவர் தனது பதவியை 6 வருடங்களுக்கு நீடித்துக் கொண்டதை அடுத்துக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ள நிலையில் ரணில் விக்ரமசிங்க குறித்த இரகசியத்தைத்தான் வெளியிட்டால் பல ஐ.தே.க உறுப்பினர்கள் ஐ.ம.சு.மு யில் இணைந்து கொள்ள வாய்ப்புள்ளதென அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

அதனால் எதிர்கட்சித் தலைவர் தனது குற்றச்சாட்டு குறித்து ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார். (த)

# பிரபாவின் போர் நடவடிக்கை மையத்தை நேரில் சென்று பார்வையிட்டாராம் கே.பி.

## 22 புலம்பெயர் தமிழரும் அவருடன் சென்றனர்

கொழும்பு,ஓக 17

விடுதலைப்புலிகளின் முன்னாள் பிரதான ஆயுத விநியோகஸ்தரான கே.பி. என அழைக்கப்படும் குமரன் பத்மநாதன், முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிரதான போர் நடவடிக்கை மையத்துக்குச் சென்று அதனைப் பார்வையிட்டுள்ளார்.

குமரன் பத்மநாதன், விடுதலைப்புலிகளின் பிரதான ஆயுத விநியோகஸ்தராக இருந்த போதிலும் புதுக்குடியிருப்பில் உள்ள பிரபாகரனின் இந்த போர் நடவடிக்கை மையத்துக்குச் சென்றமை இதுவே முதல் முறையாகும்.

இந்த இடத்தைப் பார்வையிடுவதற்காக கே.பியுடன் வெளிநாடுகளில் இருந்து 22 புலம்பெயர் தமிழர்களும் சென்றிருந்தனர். இந்தப் பயணத்தை பாதுகாப்பு அமைச்சு ஏற்பாடு செய்திருந்தது. (த)



# நல்லூரானின் தேருக்குச் சென்றிருந்த வேளை மாயமாகின 50பவுண் நகைகளும் பணமும்

யாழ்ப்பாணம்,ஓக.17

வீட்டிலுள்ளவர்கள் நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழாவுக்குச் சென்றதை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட திருடர்கள் குறித்த வீட்டிலிருந்த சுமார் 25 லட்சம் ரூபா பெறுமதியான 50 பவுண் நகைகளையும், 50 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச்சென்றுள்ளனர்

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் யாழ்ப்பாணம் கொட்டடி சிவன் பண்ணை வீதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

நேற்றைய தினம் நல்லூர்க்கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழா என்பதால் ஆலயத்துக்கு காலையிலேயே வீட்டு உரிமையாளரின் மனைவியும் மகனும் சென்றுவிட்டனர். வீட்டு உரிமையாளரான வேலுப்பிள்ளை குலசிங்கம் என்பவர் வீட்டுக்கு முன்புறமாக உள்ள தனது கடையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார். இதன்போதே திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர்.

இது குறித்து வீட்டு உரிமையாளர் தெரிவிக்கையில்:-

''எனது மனைவியும், மகனும் காலை 8 மணிக்கு கோயிலுக்குச் சென்றுவிட்டு 10 மணிக்குத்தான் திரும்பி வந்தார்கள். அந்த இரண்டு மணித்தியால இடைவெளியில் கடைக்கு வந்த இருவர் என்னிடம் குளிர்சோடா கேட்டனர். எனவே வீட்டிலுள்ள குளிர்சாதனப்பெட்டியிலேயே சோடா இருந்ததால், அதனை எடுத்துவர வீட்டுக்குச் சென்று கதவைத் திறந்தேன். அப்போது தான் வீட்டிலிருந்த நகைகளும் பணமும் களவாடப்பட்ட விடயம் எனக்குத் தெரியவந்தது'' .

''வீட்டின் பின்புறமுள்ள கிணற்றடி வழியாக உள்ளே வந்த திருடர்கள் வீட்டுப் பின் கதவின் தாழ்ப்பாளை உடைத்துள்ளனர். பின்னர் அந்தக் கதவு வழியாக வீட்டின் உள்ளே புகுந்து திருட்டில் ஈடுபட்டுள்ளனர். எம்முடைய கவனயீனமும் திருடர்களுக்குச் சாதகமாகப் போய் விட்டது. நாங்கள் நகைகளை அடைவுபிடித்து வருகின்றோம். அவ்வாறு எம்மிடம் அடைவு வைக்கப்பட்டிருந்த நகைகள் அனைத்தையுமே திருடர்கள் களவாடிச் சென்றுவிட்டனர்'' என்றார்.

சம்பவம் நடைபெற்ற வீட்டின் சுவாமிஅறையில் நகைகள், பணம் என்பன வைக்கப்பட்டிருந்தன. ஆனால் அந்த அறையின் கதவு பூட்டப்பட்டிருந்ததனால், கதவு திறந்த நிலையில் காணப்பட்ட பக்கத்து அறையின் சுவரில் ஏறி சுவாமி அறைக்குள் திருடர்கள் குதித்துள்ளனர். பின்னர் அங்கிருந்த அலுமாரியைத் திறந்து அதனுள் வைக்கப்பட்டிருந்த புடைவைகள் மற்றும் பொருள்களைச் சல்லடை போட்டுத் தேடியுள்ளனர். இதன்போதே அவர்கள் நகைகளையும் பணத்தையும் 'அபேஸ்' செய்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ்பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். எனினும்இது தொடர்பில் எவரும் கைதுசெய்யப்படவில்லை எனத் தெரிவித்த பொலிஸார் திருட்டுப் போயுள்ளதாக் கூறப்படும் நகைகள் எத்தனை பவுண் பெறுமதியானவை என்று உறுதிப்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்தனர். (ங-4)

## அரச மருத்துவர்கள் சங்கம் இன்று பணிப்புறக்கணிப்பு

அரச மருத்துவர் சங்கம் இன்று வெள்ளிக்கிழமை நாடு தழுவிய ரீதியில் பணிப் புறக்கணிப்பு நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது. மேலும் நேற்று நண்பகல் 12 மணி தொடக்கம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிகளில் இருந்து தமது சங்க மருத்துவர்கள் விலகியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்க மத்திய குழு உறுப்பினர் நவீன் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

தெஹிவளைப் பகுதியில் உள்ள கொழும்பு தேசிய வைத்தியசாலை விசேட சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் லலந்த ரணசிங்க வீட்டின் மீது நடத்தப்பட்டுள்ள கைக்குண்டுத் தாக்குதலைக் கண்டித்து இந்தப் பணிப் புறக்கணிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை உட்பட நாடெங்கிலும் உள்ள சகல வைத்தியசாலைகளில் பணிபுரியும் அனைத்து அரச வைத்தியர்களும் இன்று நண்பகல் 12 மணிவரை பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவர் எனவும் அவசர சிகிச்சைப் பிரிவு மாத்திரம் இயங்கும் என்றும் அரச மருத்துவர் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (த-4)

### தற்காலிக அடையாள அட்டை பெறுவதற்குக் கால அவகாசம்

வட மத்திய, கிழக்கு, சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலுக்கான தற்காலிக அடையாள அட்டை விண்ணப்பத்துக்கான இறுதித் திகதி ஒரு வாரத்தினால் நீடிக்கப்பட்டுள்ளது எனத் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதற்கமைவாக அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் 27 ஆகும். தற்காலிக அட்டைகளைக் கிராம அபிவிருத்தி மற்றும் தோட்ட அத்தியட்சகர் ஆகியோரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் சாரதி அனுமதி, ஓய்வூதியர் அட்டை, சமயக் குருமாருக்கு வழங்கப்படும் அடையாள அட்டை என்பனவும் 2010, 2011 தேர்தல்களுக்காக வழங்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகளும் வாக்கெடுப்பு நிலையத்தில் ஏற்கப்படும். (த)

# தெய்வீக சுக அனுபவம் நேற்று ஆரம்பம்

நல்லூர் ஆலயத்தின் உற்சவ காலத்தினை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்தியத் தூதரகம் மற்றும் இந்தியா - இலங்கை நட்புறவு அமைப்பும் வடமாகாண கலாசாரத் திணைக்களமும் இணைந்து 'தெய்வீக சுக அனுபவம்' எனும் தலைப்பில் 3 நாள் நிகழ்வினை நடத்திவருகிறது.

இதில் முதல்நாள் நிகழ்வான நேற்று வியாழக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பிரபல நடனக் கலைஞர் அலர்மேல் வள்ளியின் பரத நாட்டிய நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கர்நாடக வாய்ப்பாட்டு பாடகர் ரி.எம். கிருஷ்ணா, வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன், இந்தியத் துணை தூதரகத்தின் ஆலோசகர் சுரேஸ் கே.மேனன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்த நிகழ்விலும் பயிற்சிப் பட்டறையிலும் கலந்து கொண்டமைக்காக சான்றிதழ்களும் இதன்போது வழங்கப்பட்டன . (ங-13)




உதயன் இணைய வானொலி
www.uthayanradio.com

நேற்றைய புதிருக்கான விடை : அழித்தல்
வெற்றிபெற்றோர் :

1ஆம் பரிசு- சி.நிருஷாங்கனி கே.கே.எஸ். வீதி, சிவலிங்கப்புளியடி
2ஆம் பரிசு- கு.தவமலர் 164,முடமாவடி, நல்லூர்
3ஆம் பரிசு- தா.பாரதி விதானையார் வீதி, உடுப்பிட்டி

## விழிப்புணர்வுக் கண்காட்சி

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் சிறுவர் துஷ்பிரயோகத்தை கட்டுப்படுத்தும் நோக்குடன்விழிப்புணர்வு கண்காட்சி நல்லூர் ஆலயச்சூழலில் இடம்பெற்று வருகின்றது.

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஒன்று கூடும் தருணத்தில் பொதுமக்கள் மத்தியில் இலகுவாக விழிப்புணர்வை ஏற்படுத்த நல்லூர் அரசடி வீதி மற்றும் நல்லூர் பின்வீதியில்கண்காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் தற்போது சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர்களைத் தொழிலுக்கு அமர்த்துதல், சிறுவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயற்பாடுகள் அதிகரித்து வருவதால் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கு இந்தக் கண்காட்சிக் கூடங்களில் கருத்துரைகள் வழங்கப்படுகின்றன. நாளை பூங்காவனத் திருவிழா வரை இந்தக் கண்காட்சிக்கூடம் அமைக்கப்பட்டிருக்கும் என்று கூறப்பட்டது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை லீட்ஸ் நிறுவனத்துடன் இணைந்து இதற்கான ஏற்பாட்டைச்செய்துள்ளது. (ம-14)

# புங்குடுதீவில் புதுவித நோய் தண்ணீரால் பரவுகிறதா?

### சுகாதாரத்தைப் பேணுமாறு அறிவுறுத்து

*யாழ்ப்பாணம், ஓக.17*

*வேலணை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட புங்குடுதீவில் புதுவித நோய் ஒன்று மக்களைத் தாக்கியுள்ளதாக வேலணை பதில் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.*

வெவ்வேறு நீர் நிலைகளில் இருந்து கொண்டு வரப்பட்டு மக்களுக்கு வழங்கப்படும் குடிதண்ணீராலேயே காய்ச்சல், வயிறு எரிச்சல் போன்ற புதுவித நோய்கள் மக்களைப் பீடித்துள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். இதுவரை 14 பேர் புங்குடுதீவில் நெருப்புக்காய்ச்சலுக்கு இலக்காகி உள்ளனர் என்று இனம் காணப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் தீவகத்தில் குடிதண்ணீர் தட்டுப்பாடு காரணமாக வேறு இடங்களில் இருந்து கொண்டு வரப்படும் குளோரின் கலந்த குடிதண்ணீரை சுட வைத்து ஆறவைத்த பின்னர் பருகுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை வேலணைப் பிரதேச சபையின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார். (ம-50)

## சுன்னாகத்தில் விபத்து



வலி.வடக்கு, ஓக.17

சுன்னாகம் நகரப் பகுதியில் நேற்றுக் காலை சபாரி மோட்டார் சைக்கிள், டிப்பர் விபத்தில் மோட்டார் சைக்கிள் பெரும் சேதமடைந்த போதிலும் அதில் பயணித்தவர் தெய்வாதீனமாகக் காயங்கள் இன்றித் தப்பிக் கொண்டார்.

மோட்டார் சைக்கிள் டிப்பர் வாகனத்தின் கீழ் அகப்பட்டதால் பெரும் சேதமடைந்தது. குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்த சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-86)

## கைவிடப்பட்ட நிலையில் யாழில் 496 சிறுவர்கள்

*யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்து 128 சிறுவர்கள் சிறுவர் இல்லங்களில் வாழ்ந்து வருகின்றனர் என்றும் இவர்களை விட 496 சிறுவர்கள் பெற்றோரால் கைவிடப்பட்ட நிலையில் யாழ். மாவட்டத்தில் வசித்து வருகின்றனர் என்றும் யாழ்.மாவட்ட செயலக புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரையிலான முதல் 5 மாத காலப் பகுதியில் ஒரு லட்சத்து 98 ஆயிரத்து 68 சிறுவர்கள் வசிக்கின்றனர் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*இவர்களில் பெற்றோரால் 496 பேர் கைவிடப்பட்டுள்ளனர். பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 141 சிறுவர்களும் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் 120 சிறுவர்களும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 37 சிறுவர்களும் பெற்றோரால் கைவிடப்பட்ட நிலையில் உள்ளனர். சொந்த இடங்களை விட்டு வேறு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சிறுவர் இல்லங்களில் 331 சிறுவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த எண்ணிக்கை உள்ளடங்கலாக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் உள்ள சிறுவர் இல்லங்களில் ஆயிரத்து 128 சிறுவர்கள் இருக்கின்றனர்.*


*நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 363 சிறுவர்களும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 152 சிறுவர்களும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 136 சிறுவர்களும் சிறுவர் இல்லங்களில் வசித்து வருகின்றனர். ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளிலும் சிறுவர் இல்லங்களில் குறைந்த எண்ணிக்கையானோரே வசித்து வருகின்றனர். (ம-5)*

## நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழாவின் சில காட்சிகள்...

















ஹெலியில் இருந்து பூமழை





# தீர்வு இல்லையேல் புறக்கணிப்பு ரயில்வே ஊழியர்கள் எச்சரிக்கை

கொழும்பு,ஓக 17

போக்குவரத்து அமைச்சு தங்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு வழங்கப்படாதுவிடின் பணிப் புறக்கணிப்பை மேற்கொள்ளப்போவதாக ரயில்வே ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

ரயில்வே திணைக்களத்தின் பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியும் அவற்றைத் தீர்க்குமாறு கோரியும் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவுக்கு அண்மையில் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டதாக அகில இலங்கை ரயில்வே ஊழியர்கள் பொதுச்சங்கம் தெரிவித்துள்ளது.

ரயில்வே திணைக்களத்தில் கடமையாற்றுகின்ற 17,000 ஊழியர்கள் உள்ளனர். இவர்களுக்குத் தங்களின் பணி நிலைமையிலும் சம்பளத்திலும் அதிகாரிகளின் மனப்பாங்கு தொடர்பிலும் திருப்தி இல்லை என அகில இலங்கை ரயில்வே ஊழியர்கள் பொதுச்சங்கத்தின் பொதுச் செயலாளர் சுமதிபால மானவடு தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே மின்சார சபை ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பால் பல்வேறு பாதிப்புகள் நாடெங்கிலும் ஏற்பட்டுள்ள நிலையில், ரயில்வே ஊழியர்களும் போராட்டத்தில் குதித்தால் நிலைமை இன்னும் மோசமாகிவிடக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு ரயில்வே ஊழியர்கள் போராட்டத்தில் குதித்தால் நாட்டின் போக்குவரத்து சீர்குலைவதோடு பொருளாதார ரீதியான பாதிப்புக்களும் ஏற்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

## இலங்கை செல்லும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இட்டுச் சென்றுள்ளது. இந்தப் போராட்டங்கள் பொதுவாக பிரிட்டன் சமூகத்தை நோக்கியதாக இருந்தாலும், நீங்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். போராட்டங்கள் நடைபெறும் பகுதிகளைத் தவிர்க்கவேண்டும்.

விடுதலைப் புலிகள் 2009 மே மாதம் தோற்கடிக்கப்பட்டுவிட்ட போதிலும், இலங்கை அரசு பரந்தளவிலான தீவிரவாத எதிர்ப்பு அதிகாரங்களைப் பயன்படுத்துவதுடன், சோதனைச் சாவடிகள் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அதிகரித்துள்ளது. அதிகளவிலான இலங்கை இராணுவத்தினர் நாடு முழுவதிலும் நிலைகொண்டுள்ளனர்'' - என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



இசற் புள்ளியிடல் முறையால் பாதிப்படைந்த மாணவர்களுக்கு நீதி வழங்கக் கோரி புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நடைபெற்ற கையெழுத்து வேட்டை நிகழ்வில் ஆர்வத்துடன் பங்குகொள்ளும் வெளிநாட்டவர்கள்.

## டெசோ தீர்மானம் ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் சிலர் பங்கேற்றனர். ஆய்வரங்கில் விவாதிக்கப்பட்ட சில வரைவுத் தீர்மானங்கள் மீது எதிர்ப்புகள் எழுந்தன. முடிவில் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட் டன. இந் தத் தீர்மானங்களை ஜெனிவாவில் உள்ள மனித உரிமை ஆணைக் குழுவுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென மாநாட்டில் பேசிய சிலர் வலியுறுத்தினர்.

அதன் அடிப்படையில் 14 தீர்மானங்களும் சர்வதேச நாடுகளின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. நியூ யோர்க்கில் உள்ள ஐ.நா. சபை, லண்டனிலுள்ள சர்வதேச பொது மன்னிப்பு வழங்கும் அமைப்பு, ஜெனிவாவில் உள்ள சர்வதேச மனித உரிமை ஆணைக்குழு, நெதர்லாந்திலுள்ள சர்வதேச நீதிமன்ற ஆணைக்குழு உள்ளிட்ட உலக நாடுகளின் சமூக அமைப்புகளுக்கு தி.மு.க., சார்பில் தீர்மானங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் மத்திய அரசின் செயற்பாட்டை விரைவுபடுத்தும் பணிகளையும் முடுக்கிவிடுவதற்கான திட்டங்களையும் விரைவில் தி.மு.க. ஆரம்பிக்கவுள்ளதென அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தேர்தலுக்கு அரச வளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்டுள்ளார் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல நேற்றுத் தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கேள்வி நேரத்தின்போது, ''தேர்தல் பிரசாரத்துக்கு ஆளுந்தரப்பினர் வாகனங்கள் உள்ளிட்ட அரச வளங்களைப் பயன்படுத்துகின்றனர் என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளனவே'' என்று ஊடகவியலாளரொருவர் கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, ''அரச வளங்கள் பயன்படுத்துவது குறித்து ஜனாதிபதிக்கும் தெரிவித்துள்ளனர். அது குறித்து ஆராய்ந்து சட்டத்தை பயன்படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்'' என்று குறிப்பிட்டார்.

அத்துடன், ''மின்சார சபை ஊழியர்கள் 18ஆம் திகதிக்கு முன்னர் கடமைக்குத் திரும்பாவிட்டால் அவர்களின் பதவிகள் பறிக்கப்படும் என மின்சக்தி அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளதா?'' எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில், ''மின்சார சபை ஊழியர்கள் தொடர்ந்தும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டால் மேலதிக ஆட்களை இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றுதான் மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. இது தற்காலிகமானதாகும். மற்றும்படி ஒன்றுமில்லை'' - என்றார்.

## மனித உரிமை சவால்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் அரசதகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது ஊடகவியலாளரொருவர் அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெலவிடம், ''இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகளின் உறுப்பினர்களை உள்ளடக்கிய நவநீதம்பிள்ளையின் ஐ.நா. குழுவொன்று இலங்கை வரவுள்ளது என அறியமுடிகின்றது. இது குறித்து அரசின் நிலைப்பாடு என்னவாகவுள்ளது'' எனக் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமக்கு எதிராகச் செயற்பட்ட அனைத்துத் தரப்பையும் நாட்டுக்குவந்து தற்போதுள்ள நிலைமைகளை நேரில் கண்டறியுமாறு நாம் அழைப்பு விடுக்கின்றோம். எதிரான போக்கைக் கொண்டுள்ளவர்கள் நேரில்வந்து உண்மை நிலைவரங்களை ஆராய்வது சிறந்ததாகும். மனித உரிமைகள் குறித்து பேசுகின்றவர்களின் சவால்களை ஏற்பதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

அண்மையில் இந்திய எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் குழுவொன்று இங்கு வந்தது. அந்தக் குழுவில் தமிழ்நாட்டு எம்.பிக்களும் உள்ளடங்கியிருந்தனர். நிலைமைகளை அவர்கள் அனைத்துப் பிரதேசங்களுக்கும் சென்று பார்வையிட்டனர்.

ஒரு காலகட்டத்தில் கண்ணிவெடி அச்சம் காரணமாக நாம் வெளிநாட்டுப் பிரமுகர்களை - இராஜதந்திரிகளை நிலைமைகளை ஆராய்வதற்கு அனுமதிக்கவில்லை. தற்போது அந்த நிலைமை மாற்றமடைந்துள்ளது. 95, 98 சதவீதமான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுவிட்டன.

எனவேதான் எவர் வேண்டுமானாலும் இங்கு வந்து நிலைமைகளைப் பார்வையிடலாம் என்று சொல்கின்றோம். ஆனால், எந்தவொரு முடிவையும் இறைமையுள்ள நாடு என்ற அடிப்படையில் அரசுதான் முன்னெடுக்கும் - என்றார்.

## நுரைச் சோலையின் படத்தை 100 ரூபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யன் அமெரிக்க டொலர் பெறுமதியான நுரைச்சோலை மின் திட்டத்தின் படம் அச்சிடப்பட்டுள்ளது. அந்தப் படத்தை குறிப்பிட்ட நாணயத்தாளிலிருந்து அரசு நீக்க வேண்டும் என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நுரைச்சோலை மின் திட்டத்தில் தொழிநுட்பப் பிரச்சினைகள் காணப்படுவதுடன், மின்உறபத்தியில் சீரற்ற தன்மை, அடிக்கடி மின்வெட்டு என்பனவும் ஏற்படுகின்றன.

நாணயத்தாளில் காணப்படும் நுரைச்சோலை மின் திட்டத்தின் படம் இலங்கையின் அபிவிருத்தி மற்றும் செழுமையைக் குறிக்கும் குறியீடாகக் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தப் படம் இலங்கை தேசத்தின் அபிவிருத்தி மற்றும் சுபீட்சத்தைக் குறிக்கும் குறியீடாக இலங்கை அதிகாரிகள் சித்தரிக்கின்ற போதிலும், உண்மையில் இது நாட்டின் ஊழலை வெளிப்படுத்தும் குறியீடாகக் காணப்படுவதாக ஹர்ஷ டீ சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

நுரைச்சோலை மின் திட்டத்தின் ஒப்பந்தப் புள்ளி தொடர்பாக இலங்கை அரசுக்கும் சீன அரசுக்கும் இடையில் இழுபறி நிலை காணப்படுவதே, மின் திட்டத்தின் உற்பத்தி தடைப்படுவதற்கான பிரதான காரணம் எனவும் கூறப்படுகிறது.

இலங்கையில் தற்போது புழக்கத்திலுள்ள நூறு ரூபா நாணயத்தாளில் நுரைச் சோலை மின் திட்டத்தின் படம் அச்சிடப்பட்டுள்ளமையானது தமக்கு கிடைத்துள்ள 'நிகரற்ற பெருமை' என சீன இயந்திர மற்றும் பொறியியல் கூட்டுத்தாபனம் தனது இணையத்தளத்தில் குறிப்பிட்டுள்ளதாக ஹர்ஷ டீ சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்திட்டத்துடன் தொடர்புடைய தரப்புக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி நிலை காணப்பட்டதாகவும், நுரைச் சோலை மின் திட்டத்தின் இழுபறிநிலைக்கு இலங்கையில் உள்ள இரு பிரதான கட்சிகளுமே பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

## தென்னாபிரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்காவைத் தளமாக கொண்டுள்ள விடுதலைப் புலிகளின் ஆசியுடன் தான் தென்னாபிரிக்கா இந்த அனுசரணையை வழங்க முன்வந்துள்ளதாக நம்பப்படுவதாகவும் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.இதனால் தென்னாபிரிக்கா இந்த அனுசரணைப் பணியை வழங்குவதற்கான சந்தர்ப்பம் இல்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

## 13 லத்தீன் அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கௌத்தமாலா, பெலிஸ், நிக்கராகுவா, பார்படோஸ், கிரனேடா, சென்.கிட்ஸ் அன்ட் நெவிஸ், சென்.வின்சன்ட் அன்ட் டைன்ஸ், சூரிராம், ஹொன்டுராஸ், அன்ரிகுவா அன்ட் பார்புடா, டொமினிகா, ஹெயீட்டி, சென்லூசியா ஆகிய நாடுகளுடனேயே இலங்கை புதிதாக இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

## சர்வமதக் குழுவினர்...

(முதலாம் பக்க்த் தொடர்ச்சி)

பௌத்த மதத்தினரைத் தனித்தனியாகச் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர்.

அதேவேளை இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்னார் மூர் வீதி ஜும்ஆ பள்ளிவாசலுக்கு செல்லும் இந்தக் குழுவினர் முஸ்லிம் மக்களுடன் கருத்துப் பறிமாறல்களைச் செய்யவுள்ளனர். (த)

## டெசோ தீர்மானங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'டெசோ' மாநாட்டில் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இலங்கை அரசியல் தலைவரொருவரும் அந்த மாநாட்டில் கலந்துகொண்டிருந்தார். இந்த விடயத்தில் அரசின் நிலைப்பாடு என்னவாக உள்ளது என அமைச்சரவையின் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெலவிடம் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த அமைச்சர், ''இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி வருகின்றோம்'' எனச் சுருக்கமாகப் பதிலளித்தார்.

## பூந்தமல்லி அகதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 6 ஆம் திகதி செந்தூரன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். அவருடன் மேலும் 7 பேர் உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்துள்ளார். எனினும் மாவட்ட நிர்வாக அல்லது பொலிஸ் திணைக்கள அதிகாரிகள் எவரும் ஆர்ப்பாட்டக்காரர்களைச் சந்திக்காத நிலையில், இந்த அடையாள உண்ணாவிரதம் கால வரையறையற்ற உண்ணாவிரதமாக மாறியுள்ளது.

அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டால் அதிகாரிகள் வருவார்கள் என நாம் எண்ணினோம். ஆனால் அது பலனளிக்கவில்லை. எனவே அதிகாரிகள் எம்மைச் சந்திக்கும் வரை காலவரையறையற்ற உண்ணாவிரதம் மேற்கொள்ள நாம் தீர்மானித்துள்ளோம் என அவர் கூறினார். (த)

## அமெரிக்கா - இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தருணம் இதுவே என்று இருதரப்பும் ஒப்புக் கொண்டுள்ளதாக வொசிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் கூறியுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, போருக்குப் பிந்திய இலங்கையின் பாதுகாப்புக் கவலைகள் குறித்தும், அண்மைய பொருளாதார மற்றும் அரசியல் முன்னேற்றங்கள் குறித்தும் விக்ரம் சிங்குக்கு இலங்கைத் தூதுவர், எடுத்துக் கூறியுள்ளார்.

பொதுவான பாதுகாப்பு இலக்குகளை அடைவதற்கு இரு நாடுகளும் பங்காளிகளாக இணைந்து செயற்பட முடியும் என்று அமெரிக்காவின் பிரதிப் பாதுகாப்பு உதவிச்செயலர் தெரிவித்துள்ளார்.

தீவிரவாத,கடற்கொள்ளை முறியடிப்பு ஒத்துழைப்பு, மனிதாபிமான உதவிகள், உள்ளிட்ட விவகாரங்களில் இரு நாடுகளும் இணைந்து பணியாற்ற முடியும் என்றும் அவர் மேலும் கூறியதாகவும் வொசிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. (த)

## வான் பிளந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை விசேட பூசைகள், வசந்தமண்டப பூசைகள் இடம் பெற்று முருகப்பெருமான் காலை 7 மணிக்கு தேருக்கு எழுந்தருளினார்.

தேர்த்திருவிழாவில் சுமார் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு முருகனின் ஆசி வேண்டினர். வெளி நாடுகளில் இருந்து வருகை தந்த பெரும் எண்ணிக்கையான புலம்பெயர் தமிழர்களும் நேற்றைய தேர்த்திருவிழாவில் கலந்துகொண்டனர். அத்துடன் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்த பெரும்பான்மை இன மக்களும் நேற்றுக் காலை முதல் நல்லூரில் கூடியிருந்தனர். ஆலய வீதிகளில் பொலிஸார் சீருடையிலும் சிவில் உடையிலும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

தேர்வீதியுலா ஆரம்பமான சில நிமிடத்தில் அங்குவந்த விமானப் படையினரின் ஹெலி நல்லூரை மூன்று தடவைகள் வலம் வந்து தேரின் மீது பூ மாரிபொழிந்தது. அத்துடன் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் அங்கபிரதிஷ்டை செய்தனர். நேர்த்திக்கடன்களைச் செலுத்துவோருக்கு இடையூறற்ற வகையில் சாரணர்கள் தமது சேவையை வழங்கினர். இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் வைத்திய சேவைகள், முதலுதவிச் சேவைகள் என்பனவும் ஆலயச் சூழலில் இடம்பெற்றன.

இந்தமுறை கூடுதலான தொலைக்காட்சி நிறுவனங்கள் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளை நேரடி ஒலிபரப்புச் செய்தது இலங்கை கானொலி அஞ்சல் நிகழ்வும் இடம்பெற்றது.

(த-7-17-41-86)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## புதன் தக்க சந்தர்ப்பம் துறை தோய்ந்து வெளிப்படுத்துக!

தமிழ் மக்களும் இந்த நாட்டின் பிரசைகள், சிங்கள மக்களைப் போலவே பல்லாண்டு காலமாக வாழ்ந்து வருகிறார்கள். கண்டி இராச்சியத்தை ஆண்டு வந்த ஸ்ரீவிக்கிரமராஜசிங்க மன்னன் முதற்கொண்டு, யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட சங்கிலிய மன்னன், வன்னி நிலப்பரப்பை ஆண்ட பண்டாரவன்னிய மன்னன் ஆகியோரின் சரித்திரங்கள், வரலாறுகள் தமிழர்கள் இலங்கையில் பூர்வீக காலமாக வாழ்ந்துவருகிறார்கள் என்பதை இயம்புவன.

சோற்றுக்குள் பூசினிக்காயை மறைக்க முயல்வது போன்று, இந்தச் சரித்திர உண்மைகளை மூழ்கடிப்பதற்கான முயற்சியில் முன்னர் இந்த நாட்டை ஆட்சி செய்த எந்த ஜனநாயக அரசுகளையும் விட, இப்போதைய ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம், தமிழ் மக்களின் இருப்பை இல்லாமற் செய்து விடும், தலைகீழாக மாற்றிவிடும் முயற்சியில் மிகமிகத் தீவிரமாக, வெகுவேகமாக - ஏவுகணை வேகத்தில் - செயற்பட்டு வருகிறது.

ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் கிடைத்த உடனேயே சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சமஉரிமைகள் வழங்கப்படக் கூடாது, சிங்கள மக்கள் ஆள்பவர்களாகவும், ஏனையோர் ஆளப்படுவோராகவும் வைத்திருக்கப்பட வேண்டியவர்கள் என்ற இனத்துவேசம் தோய்ந்த கோட்பாட்டுக்குப் பெரும்பான்மையின அரசியல் தலைவர்கள் அத்திபாரம் இட்டனர்.

தமிழ் அரசியல் தலைவர்களின் அந்தக் காலத்தைய ஐம்பதுக்கு ஐம்பது சம உரிமைக் கோரிக்கை, உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையாக மாறிவிட்டமை இன்றைய யதார்த்தம் என்றாகி விட்டது.

சகவாழ்வு, சமஉரிமை, சமத்துவ வாழ்வு என்றால் 'கிராம்' என்ன விலை என்று கேட்கும் அளவுக்கு, இன்றைய அரசும் அதன் இனவாத, மதவாத போதகர்களும் செயற்படுகிறார்கள். அதனால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில், மாநிலங்களில் போர் முடிவுற்ற கடந்த மூன்று வருடங்களில் திட்டமிட்ட முறையில் நடத்தப்படும் பெரும்பான்மையினர் குடியேற்றங்கள், இராணுவ மேலாதிக்கம், சிவில் செயற்பாடுகளில் ஆயுதப் படைகளின் தலையீடு, 'புனுகு பூசப்பட்ட' மீள்குடியேற்றச் செயற்பாடுகள், தமிழ் அரசியல் கைதிகள் மீதான விசாரணைகளையும்விடுவிப்பையும் எல்லையில்லாமல் தாமதித்தல் என்பன அரசுக்கும் அதன் பன்முகப்பிரதானிகளுக்கும் காலம் கடத்தும் கருமங்களாகி விட்டன.

தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை வழங்கி, இன ஒற்றுமையையும் சௌஜன்யத்தையும் வளர்த்தாலேயே இந்த நாட்டை வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்லலாம் என்ற வாய்ப்பாட்டைப் புறமொதுக்கிவிட்டு, பெரும்பான்மை இனத்தவர்கள் - அவர்களின் அரசாங்கம் வழங்கும் பிச்சையைத் தமிழர்கள் கையேந்தி வாங்கவேண்டும் என்ற சூத்திரத்தை அடிப்படையாக வைத்தே, 'ஆண்டான் - அடிமை' நிலையே சாத்தியமான சமரசம் என்ற எடுகோளுடன் இன்றைய அரசு செயற்படுகிறது.

ஒப்பனைக்காக, நாட்டில் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கென தான் நியமித்த ஆணைக்குழுவின் சிபார்சுகளைச் செயற்படுத்துவதில் கூட அரசாங்கம் தயக்கமும் தாமதமும் காட்டுகிறது. அவற்றை நிறைவேற்றப் பெருமனதின்றி, சர்வதேச நாடுகளுடன் முண்டிக் கொள்ளும் வழியையே நாடுகிறது.

இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வையும், பரஸ்பர நட்புணர்வையும் வளர்ப்பதற்குப் பதிலாக, நாட்டின் இரண்டு இனங்களுக்கு மத்தியில் பகைமையையும் குரோதத்தையும் வளர்க்கும் விதத்திலேயே இன்றைய அரசின் செயற்பாடுகள் மிகப் பலவும் அமைந்துள்ளன.

அரசாங்கத்தின் நியாயமும் நீதியும் அறவே இல்லாத செயற்பாடுகளுக்குத் தமிழ் மக்கள், ஜனநாயக உரிமை நியமங்களுக்கு ஏற்ப ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் , உண்ணாவிரதப் போராட்டங்கள் ஆகியவற்றை முன்னெடுக்கும் போதெல்லாம், அவற்றை அமைதிக்குப் பங்கம் உண்டாக்கும், வன்முறைக்கு வழி வகுக்கும் செயற்பாடுகள் என்று காரணம் காட்டி தடைவிதிப்பது இப்போது வழமையாக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் தமது பிரச்சினைகள், தமக்கு இழைக்கப்படும் இன்னல்கள், 'பலாத்காரமாக' தட்டிப்பறிக்கப்படும் ஜனநாயக உரிமைகள் குறித்து நாலுபேர் கூடிக் கலந்தாலோசிக்க இயலாத நிலைமை அரச அலகுகளினால் தோற்றுவிக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய சூழ்நிலையில், தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் இன்னல்களையும் பகிரங்கப்படுத்துவதற்கு நாடாளுமன்றம் உகந்த மேடையாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் வியூகத்தில் வடக்கு, கிழக்கு வாழ் தமிழர்களின் பிரச்சினைகளை - அவர்களை அடிவயிற்றில் அடிப்பது போன்று பாதிக்கும் பிரச்சினைகளை - விவாதிக்க ஏற்பாடாகி உள்ளது. எதிர்வரும் புதன்கிழமை தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்றில் விவாதிக்க ஏற்பாடாகி உள்ளது. அச்சபையில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தில் முழுநாள் விவாதத்துக்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. இரண்டு நாள்களுக்கென நடத்தினால் பல விடயங்களை அம்பலப்படுத்தச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும்.

எப்படியோ, ஒருநாள் விவாதத்தில் அரசின் அக்கறையற்ற, தட்டிப்பறிக்கும் போக்கை வெளியுலகத்துக்கு உத்தியோக பூர்வமாக பகிரங்கப்படுத்த இது நல்ல வாய்ப்பு எனக் கருதலாம்.

இந்தச் சந்தர்ப்பத்தை தக்கவாறு பயன்படுத்துவதானால் -

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்குரிய விவகாரங்களை, விடய வாரியாக வகுத்துப் பிரித்து, இடுக்கண்கள், இடையூறுகள், உரிமை மறுப்புகள், என்று அட்டவணைப்படுத்தி -

ஒரு விவகாரத்தை ஒருவர் வெளிப்படுத்திப் பேச வேண்டும். அரைத்த மாவை திரும்ப அரைக்கும் பாணியைத் தவிர்த்து, ஒரு விடயத்தை ஒவ்வொருவரும் திரும்பத் திரும்ப முன்வைக்காமல், தனித்தனி, துறைகள் சம்பந்தப்பட்ட விடயங்களை துறை தோய்ந்த ஆதாரங்கள், அடிப்படை எடுகோள்கள் சகிதம் முன்வைப்பதே பயன் நல்கக்கூடியது.

கும்பலில் கோவிந்தா என்ற வகையில் இல்லாமல், தமிழ் மக்களுக்குரிய ஜனநாயக உரிமைகளை அதிகார பலத்தைக் கொண்டு தட்டிப் பறிக்கும் அரசின் மாற்றமுடியாத வடிவத்தை, மிகத் துல்லியமாக எடுத்துக்காட்டும் விதத்தில், புதன்கிழமைப் பேச்சுக்கள் கனதியாக, ஆய்ந்தறிந்து சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் வடிவில் அமைக்கப்படுவது அவசியம்.

எமது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை தக்க தரவுகள் ஆதாரங்களுடன் எடுத்துக்கூறினால், அவை அனைத்துலக அரசுகளுக்கு தகவல் கூறும் சிறப்பான, பயன்உள்ள ஆவணங்களாக அமையும். இதனைக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்குக் கிடைக்கும் பொன்னான வாய்ப்பு எனக் கருதி செயற்பட வேண்டும்.எல்லா வகைகளிலும், வழிகளிலும் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் சார்பில் இந்தக் கருத்தை முன்வைக்கிறோம்.

# வடக்கு அதிபர், ஆசிரியர்களின் சமகாலப் பிரச்சினை ஆராய்வு

### இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளை ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக.17

வடமாகாண அதிபர்கள், ஆசிரியர்கள் சமகாலத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளை ஏற்பாடு செய்துள்ள இந்தக் கலந்துரையாடல் திருநெல்வேலிச் சந்தி, ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் முற்பகல் 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. இதில் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கலந்து கொள்ளவுள்ளார்.

> கல்வி அமைச்சின் செயலாளருடன் தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட பேச்சு, இசற் புள்ளி விவகாரம், நியமனங்கள், இடமாற்றங்கள் தொடர்பிலும் இதில் கலந்துரையாடப்பட வுள்ளன.

வன்னியிலிருந்து யாழ்.மாவட்டத்துக்கு இடமாற்றம் பெறவுள்ள 104 ஆசிரியர்களின் புதிய பாடசாலைத் தெரிவு, இடமாற்றம் வழங்கப்படாதுள்ள உடற்கல்வி ஆசிரியர்கள், 2013 ஆம் ஆண்டில் இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையிலான சேவையை நிறைவு செய்து வன்னியிலிருந்து யாழ்.மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ள ஆசிரியர்கள், தேசிய கல்வி நிறுவனத்தால் கல்வி மாணிப்பரீட்சைக்குத் தோற்றி இதுவரை விசேட லீவு கிடைக்கப்பெறாத ஆசிரியர்கள், கஷ்ட, அதிகஷ்டப் பிரதேச ஊக்குவிப்புப் படிகள் நிறுத்தப்பட்ட ஆசிரியர்கள் தொடர்பான பிரச்சினைகள் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப் படவுள்ளன.

இந்த ஆசிரியர்கள் தமது விவரங்களை அன்றைய தினம் வழங்குவது அவசியம்.

கல்வி அமைச்சின் செயலாளருடன் தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட பேச்சு, இசற் புள்ளி விவகாரம், அதிபர்கள், கல்வி அதிகாரிகளின் முறையற்ற நியமனங்கள், இடமாற்றங்கள் தொடர்பிலும் இதில் கலந்துரையாடப்படவுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## தெல்லிப்பழை துர்க்காதேவிக்கு நாளை கொடியேற்றம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாள்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

திருவிழாக் காலத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை திருமஞ்சத் திருவிழாவும், எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை சப்பறத்திருவிழாவும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

தினமும் அதிகாலை 5.30 மணிக்கு திருவனந்தல் பூசையுடன் ஆரம்பமாகி ஸ்நபன அபிஷேகம், காலை சந்தி பூசை, ஸ்தம்ப பூசை வசந்த மண்டபப் பூசை என்பன காலைப் பூசையாகவும், மாலை 4 மணிக்கு சாயரட்சைப் பூசையுடன் ஆரம்பமாகி ஸ்தம்பப் பூசை, வசந்த மண்டபப் பூசை, அர்த்தசாமப் பூசை என்பன மாலை பூசையாகவும் இடம்பெறும். (ம-36)

## நகரசபை உறுப்பினர்களுக்கும் அபிவிருத்தி நிதி ஒதுக்க வேண்டும் கூட்டத்தில் கோரிக்கை

தென்மராட்சி,ஒக 17

நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருடாவருடம் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு செய்வது போல நகரசபை உறுப்பினர்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

இந்த நிதி மூலம் தமது வட்டாரப் பகுதியில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடியும். சாவகச்சேரி நகரசபை கூட்டத்தில் உறுப்பினர் ந.திருக்குமரன் மேற்கண்ட முன்மொழிவைச் சமர்ப்பித்தார்.

இதற்குப் பதிலளித்த தலைவர்; பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கப்படுவதில்லை.

இருப்பினும் கடந்த ஜனவரி மாத கூட்டத் தீர்மானத்திற்கமைய சபைக்கு கிடைக்கும் வருமானங்களின் உதவியுடன் மாதாந்தம் இரு வீதிகள் வட்டார ரீதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு வேலைத் திட்டமும் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட தொகையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். (ம-9)

## சாவகச்சேரி நகர சபை கூட்டத்துக்கு ஊடகவியலாளருக்கும் அழைப்பு

தென்மராட்சி,ஒக. 17

சாவகச்சேரி நக்ராட்சி மன்றத்தின் மாதாந்தக் கூட்டத்துக்கு ஊடகவியலாளர்கள் உத்தியோக பூர்வமாக அழைக்கப்பட்டனர்.

நகர சபையால் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் ஊடகங்களில் வெளியாவதில்லை. இதனால் ஒவ்வொரு கூட்டத்துக்கு ம் ஊடகவியலாளர்கள் அழைக்கப்பட வேண்டுமென உறுப்பினர் ந.திருக்குமரன் கடந்த மாதக் கூட்டத்தில் பிரேரணை சமர்ப்பித்திருந்தார்.

இதனையடுத்து நேற்று நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை உத்தியோகபூர்வமாக ஊடகவியலாளருக்கு அழைப்பு விடுத்திருந்தார். (ம-9)

## சாவகச்சேரி பொதுச் சந்தையின் சுகாதாரக் கேட்டை நீக்க முயற்சி

தென்மராட்சி,ஒக. 17

சாவகச்சேரி நகர சபையின் பொதுச் சந்தை வளாகத்தின் மறைவான இடங்களில் சுகாதார சீர்கேட்டிடை மேற்கொள்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

பொதுச் சந்தை வளாகத்தில் கட்டணக் கழிப்பறைகள் இருந்த போதிலும் அங்கு வியாபாரத்தில் ஈடுபடுவோரின் வேண்டுகோளுக்கிணங்க மலசல கூடம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் சந்தையில் வியாபாரிகள் உட்பட பொது மக்கள் வளாகத்தில் காணப்படும் மறைவிடங்களை அசுத்தப்படுத்தி வருகின்றனர்.

இதனை அவதானித்த பலர் சந்தையில் இடம்பெறும் சுகாதாரச் சீர்கேடு தொடர்பாக முறையிடுகின்றனர்.

இதனைத் தடுக்க சபையினர் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென உறுப்பினர் த.சுதர்சன் கூட்டத்தில் முன்மொழிவைச் சமர்ப்பித்தார்.

இந்த முன்மொழிவுக்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்ததையடுத்து இவ்வாறான சுகாதாரச் சீர்கேட்டில் ஈடுபடுவோர் மீது சட்டநடவடிக்கை எடுப்பதென முடிவு செய்யப்பட்டது. (ம-9)

## கனகன்புளியடி– சாவகச்சேரி வீதியைத் திருத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக. 17

நுணாவில் கனகன்புளியடி வீதியிலிருந்து சாவகச்சேரி நகருக்கு செல்லும் 400 மீற்றர் நீளமான வீதி நீண்டகாலமாக திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்

சாவகச்சேரி நகர சபை எல்லைக்கு உட்பட்ட குறித்த வீதியால் தினமும் அதிக எண்ணிக்கையான வாகனங்கள் பயணிக்கின்றன.

இந்த வீதியின் புனரமைப்பு தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை கவனத்தில் எடுக்காதது ஏன் என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேசத்தின் பிரதான வீதிகள் மட்டும் அபிவிருத்தி எனும் போர்வையில் மெருகூட்டல் செய்துவரும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, பொதுமக்களின் பாவனைக்கு அதிகமாக உள்ள குறித்த வீதியின் புனரமைப்பு தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

இனிவரப் போகும் மழைக் காலத்தில் குறித்த வீதி வெள்ளக் காடாகவே காட்சியளிக்கும். அந்தளவுக்கு கற்கள் வீதியோரங்களில் ஒதுக்கப்பட்டு குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

மட்டுவில் மருதடிப்பிள்ளையார் ஆலயம், மட்டுவில் துர்க்கையம்மன் ஆலயம், சாவகச்சேரி நகர் ஆகியவற்றுக்கு குறித்த வீதியையே மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே வீதிப் பாவனையாளர் தற்போது எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய வீதியைப் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (ம-14)

# மீளக்குடியமர்ந்து கஷ்டப்படும் இரணைஇலுப்பைக்குள மக்கள்

வவுனியா, ஓக.17

மீளக்குடியமர்த்தப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் தமக்குரிய அடிப்படை வசதிகள் எவையும் செய்து தரப்படவில்லை என்று இரணை இலுப்பைக் குள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மன்னார் மடுப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த இந்தப் பகுதி வவுனியா நகரப்பகுதியிலிருந்து சுமார் 35 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

இங்குள்ள மக்கள் கூலித் தொழிலையும் விவசாயத்தையுமே மேற்கொண்டு வருகின்றனர். மேலும் இந்தக் கிராமத்திலுள்ள வீதிகள் நீண்டகாலமாகச் செப்பனிடப்படாமல் குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன. இதனால் சீரான போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலையே காணப்படுகின்றது.

கடந்த காலப் போர் நடவடிக்கைகளின் போது இடம் பெயர்ந்து மனிக்பாம் நலன் புரி நிலையங்களில் தங்கியிருந்த பின்னர் 2010 ஆம் ஆண்டு சுமார் 100 குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வு செய்யப்பட்டனர். மீளக்குடியமர்வு செய்யப்பட்ட போது அமைத்துக் கொடுக்கப்பட்ட தகரக் கொட்டகைகளிலேயே அவர்களுடைய வாழ்க்கை நகர்கிறது. இதனால் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெப்பத்தினால் பலர் பல்வேறு நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர்.



இங்குள்ள மக்கள் கூலித் தொழிலையும் விவசாயத் தையுமே மேற் கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதி மக்களுக்கான அடிப்படை வசதிகளான மலசலகூடம், குடிதண்ணீர், நிரந்தர வீடுகள் மற்றும் மின்சாரவசதிகள் என்பன இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை.

இவர்களுக்குப் பின்பு குடியமர்த்தப்பட்ட அயற் கிராமமாகிய காக்கையன் குளத்தில் முஸ்லிம் மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதோடு மின்சார வசதி உட்பட அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் தமக்கு ஏன் வசதிகள் செய்து தரப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

போர் காலத்துக்கு முன்னர் இந்தப் பகுதியில் சுமார் ஆயிரம் குடும்பங்கள் வசித்து வந்த போதும் தற்போது பூசாரிக்குளம், மண்கிண்டி, வவுனியன் பெரியன்குளம் ஆகிய கிராமங்களில் 100 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப் பட்டுள்ளன. ஆனால் இந்தக் கிராமத்திலிருந்து இடப் பெயர்ந்து ஏனைய இடங்களில் வசதி வாய்ப்புக்களின்றி வசித்து வருபவர்கள் அரச அதிகாரிகளின் உதவியுடன் மீள் குடியமர்வதற் கெனப் பதிவுசெய்துநிவாரணப் பொருள்களைப் பெற்று வருகின்றனர்.



இந்த நிலையில் அரசினால் இந்தப் பகுதியில் மீளக்குடியமர்த்தப்பட்ட 100 குடும்பங்களுக்கும் நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. ஆனால் அந்த அரச அதிகாரிகள் தம்மிடம் 450 குடும்பங்கள் மீள்குடியமர்வுக்குப்பதிவு செய்துள்ளன. அவர்களுக்கும் வீட்டு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என மறுத்ததால் அத்திட்டம் வேறு ஒரு பகுதிக்குச் சென்றுவிட்டது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சுமார் 500 குடும்பங்களின் நலன்கருதி தமக்கான அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-எ-400)

## அரச பஸ் வளாகத்தில் தனியாரின் வாகனங்கள்

### தண்டம் விதித்தனர் பொலிஸார்

மன்னார், ஓக.17

மன்னார் அரச பஸ் வளாகத்தில் நுழைந்து போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் நிறுத்தப்படும் வாகனங்களுக்குத் தண்டப் பணம் விதிக்கப்படவுள்ளது.

இங்கு தனியார் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் அரச பஸ்களுக்குப் பல்வேறு சிரமங்கள் ஏற்படுவதாக ஏற்கனவே சுட்டிக் காட்டப் பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த 14 ஆம் திகதி அரச பஸ் தரிப்பிடத்தினுள் தனியார் வாகனங்கள் பல மணித்தியாலங்களாக நிறுத்தப்பட்டிருந்ததால் அரச பஸ்கள் சிரமங்களை எதிர்நோக்கியதாக மன்னார் போக்குவரத்துப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து அங்கு விரைந்த போக்குவரத்துப் பொலிஸார் இங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களுக்கு அதேயிடத்தில் வைத்துத் தண்டம் விதித்தனர், பற்றுச்சீட்டுக்களையும் வழங்கினர்.

இனிமேல் தனியார் வாகனங்கள் அரச பஸ் தரிப்பிடத்தினுள் நிறுத்தி வைக்கப்படுகின்றமை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க மடு அன்னையின் ஆவணி மாதத் திருவிழாவையொட்டி நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் அரச பஸ்கள் இங்கு வந்துள்ளதால் பெரும் இட நெருக்கடியை எதிர்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)

## வன்னிப் பகுதி தபாலகங்களின் கட்டுமானம் விரைவுபடுத்தப்படும்

வவுனியா, ஓக.17

வன்னிப்பகுதியில் அமைக்கப்பட்டு வரும் தபாலகங்களில் கட்டுமானப்பணிகளை விரைபடுத்துதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனத் தபால் மா அதிபர் றோகண அபயரட்ண தெரிவித்துள்ளார்.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட பரந்தன், மாங்குளம், பளை ஆகிய தபாலகங்களின் கட்டுமானப்பணிகள் யாவும் இடை நடுவில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

இந்தத் தபாலக் கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் இந்த ஆண்டுக்குள் விரைவுபடுத்துவதற்குத் துரித ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் தொடர்பு கொண்டு இந்தக் கட்டடங்களின் கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தபால் மா அதிபர் உறுதியளித்ததாக வவுனியாப் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.புஸ்பநாதன் தெரிவித்தார்.

இதேசமயம் யாழ்ப்பாணம் சென்றிருந்த தபால்மா அதிபர் வன்னிப் பகுதிக்கும் வருகை தந்து அப்பகுதியில் உள்ள தபால் சேவை குறித்தும் ஆராய்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-17)

## தமிழ்ப் பிரதேச சபைக் கட்டடத்தை திறந்து வைப்பார் மஹிந்த இன்று

வவுனியா, ஓக.17

வவுனியா, நெளுக்குளம் நேரியகுளம் வீதியில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கான புதிய கட்டடம் இன்று ஜனாதிபதியால் திறந்து வைக்கப்படவுள்ளது.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத் தலைவர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

4 கோடி ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட இந்தக் கட்டடத்துக்கான நிதி உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் கிடைக்கப்பெற்று பயன்படுத்தப்பட்டுள்ளது.

படையினரும், பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர். அருகில் உள்ள கிராம சேவகர் காரியாலயத்திலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. புதிய கட்டடத்தைப் பார்க்க உள்செல்வதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(க-எ-402)

## குளத்து நீரைத் திறந்து விடப்பட்டதால் 3,000 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு

வவுனியா, ஓக.17

குளங்களின் புனர்நிர்மாணப் பணிகளுக்கெனத் திட்டமிடப்படாத வகையில் நீரைத் திறந்து விட்டதால் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளமுடியாது போயுள்ளதாக இரணைஇலுப்பக்குள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மன்னார் மடுப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள இரணை இலுப்பைக்குளம் பிரதேசத்தில் 10 இற்கும் மேற்பட்ட பெரிய குளங்கள் உட்பட 87 குளங்கள் உள்ளன. இதில் 34 குளங்களிலுள்ள நீரைப் பயன்படுத்தி அந்தப் பகுதி விவசாயிகள் சிறுபோக பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வந்தனர்.

குளங்களின் திருத்த வேலைகளுக்கென ஒரே நேரத்தில் குளங்களின் நீர் திறந்து விடப்பட்டதாலும், தற்போதைய கடும் வறட்சி காரணமாகவும் அனைத்துக் குளங்களும் வற்றிக் காணப்படுகின்றன.

இதனால் 3 ஆயிரம் ஏக்கர் நிலத்தின் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக இரணைஇலுப்பைக்குள கமநல சேவைகள் திணைக்களப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

குளங்களில் நீர் வற்றியுள்ளதால் அந்தப் பகுதியிலுள்ள குடிதண்ணீர்க் கிணறுகளும் வற்றுவதால் அந்தப் பகுதி மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். அத்துடன் கால்நடைகளும் தண்ணீரின்றி அலைந்து திரிகின்றன.

தற்போது முறிப்புக்குளம், வெளிக்குளம், வவுனியன் குளம், வன்னியன் பெரிய குளம், வேலன்குளம், சின்னவன் குளம் உட்படப் பலகுளங்களில் புனரமைப்புப் பணிகள் பல லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் கலிங்குகள், துரிசுமற்றும் அணைக்கட்டுக்கள் என்பன இதுவரை சீராகப் புனரமைக்கப்படவில்லை.

இந்தப் புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படாது விட்டால் பருவமழைக்குக் குளங்கள் நிரம்பி வழியும் சூழ்நிலையில் தமது குடிமனைகளுக்குள் வெள்ளம் உட்புகக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என்று இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்தக் குளப் புனரமைப்புப் பணிகள் திட்டமிடப்படாத வகையில் மேற்கொள்ளப்படுவதால் பெருமளவான நிதி வீண்விரயம் செய்யப்படுவதாகக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.(க-எ-400)

## வவுனியா விமானப் படைத்தளம் தீவிர கண்காணிப்பில், படைகள் குவிப்பு

### ஜனாதிபதியின் வருகையையொட்டி பாதுகாப்புக் கெடுபிடி

வவுனியா, ஓக.17

வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள விமானப் படைத்தளத்தை பலப்படுத்தும் செயற்பாட்டில் விமானப் படையினர் கடந்த சில நாள்களாக ஈடுபட்டுள்ளனர். பல ஏக்கர் பரப்பளவைக் கொண்ட இந்த விமானப்படைத்தளம் கடந்த மூன்றாண்டுக்கு முன்னர் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானமை குறிப்பிடத்தக்கது.

இன்று வவுனியா வரும் ஜனாதிபதி விமானப் படைத் தளத்துக்கும் வருகை தரவுள்ளார். அதனையொட்டி புதிதாகக் காவலரண்கள் அமைக்கப்பட்டு மேலதிக படைகள் குவிக்கப்பட்டுள்ளன. விமானப்படைத்தளத்துக்கு அருகில் வாகனங்கள் தரித்து நிற்கவோ, நிறுத்தவோ விமானப் படையினர் அனுமதி மறுத்து வருகின்றனர்.

சந்தேகத்துக்கு இடமாக வாகனங்கள் இதனை அண்மித்துச் சென்றலோ அல்லது யாராவது நடமாடினாலோ உடனடியாக அந்த இடத்திற்கு வருகை தரும் புலனாய்வுப் பிரிவினர் விசாரிக்கும் சம்பவங்கள் தற்போது அதிகரித்துள்ளன.

விமானப்படைத்தளத்துக்கு அருகில் உள்ள காணிகள் மற்றும் சுடலைகளில் நுழைவதாயின் முன்கூட்டிய அனுமதியைப் பெறுமாறு படையினர் அறிவித்தல் வழங்கி வருகின்றனர். மேலும் விமான ஒடு பாதைகள் செப்பனிடப்பட்டுப்புதிய விமானங்களும் அங்கு கொண்டு வரப்பட்டுள்ளன. அவ்விமானங்களை பாதுகாக்கவென விமான எதிர்ப்புப் பீரங்கிகளும் எதிரிகளின் விமானங்கள் உள்நுழைவதை அவதானிக்கும் நவீன கருவிகளும் பொருத்தப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி விமானப்படைத்தளத்தை பார்வையிட உள்ளமையால் அங்கு துப்புரவுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காவல் கடமைகளுக்காக பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

போர் நிறைவடைந்த நிலையில் இப்பாதுகாப்பு ஏற்பாடுகள் அயலில் உள்ள மக்களிடம் அச்சநிலைமையைத் தோற்றுவித்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. (க-402)



அக்கராயன் அணைக்கட்டு வீதியில் பாலமொன்று புனரமைக்கப்பட்டு வருகின்றது. (க-18)

# தனியார் வைத்திய நிலையங்களில் சுகாதாரம் குறித்து நடவடிக்கை

**திண்மக் கழிவகற்றல், திரவக் கழிவு பரிகரிப்பு முறை, தொற்று நீக்கும் செயற்பாடுகள், சுற்றாடல் போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டு வருகின்றன.**

யாழ்ப்பாணம், ஓக.17

யாழ்.மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள தனியார் வைத்திய நிலையங்களில் சுகாதாரச் செயற்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ளடங்கும் 9 பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளிலும் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் அ.எ.ஞானசோதி தலைமையில் பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அடங்கிய குழு தனியார் வைத்திய நிலையங்களுக்குச் சென்று அங்குள்ள அடிப்படை சுகாதார நிலைமைகள் குறித்து ஆராய்ந்து வருகிறது.

திண்மக் கழிவகற்றல், திரவக் கழிவு பரிகரிப்பு முறை, தொற்று நீக்கும் செயற்பாடுகள், சுற்றாடல் போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டு வருகின்றன.

தனியார் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் நோய் நிலை பற்றிய தொற்றுநோய் தடுப்புச் செயற்பாடுகளில் அவதானமாக இருப்பதுடன் தொற்று நோய் பதிவேடு பேணப்பட வேண்டும் எனவும் உடனுக்குடன் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் அ.எ.ஞானசோதி தெரிவித்துள்ளார். (ம-7)

## நயினாதீவு ஆலயச் சூழலில் பிளாஸ்ரிக் திண்மக் கழிவுகள்

யாழ்ப்பாணம், ஓக.17

நயினாதீவு ஆலயச் சூழல் பிளாஸ்ரிக் திண்மக் கழிவுகளால் நிரம்பி வழிகின்றது.

இவற்றை உடன் அகற்றி பிரதேச சூழல் மாசுபடுவதைத் தவிர்க்க வழிவகுக்குமாறு நயினாதீவு ஆலயச் சூழல் பிரதம நிறைவேற்று அதிகாரி கெ.தவராசா வேலணை பிரதேச சபைத் தலைவரிடம் கேட்டுள்ளார்.

நயினாதீவில் குவிந்துள்ள திண்மக் கழிவு தொடர்பாக மேலும் கூறப்பட்டதாவது:-

தினமும் நயினாதீவு நாகபூஷணி ஆலயத்துக்கு 3 ஆயிரம் முதல் 4 ஆயிரத்து 500 இந்து, முஸ்லிம், சிங்கள யாத்திரிகர்கள் வருகை தருகின்றனர்.

இவ்வாறு வருகை தரும் யாத்திரிகர்கள் தினமும் 500 முதல் ஆயிரத்துக்கும் அதிகமான போத்தல் தண்ணீர் கான்களை பாவித்த பின்னர் வீதிகளில் வீசி விட்டுச் செல்கின்றனர்.

இதனால் பெருமளவிலான பிளாஸ்ரிக் திண்மக் கழிவுகள் ஆலயச் சூழலில் குவிந்துள்ளன.

நயினாதீவு உப அலுவலக பொறுப்பதிகாரியூடாக பிளாஸ்ரிக் திண்மக் கழிவுகளை அகற்றித் தருமாறு கூறப்பட்டுள்ளது.

அத்துடன் குப்பைகளை அகற்றுவதற்கு ஒரு கை வண்டியையும் வழங்கி உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-50)

## கதிர்ப்பட நிபுணத்துவ சேவை

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கதிர்ப்பட விசேட வைத்திய நிபுணத்துவ சேவைகள் வாரத்தில் நான்கு நாள்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த வைத்திய நிபுணத்துவ சேவைக்கு மருத்துவர் திருமதி நளினி ராஜேந்திரா சுகாதாரத் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் வாரந்தோறும் திங்கள், புதன், வியாழன், சனி ஆகிய நாள்களில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையிலும் செவ்வாய், வியாழன் ஆகிய நாள்களில் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் மேலதிக சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றார். (ம-8)

## டெங்கு ஒழிப்பு சிரமதானம்

தென்மராட்சி, ஓக.17

அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவில் உள்ள ஸ்ரீகணேசா வித்தியாலயத்தில் டெங்கு ஒழிப்புச் சிரமதான நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

கொடிகாமம் பொலிஸாரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் இணைந்து சிரமதானம் மூலம் பாடசாலை வளாகத்தைத் துப்புரவு செய்யவுள்ளனர். குடியிருப்பாளர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கேட்டுள்ளது.

பாடசாலையின் பௌதிக வளங்கள் அழிந்துள்ள போதிலும் மீளக்குடியமர்ந்த மாணவர்களின் நலன்கருதி கல்வி வலயத்தால் தற்காலிக வகுப்பறைத் தொகுதி அமைக்கப்பட்டு பாடசாலை இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ம-9)

## பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவி

தென்மராட்சி, ஓக.17

தென்மராட்சிப் பிரதேசத்தில் குடும்பத் தலைவரை இழந்த 3 பிள்ளைகளுக்கு மேற்பட்ட பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களுக்குச் சுயதொழில் உதவி வழங்கப்படவுள்ளன.

சுயதொழிலில் ஈடுபடவுள்ள இந்தக் குடும்பத் தலைவிகளைத் தத்தமது பிரிவு கிராம அலுவலரின் பரிந்துரையுடன் இன்று வெள்ளிக்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் அமைச்சால் இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன என்று கூறப்பட்டது. (ம-9)

## மந்திகை கண்ணகை அம்மன் ஆலய உண்டியல் உடைப்பு

வடமராட்சி, ஓக. 17

மந்திகை கண்ணகை அம்மன் கோயில் உண்டியல் இரவு வேளையில் இனந்தெரியாதவர்களால் உடைக்கப்பட்டு அதற்குள் இருந்த பணம் திருடப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை இரவு ஆலயத்தின் வடக்குப்புற கதவுகளை உடைத்து உட்சென்ற இனந்தெரியாதோர் இந்தத் திருட்டை நடத்திவிட்டு கோயிலின் நுழைவாயிலான பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள உண்டியலையும் உடைத்துள்ளனர்.

எனினும் அது உடைக்க முடியாமல் போகவே அதனை விட்டுச் சென்றுள்ளனர்.

## அனுமதியின்றி தேக்குமரம் சாரதிக்கு மறியல்

அனுமதிப்பத்திரமின்றி தேக்குமரக் குற்றிகள் ஏற்றி வந்த வாகனத்தை கொடிகாமம் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர். வாகனத்துடன் அதன் சாரதியையும் நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்தியபோது சாரதியை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ம-9)

## பாம்புக்கடி இனங்கண்டு உடன் மேலதிக சிகிச்சைக்கு

தென்மராட்சி, ஓக.17

படுக்கையில் வைத்து பாம்பால் கடியுண்டது தெரியாத நிலையில் நெஞ்சு வலி ஏற்பட்டதாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பாம்பு கடித்தமை கண்டுபிடிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

மந்துவில் கிழக்கைச் சேர்ந்த வேலன் கிருஷ்ணன் (வயது-75) என்னும் வயோதிபருக்கு நெஞ்சு வலி மற்றும் கதைக்க முடியாத நிலை ஏற்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் நேற்று முன்தினம் காலை அனுமதிக்கப்பட்டார்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இதே போன்ற நிலையில் அனுமதிக்கப்பட்ட இடைக்குறிச்சியைச் சேர்ந்த குடும்பப் பெண்ணுக்கு சிகிச்சை வழங்கியபோது மரணமடைந்து உடற்கூற்றுப் பரிசோதனையில் விஷம் கடித்திருந்தமை தெரியவந்தது.

வயோதிபரும் அதே நிலையில் அனுமதிக்கப்பட்டதால் வைத்திய அதிகாரிகள் உடலைப் பரிசோதித்த போது பாம்பு கடித்த அடையாளம் இருந்ததைக் கண்டு பிடித்தனர். இதனால் உடனடியாக அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-9)

## நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய மூடப்பட்டது 'பார்'

### வல்வை நகரசபைத் தலைவர் தெரிவிப்பு

வடமராட்சி, ஓக.17

வல்வெட்டித்துறை, தெணியம்பை வீதியில் கடந்த 60 வருடங்களுக்கு மேலாக இயங்கி வந்த மதுபான விற்பனைநிலையம் ('பார்') யாழ். மேல் நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைவாக நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது என்று வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

பல வருடங்களாக பொது மக்களதும், மாணவர்களதும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் குடிமனைகள், பாடசாலை, தனியார் கல்வி நிறுவனம், பால்சாலை, வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்து ஆகியவற்றுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் குறித்த மதுபானசாலை இயங்கி வந்தது.

இந்த நிலையில் கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதியுடன் இந்த மதுபான சாலை மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதே போன்று வீடுகளிலும், பொது இடங்களிலும், சட்டவிரோதமாக மது மற்றும் கசிப்பு போன்ற தீங்கு விளைவிக்கும் குடிவகைகளையும் பொது மக்களின் சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்கும் வகையில் சட்டவிரோதமாக வீடுகளில் இறைச்சி வகைகளை விற்று வருபவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொலிஸாரிடமும் நகரசபை, சுகாதாரப் பகுதியினரிடமும் மக்கள் கோரிக்கைகளை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## பிரேத அறை குளிரூட்டிகள் திருத்தம்

வடமராட்சி, ஓக. 17

கடந்த சில வாரங்களாக பழுதடைந்திருந்த பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை பிரேத அறை குளிரூட்டிகள் ஒரு லட்சத்து 43 ஆயிரம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசால் சுமார் 6 வருடங்களுக்கு முன்னர் இவை அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தன.

இந்தக் குளிரூட்டிகள் பழுதடைந்ததை அடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பயனாகச் சுகாதாரத் திணைக்களத்தின் நிதியிலிருந்து இவை திருத்தி அமைக்கப்பட்டுள்ளன என்று பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டி.விநோதன் தெரிவித்தார். (ம-8)



சுன்னாகம் வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்தில் ஒலியியல் நூலகம் (ஓடியோ லைபிறரி) அண்மையில் சின்மய மிஷனைச் சேர்ந்த ஜாக்கிரத் சைத்தன்யவால் திறந்து வைக்கப்பட்டது.

## மறவன்புலோ வீதியில் இளைஞர் அட்டகாசம்

தென்மராட்சி, ஓக.17

நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் - மறவன்புலோ வீதியில் இளைஞர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதால் மாணவிகளும் பெண்களும் பயணிக்க அச்சம் கொள்கின்றனர்.

வீதியில் உள்ள பற்றை மறைவுகளில் மறைந்திருக்கும் இளைஞர்கள் வீதியில் வரும் மாணவிகளினதும் இளம் பெண்களினதும் கைகளைப் பிடித்து இழுப்பதுடன் அங்க சேட்டைகளும் புரிகின்றனர் என்று கூறப்படுகிறது.

இந்த வீதி வயல்களினூடாகச் செல்வதால் பொது மக்கள் நடமாட்டம் மிகவும் குறைவாகவே உள்ளது.

இந்த நிலையில் மது போதையில் காணப்படும் இளைஞர்கள் இங்கு அட்டகாசம் புரிவதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்கள் சாவகச்சேரிக்குச் செல்வதற்குக் குறுகிய பாதை என்பதால் மாணவர்களும் பொதுமக்களும் இந்த வீதியைப் பயன்படுத்தி வந்தனர்.

இளைஞர்களின் நடவடிக்கையால் மாணவிகளும் இளம் பெண்களும் தற்போது தனங்களப்பு ஊடாகத் தமது தேவைகளுக்குச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## நீச்சல் பயிற்சியின்போது குளத்தில் மூழ்கி மாணவன் சாவு

சென்னையில் உள்ள பத்மசேஷாத்ரி பாடசாலையில் 4 ஆம் வகுப்பு படித்து வந்த ரஞ்சன் என்ற மாணவன், நேற்று நீச்சல் பயிற்சி எடுத்தபோது குளத்தில் மூழ்கி உயிரிழந்தார்.

இதனால் அந்தப் பாடசாலையை ரஞ்சனின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

4 ஆம் வகுப்பு படிக்கும் மாணவன் ரஞ்சனுடன் 26 மாணவர்கள் நீச்சல் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தநிலையில் இந்த மாணவன் மட்டும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான். இதற்கு நீச்சல் பயிற்சி ஆசிரியரின் அலட்சியப் போக்கே காரணம் என்று பெற்றோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.



ஜம்மு-காஷ்மீர் மாநிலம் ஜோரி மாவட்ட வனப்பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த இடத்தில் ஏராளமான ஆயுதங்களை பாதுகாப்புப்படையினர் கைப்பற்றி பார்வையிடுகின்றனர்.

55 ஆயிரம் குழந்தைகள் எங்கே?

## மத்திய, மாநில அரசுகளுக்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்

இந்தியாவில் சுமார் 55 ஆயிரம் குழந்தைகள் காணா மல் போனது குறித்து பதில் அளிக்குமாகு மத்திய அரசுக்கும், அனைத்து மாநில அரசுகளுக்கும் நோட்டீஸ் அனுப்ப உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காணாமற் போன குழந் தைகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று தொடரப்பட்ட பொது நலன் மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதி அப்தாப் அலாம் மத்திய, மாநில அரசுகள் இதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை குறித்து பதிலளிக்க வேண்டும் என்று கூறினார்.

இந்தியாவில் இதுவரை 55 ஆயிரம் குழந்தைகள் காணாமற் போயுள்ளதாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதுவரை இந்தக்குழந் தைகளின் நிலைமை குறித்து எந்த விவரமும் இல்லை. காணாமற் போகும் குழந்தைகள் பற்றி வரும் முறைப்பாடுகள் மீது உரிய விசாரணை நடத்த பொலிஸ் நிலையங்கள் தவறிவிட்டன என்றும், கடத்திச் செல்லப்படும் குழந்தைகளின் உடல் பாகங்கள் பிடுங்கப்பட்டு அவை பிச்சை எடுக்கும் கொடுமைக்கு உட்படுத்தப் படலாம் அல்லது கடத்தல், விபசாரம், தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படலாம் என்று பொது நலன் மனுவை தாக்கல் செய்த சர்வ மித்ரா தனது மனுவில் கூறியுள்ளார்.

## மம்தாவின் முகப்புத்தகத்தில் மர்ம மனிதர்கள் ஊடுருவல்



மம்தா பானர்ஜியின் பேஸ்புக் வலைத்தளத்தில் சில மர்ம மனிதர்கள் ஊடு ருவி மம்தா, மாவோ இயக்கத்தைச் சேர்ந்தவரை போன்று செய்தியை பரப்பியுள்ளனர். இதனையடுத்து அவர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

மேற்கு வங்க முதல்வரும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவருமான மம்தா பானர்ஜி, வலைத்தளத்தில் தனியாக ஒரு பகுதியை (பேஸ்புக்) ஆரம்பித்துள்ளார். அந்த வலைத்தளப் பகுதியில் ஒரு மர்ம மனிதன் ஊடுருவி, மாவோ இயக்கத்தை சேர்ந்தவர் மம்தா பானர்ஜி என்று ஒரு குறிப்பை புகுத்தியுள்ளார். அதில், என்னால் வேதனைக்கு ஆளாக்கப்பட்டவர்களிடம் மன்னிப்பு கோருகிறேன். இதற்கெல்லாம் நிச்சயமாக ஈடுசெய்வேன் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க வரலாற்று நூலின் 2ஆம் பதிப்பு இன்று வெளியீடு

சென்னை, ஓக. 17

முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் எழுதிய திராவிட இயக்க வரலாறு 2ஆம் பதிப்பு நூலை தி.மு.க. தலைவர் கருணாநிதி இன்று வெளியிட்டு வைக்கவுள்ளார்.

தி.மு.கவின் முன்னணி தலைவர்களில் ஒருவராகவும் தி.மு.க. தலைவர் கருணாநிதியின் நெருங்கிய உறவினராகவும், முன்னாள் மத்திய அமைச்சராகவும் இருந்தவர் முரசொலி மாறன். இவரது 79 ஆவது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படவுள்ளது.

# வதந்தியால் வெளியேறிய பெங்களூர் மக்கள்

பெங்களூர், ஓக.17

வட மாநிலத்தவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதாகவும் 200 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்து விட்டதாகவும் நேற்று முன்தினம் பெங்களூரில் வதந்தி பரவியது. இதைத் தொடர்ந்து பெங்களூர் நகரில் வசித்து வரும் 5 ஆயிரத்துக்கும் அதிகமான வட கிழக்கு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் திடீரென ஒரே நேரத்தில் பெங்களூர் நகரை விட்டு ரயில் மூலம் வெளியேறினர். இதனையடுத்து அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கர்நாடக மாநில முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டரை பிரதமர் மன்மோகன்சிங் தொடர்பு கொண்டு விவரங்களைக் கேட்டறிந்தார்.

காட்டுத் தீயாக வதந்தி

கர்நாடக மாநிலத்தில் வாழும் வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்தோர் மீது எதிர்வரும் 20 ஆம் திகதி இடம்பெறும் ரம்ழான் நோன்புக்குப் பின்னர் அஸாமில் நடத்தப்பட்டது போன்று மிகப்பெரும் தாக்குதல் நடத்தப்படும் என்ற வதந்தி நேற்று முன்தினம் திடீரெனப் பரவியது. கைபேசி குறுந்தகவல், பேஸ்புக், டுவிட்டர் என்பவற்றில் இந்த வதந்தி காட்டுத் தீயாகப் பரவியது.

இதையடுத்து தங்கள் உடைமைகளுடன் ஒரே நேரத்தில் பெங்களூர் ரயில் நிலையத்தில் பல்லாயிரக்கணக்கானோர் குவிந்தனர். கிடைக்கிற ரயிலில் ஏறி எப்படியாவது சொந்த மாநிலத்துக்குப் போய்விட வேண்டும் என்ற தவிப்பில் அனைவரும் இருந்தனர். அலை அலையாய் ஆயிரக் கணக்கில் கூட்டம் கூட்டமாக ரயில் நிலையத்தை இரவு முழுவதும் முற்றுகையிட்டுக் கொண்டே இருந்தனர்.




இதனால் வதந்திகளை நம்ப வேண்டாம். உரிய பாதுகாப்புத் தரப்படும் என்று வடகிழக்கு மாநிலத்தவரிடம் முதலமைச்சர் ஜெகதீஷ் ஷெட்டர் கேட்டுக் கொண்டதும் பயனளிக்கவில்லை.

பிரதமர் விசாரணை

இந்த நிலையில், பிரதமர் மன்மோகன் சிங், உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷின்டே ஆகியோர் கர்நாடக முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டரிடம் புதன்கிழமை இரவு தொடர்பு கொண்டு, வட கிழக்கு மாநில மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும்படி கேட்டுக் கொண்டனர். மேலும் அஸாம் முதல்வர் தருண் கோகாயிடம் கர்நாடக முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர் பேசியுள்ளார்.

## அஸாமில் மீண்டும் கலவரம்

கவுகாத்தி, ஓக17

அஸாம் மாநிலத்தில் மீண்டும் சிலர் வாகனங்களுக்குத் தீ வைத்து கலவரத்தை ஆரம்பித்துள்ளனர்.

பாக்சா மாவட்டத்தில் காந்திபாரி என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு பாக்சாவிலிருந்து ராங்கியா மாவட்டத்துக்கு ஒரு கார் வந்து கொண்டிருந்தது. அந்தக் காரை அடையாளம் தெரியாதவர்கள் தாக்கி எரித்ததால், அந்த காரை செலுத்தி வந்த சாகிதுல் உசேன் என்பவர் காணாமற் போனார். இதைத் தொடர்ந்து அங்குள்ளவர் கள் உதியானா சவுக் பகுதி நெடுஞ்சாலையை மூடி விட்டனர்.

இந்தநிலையில், நேற்றுக் காலை அந்தச் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். கவுகாத்தி சென்ற பஸ்ஸை பாத்குச் சியிலும், கேகாஹாத்தி என்ற இடத்தில் இருந்த மரப் பாலத்தையும் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்ட சிலர் எரித்து விட்டனர். இதுதொடர்பாக விசாரணை மேற்கொள்ள பொலிஸ் மற்றும் அரசு உயர் அதிகாரி கள் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர்.

## திருப்பதி அரச ஆஸ்பத்திரியில் குழந்தைகள் 11 பேர் உயிரிழப்பு

### பெற்றோர்கள் கொந்தளிப்பு

ஆந்திரா மாநிலம், திருப்பதி அரச குழந்தை கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 11 குழந்தைகள் திடீரென மரணமடைந்ததால் பெற்றோர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த சில தினங்களாக இந்த மருத்துவமனையில் 11 குழந்தைகள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்தக்குழந்தைகள் திடீரென அடுத்தடுத்து உயிரை விட்டதால் அந்தமாநிலம் முழுவதும் மிகுந்த பதற்றம் நிலவியது.

குழந்தைகளின் பெற்றோர்கள் இறந்த குழந்தைகளின் சடலத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் வை.எஸ்.ஆர்.காங்கிரஸ், தெலுங்குதேசம் ஆகிய ஆந்திராவின் பிரதான அரசியல் கட்சியினரும் ஈடுபட்டனர்.

குழந்தைகளின் மரணத்துக்கு மருத்துவமனையின் அலட்சியமே காரணம் என்று அந்தக் குழந்தைகளின் பெற்றோர் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஆனால் ஆபத்தான நிலையில் சிகிச்சைக்கு வந்ததாலேயே குழந்தைகள் உயிரிழந்தன என்று அரசு மருத்துவமனை வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் இது தொடர்பாக விசாராணை நடத்த அந்த மாநில முதல்வர் கிரண்குமார் ரெட்டி உத்தரவிட்டுள்ளார்.

# மதுரை இளைய ஆதீனம் பதவியிலிருந்து நித்தியை நீக்க மீண்டும் அனுமதி கோரி மனு கொடுக்க நீதிமன்று உத்தரவு

மதுரை, ஓக. 17

மதுரை இளைய ஆதீனம் பதவியிலிருந்து நித்தியானந்தாவை பதவி நீக்கம் செய்ய வழக்குத் தொடர அனுமதி கேட்டு, அறநிலையத்துறை ஆணையாளரிடம் மீண்டும் மனு கொடுக்க உயர் நீதிமன்றக் கிளை உத்தரவிட்டுள்ளது.

ஆதீன மீட்புக் குழுவைச் சேர்ந்த நெல்லைக் கண்ணன், உயர் நீதிமன்றக் கிளையில் தாக்கல் செய்த மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது:-

மதுரை ஆதீன மடத்தின் 292 ஆவது ஆதீனமாக அருணகிரிநாதர் உள்ளார். அவர், 293 ஆவது ஆதீனமாக நித்தியானந்தாவை நியமனம் செய்துள்ளார். இளைய ஆதீனம் நியமனத்துக்கு தனிப்பட்ட விதிகள் உள்ளன. இந்த விதிகளை காற்றில் பறக்கவிட்டு, நித்தியானந்தாவை, இளைய ஆதீனமாக நியமனம் செய்தது சட்டவிரோதம். நித்தியானந்தா மீது பல்வேறு குற்றச்சாட்டுகள், வழக்குகள் உள்ளன.

நித்தியானந்தாவை இளைய ஆதீனம் பதவியிலிருந்து நீக்க, சிவில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய அறநிலையத் துறை சட்டம் 59 ஆவது பிரிவின் கீழ் அனுமதி வழங்க, அறநிலையத்துறை ஆணையருக்கு மனு அனுப்பினேன். அவர் இதுவரை அனுமதி தரவில்லை. நித்தியானந்தாவுக்கு எதிராக வழக்குத் தொடர, அனுமதி வழங்க அறநிலையத்துறை ஆணையாளருக்கு உத்தரவிட வேண்டும்-என்றுள்ளது.

இந்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அதன்போது, மனுதாரர் அனுப்பிய மனுவில் சில குறைபாடுகள் உள்ளன என்று அறநிலையத் துறை ஆணையாளர் தாக்கல் செய்த பதில் மனுவில் கூறப்பட்டுள்ளது.

அந்தக் குறைபாடுகளை சரி செய்து மனுதாரர், அறநிலையத்துறை ஆணையாளரிடம் மீண்டும் மனு கொடுக்கலாம். அந்த மனு



நிராகரிக்கப்பட்டால் மனுதாரர் அரசிடம் மேன்முறையீடு செய்து பரிகாரம் பெறலாம் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

# பாக்.விமானத்தளம் மீது தாக்குதல்

## 8 தீவிரவாதிகள் உயிரிழப்பு





இஸ்லாமாபாத், ஓக 17

பாகிஸ்தானின் முக்கிய விமானத் தளங்களில் ஒன்றான காம்ரா படைத் தளம் மீது தீவிரவாதிகள் நேற்று அதிகாலை திடீரெனத் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து விமானப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நிகழ்ந்த மோதலில் 10 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 2 பேர் படையினர், 8 பேர் தீவிரவாதிகள் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

பாகிஸ்தான் நாட்டின் முக்கிய விமானப் படைத் தளங்களில் ஒன்று காம்ரா தளம். இது தலைநகர் இஸ்லாமாபாத்தில் இருந்து 80 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. இந்தத்தளத்தைக் கைப்பற்ற கடந்த பல ஆண்டுகளாகவே தீவிரவாதிகள் அடிக்கடி தாக்குதல் நடத்தும் முக்கிய இலக்காக இருந்து வருகிறது.

காம்ரா தளத்தில் அணு ஆயுதங்கள் வைக்கப்பட்டிருக்கக் கூடும் என்பதுதான் தீவிரவாதிகளின் இலக்குக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது. இதேபோல் மிராஜ் போன்ற போர் விமானங்களைக் கடத்திச் செல்லவும் தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில் நேற்று அதிகாலை 2 மணியளவில் பாகிஸ்தான் இராணுவத்தினரைப் போல் சீருடையணிந்திருந்த தீவிரவாதிகள் 10 பேர் காம்ரா தளத்துக்குள் நுழைந்து அதிரடித் தாக்குதலை நடத்தினர். இதையடுத்து படைத்தரப்பினரும் பதில் தாக்குதல் நடத்தினர். இருதரப்பினரிடையேயான மோதல் சுமார் 5 மணி நேரத்துக்கும் மேலாக நீடித்தது.

மோதலின் முடிவில் 8 தீவிரவாதிகளும் 2 படையினரும் உயிரிழந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. இருப்பினும் தீவிரவாதிகள் தப்பியோடியது பற்றி அதிகாரபூர்வமாக எந்த ஒரு தகவலும் வெளியிடப்படவில்லை.

சில தினங்களுக்கு முன்னர் தான் பாகிஸ்தான் இராணுவத் தளபதி கயானி, தீவிரவாதத்துக்கு எதிராக பாகிஸ்தான் கடும் நடவடிக்கை எடுக்கும் என்று எச்சரித்திருந்தார். கயானியின் கருத்துக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. இதேபோல் காம்ரா வான்படை தளத்தில் அணு ஆயுதம் எதுவும் பதுக்கி வைக்கப்பட்டிருக்கவில்லை என்றும் பாகிஸ்தான் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. (வ)

## பார்வையற்றோருக்கு செயற்கை விழித்திரை

வோஷிங்டன், ஓக.17

பார்வையற்றோரின் வாழ்வில் ஒளிவீச செயற்கை விழித்திரையை விஞ்ஞானிகள் தயாரித் துள்ளனர்.

கண் பார்வையற்ற எலிக்கு செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட அதிநவீன லென்ஸுடன் கூடிய விழித் திரையை பொருத்தி சோதனை நடத்தப்பட்டது. அதன்மூலம் பார்வை கிடைத்த எலி துள்ளிக் குதித்து ஓடியது.

அதைப் பார்த்து ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தனர் விஞ்ஞானிகள். அதே தொழில்நுட்பத்தை பார்வையற்ற மனிதர்களுக்கும் பயன்படுத்தி அவர்கள் வாழ்வில் ஒளியேற்ற முடியும் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

மனிதர்களிடம் இந்தச் சோதனை இன்னும் ஓரிரு ஆண்டுகளில் ஆரம்ப மாகும் என்றும் அறிவித்துள்ளனர். (வ)

## பிலிப் கோமகன் மருத்துவமனையில்



எலிசபெத் மகாராணியின் கணவரான, பிலிப் கோமகன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்று சொல்லப்படுகின்றது. 91 வயதாகும் இளவரசர் பிலிப் ஸ்கொட்லாந்து சென்றிருந்த போது உடல் நலக்குறைவு ஏற்பட்டது.

கடந்த கிறிஸ்துமஸ் பண்டிகைக் காலகட்டத்தில், அவருக்கு இதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருந்ததைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக மருத்துவமனையில் தற்போது அவர் சேர்க்கப்பட்டுள்ளார். (வ)

## பயிற்சியின்போது பாக்.போர் விமானம் வீழ்ந்து விபத்து

பாகிஸ்தானின் கிழக்கு பஞ்சாப் மாகாணத்தில் பயிற்சியின்போது மிராஜ் போர் விமானம் நேற்று முன்தினம் புதன்கிழமை தரையில் விழுந்து விபத்துக்குள்ளானது. எனினும் விமானி பத்திரமாக மீட்கப் பட்டார்.

இந்த விபத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் இழப்புகள் குறித்த தகவல்கள் உடனடியாகத் தெரியவில்லை.விமான விபத்துக்கான காரணம் குறித்து அறிய விசாரணைக்கு விமானப் படைத் தலைமை யகம் உத்தரவிட்டுள்ளது. (வ)

## அசாஞ்சேக்கு சிக்கல்



தமது தூதரகத்தில் பிரவேசித்து விக்கிலீக்ஸ் ஸ்தாபகர் ஜூலியன் அசாஞ்சேயை கைது செய்ய பிரிட்டன் முயற்சிப்பதாக ஈக்குவடோர் குற்றம் சுமத்தியுள்ளது

சுவீடனுக்கு நாடு கடத்தப்படவிருந்த நிலையில் அசாஞ்சே, கடந்த ஜூன் மாதத்தில் லண்டனில் உள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் அடைக்கலம் பெற்றார்.

இந்த நிலையில் அவரை தமது தூதரகத்தில் பிரவேசித்து கைதுசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக ஈக்குவடோர் குற்றம் சுமத்தியுள்ளது

எனினும் ராஜதந்திர தகவல்களை தமது இணையத்தளத்தில் வெளியிட்ட குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள அசாஞ்சேயை நாடு கடத்தவேண்டியது தமது கடமை என்று பிரிட்டன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ)

## அமெ.உதவியை ஏற்க மறுத்தது ஈரான்

ஈரான் பூகம்பத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமெரிக்கா அளிக்க முன் வந்த உதவியை ஏற்க ஈரான் மறுத்து விட்டது.

இது பற்றி ஈரான் உள்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் கூறுகையில்;

''பூகம்பத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமெரிக்க அளிக்க முன் வந்த உதவியை ஈரான் ஏற்றுக் கொள்ளாது. அமெரிக்கா நல்லெண்ணத்துடன் உதவி செய்யும் என நாங்கள் எண்ணவில்லை. தடை காரணமாக இங்கு மருந்துப் பொருள்கள் கிடைப்பதில் சிக்கல் உள்ளது'' - என்றார்.

## சீட்டிழுப்பில் 148 யூரோ மில்லியன் தட்டிச் சென்ற பிரிட்டன் தம்பதி



பிரிட்டனைச் சேர்ந்த தம்பதி ஏட்ரியன் பேபோர்ட் மற்றும் கில்லியன் ஆகியோருக்கு 148 மில்லியன் யூரோ பரிசுத் தொகையாகக் கிடைத்துள்ளது. 2004 ஆம் ஆண்டு முதல் யூரோ மில்லியன் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு குலுக்கல் ஐரோப்பா கண்டத்தில் இடம்பெற்று வருகிறது.

பிரிட்டனின் சர்வதேச லொத்தர் நிறுவனம் நடத்தும் இந்த குலுக்கலுக்கான சீட்டுகள் மேற்கு ஐரோப்பிய நாடுகளான ஆஸ்திரியா, பெல்ஜியம், இங்கிலாந்து, பிரான்ஸ், அயர்லாந்து, லக்சம்பர்க், போர்ச்சுக்கல், ஸ்பெயின், சுவிற்ஸர்லாந்து உள்ளிட்ட 9 நாடுகளில் விற்கப்படுகின்றன.

இந்த ஆண்டுக்கான சீட்டிழுப்பு கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது. இதில் பிரிட்டனில் உள்ள சஃப்போக்கைச் சேர்ந்த தம்பதி ஏட்ரியன் பேபோர்ட் (41) மற்றும் கில்லியன்(40) ஆகியோருக்கு 148 மில்லியன் யூரோ பரிசாக குலுக்கலில் விழுந்துள்ளது.

கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பு திருமணமான அவர்களுக்கு 6 வயதில் ஒரு மகளும், 4 வயதில் ஒரு மகனும் உள்ளனர். ஹெர்ட் போர்ட்ஷையரில் உள்ள டவுன் ஹோல் கன்ட்ரி ஹவுஸ் ஹோட்டலில் நடந்த விழாவில் அவர்கள் தான் அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்கள் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

## சீக்கிய மத குருவின் உருவத்தை விளம்பரத்தில் பயன்படுத்தத் தடை

சீக்கிய மத குருவான குருநானக் உருவம் சீக்கிய குருமந்திரத்தைப் போன்ற பாடல் அடங்கிய விளம்பரத்துக்கு பிரிட்டனில் தடை விதிக்கப்பட்டது.

பிர்மிங்ஹாம் பகுதியில் உள்ள தளபாடத் தயாரிப்பு நிறுவனம் தனது விளம்பரத்தில் குருநானக் உருவம் மற்றும் சீக்கிய குரு மந்திரத்தைப் போன்ற பாடலைப் பயன்படுத்தியது.

இது சீக்கியர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தும் வகையில் இருப்பதாக முறைப்பாடு எழுந்தது.

இதையடுத்து அந்த விளம்பரத்துக்குத் தடை விதித்து அந்நாட்டு விளம்பரக் கண்காணிப்பு நிறுவனமான விளம்பர நிறுவனம் உத்தரவிட்டது. (வ்)

## நிர்வாண நீச்சலில் உலக சாதனை



பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட்ஷயர் ஏரியில் பெரும் எண்ணிக்கையானோர் ஒரே நேரத்தில் நிர்வாணமாக நீச்சலடித்து உலக சாதனை ஒன்றை படைத்துள்ளனர். இதில் பங்குபற்றியவர்கள் ஒருவருடன் ஒருவர் முன் அறிமுகம் அற்றவர்களாவர். புதிய இரகசிய நீச்சல் கழகமொன்றின் ஆரம்ப நிகழ்வின் ஒரு பகுதியாக மேற்படி நிர்வாண நீச்சலும் இடம்பெற்றது.

இந்த அமைப்பானது ஒவ்வொரு மாதமும் இயற்கை அழகு நிறைந்த இடங்களில் நடத்தப்படும் நீச்சல் நிகழ்வுக்கு பலருக்கு அழைப்பு விடுத்து நீச்சல் நிகழ்வில் பங்கேற்பதற்கான வாய்ப்பை வழங்கி வருகின்றது. ஆனால் இத்தகைய நீச்சல் நடைபெறும் இடங்கள் கடைசி நிமிடம் வரை இரகசியமாகவே வைக்கப்படும். மேற்படி இரகசிய நீச்சல் அமைப்பின் அமைப்பாளரான பாபியன் ரிகலே இவ்வாறான திட்டத்தை முன்வைத்துள்ளார்.

சில நண்பர்களுடன் இரவு நேரத்தில் நீந்துவதற்குச் சென்றால் அது மிகவும் அற்புதமான அனுபவமாக இருக்குமெனை 'எதிர்கால சினிமா மற்றும் இரகசிய நீச்சல்' எனும் அமைப்பின் ஸ்தாபகரான ரிகால் தெரிவித்துள்ளார்.

## பாக். ஆயுதங்கள் தீவிரவாதிகள் கைகளுக்குச் செல்லும் அபாயம்

### அமெ. பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை



பாகிஸ்தானில், பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தாவிட்டால் அந்தநாட்டின் அணு ஆயுதங்கள் தீவிரவாதிகளின் கைகளுக்குச் செல்லும் அபாயம் உள்ளது என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனெட்டா அச்சம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் அரச கொள்கைகளை ஆய்வு செய்யும் நாடாளுமன்ற ஆய்வுக் குழு, அண்மையில் ஆய்வறிக்கை ஒன்றை அளித்தது.

இதுதொடர்பாக, பென்டகனில் கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனெட்டா, செய்தியாளரிடம் கூறுகையில்,

பாகிஸ்தானில் தீவிரவாதத்தை கட்டுப்படுத்தாவிட்டால், அந்தநாட்டின் அணு ஆயுதங்கள், தீவிரவாதிகளின் கைகளுக்குச் சென்று விடும் அபாயம் உள்ளது.

**தீவிரவாதத்துக்கு பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் பலர் உயிரிழந்துள்ளனர். அந்தநாட்டு இராணுவத்தினரும் உயிரிழந்திருக்கின்றனர்.**

தீவிரவாதத்தை எதிர்கொள்ள பொதுவான நோக்கம் வேண்டும் என்று பாகிஸ்தான் அதிகாரிகளிடம் நான் வலியுறுத்தியுள்ளேன், தீவிரவாதிகள், அமெரிக்காவுக்கு மட்டுமல்ல, பாகிஸ்தானுக்கும் அச்சுறுத்தலாகத் தான் உள்ளனர்.

தீவிரவாதத்துக்கு பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் பலர் உயிரிழந்திருக்கின்றனர். அந்த நாட்டு இராணுவத்தினரும் உயிரிழந்திருக்கிறனர். இதை பாகிஸ்தான் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்-என்றார். (வ)

நல்லூர் கந்தனின் 24 ஆம் நாள் திருவிழா



தீர்த்த உற்சவம் திருவிழாச் சிறப்புற வாழ்த்துவோர்:

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே : 021 221 9016

(சி/2420)(6.8)


## தீர்த்தமாடி வருங்காட்சி!



நிறைவுறு திருவிழா
நன்னாளில் நல்லூரான்
நல்லடியார் புடைசூழத்
தீர்த்தமாடி மறையோத,
மணியோசை, மங்கல
இசை ஒலிக்க
மால் முருகன் காட்சி
தர வருகின்றான்
நரைமுடிப் பக்தரும்
நல்லிளம் அடியாரும்
நாள் தோறும் பக்தியொடு
வழிபட்டு குறைவின்றி
எல்லோரும் குவலயத்தில்
வாழ்வதற்கு குமரேசர்
திருவருளை வேண்டுகின்றார்.

குளப்பிட்டி, க.அருமைநாயகம்

## "பவனி வா பால முருகா"



நல்லூரில் வந்து நடனபுரியும்–நல்லவன்
நீ அல்லவா–நம் வல்வினைகள்
அறுத்தெறியும் வல்லவன் நீ அல்லவா
மயில் நடனம் புரியும்–மயில் வாகனனே
சரவணபவனே சங்கரன் மகனே–உன்
ஆறுதிரு கரங்களாலும் உன் அன்பர்களை
அரவணைத்து அடைக்கலம் கொடுக்கும்
அருள் நாயகனே–தீர்த்தமாடி வாரும் ஐயா
தினம் தோறும் அருள் தாருமையா!...

வி.ருத்திரன், நெடுந்தீவு–13

## "ஊனமகற்றும் தீர்த்தம்"



தேரோடிக் களைத்தனையோ முருகா
தீர்த்தமாட வா முருகா,
தேவரோடு முனிவர்களும் நினது
தீர்த்தம் காண இன்புறுவர்,
வேரோடு வன்மம் நீங்க முருகா,
வேலோடு வருக முருகா
வெந்து நொந்த குடும்பங்கள் நினது
வற்றாத அருள் தீர்த்தமாடிடுவர்!
பாரோடு பயமின்றி பவுத்திரமாய் வாழ
பயபக்தியைத் தரவேண்டும் முருகா,
பணவாசை, பேராசை யாவுமடங்க
பாவநாசத் தீர்த்தமாடிடுவர்!
ஊரோடு ஒத்துவாழ, உறவுகொள்ள
உயிராக எழுந்து வா முருகா,
உடைநடை பாவனைகள் யாவும்
ஊனம் அற தீர்த்தமாடிடுவர்!

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்


தீர்த்த உற்சவம்


ஆசைப்பிள்ளை

அன் சன் நகைமாடம்

K.T. பிளாசா, பிரதான வீதி, சங்கானை. தொ.பே : 021 321 2399

(சி/2421)(6.8)


# மிகப்பெரிய தலவிருட்சம் கொண்ட இடைக்காடு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்



ஞானி

செந்நெல் விளையும் வயல் நிலங்கள் மற்றும் தோட்டப் பயிர்கள் செழித்து வளரும் விளை நிலங்கள் சூழ்ந்த பிரதேசத்தில் ஊருக்கு வெளியே அமர்ந்து அருள் மாரி பொழியும் புவனேஸ்வரி அம்பாளின் அருள் வியாபகம் அடியவர்களை ஈர்த்து அடிமைகொள்ளும். படிமத்தார் வேலர் பிரதிஷ்டை செய்த பூர்வீகமான வேம்பும் அரசும் இணைந்த மரம் ஆலய வாசலுக்கு சமாந்தரமாக தெற்குப் பக்கத்தில் அமைந்துள்ளது. அதுவே தலவிருட்சமாக கொள்ளப்படுகின்றது. தலவிருட்சமானது மிகப்பெரிய மரமாக 20 அடிக்கு குறையாத சுற்றளவு கொண்டதாக அரசமரமா? வேப்ப மரமா? என்று வேறுபடுத்தி அறியமுடியாத அளவு சிவமும்-சக்தியும் இணைந்த நிலையில் நிழல்பரப்பி நிற்பது பார்ப்பவர்களை பரவசம் கொள்ளச் செய்யும் தலவிருட்சத்தின் கீழ் நாகதம்பிரான் கோயில் அமைந்துள்ளது.

பலாலி இராணுவத் தளத்துக்கு கிழக்குப் புறமாக ஏறக்குறைய இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் ஆலயம் இராணுவ நடவடிக்கையின் போதும் இராணுவத் தளத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் வீச்சுகளின் போதும் பல்வேறுவிதமான சேதங்களுக்கு உள்ளாகியது. அந்த வகையில் 1987 ஆம் ஆண்டு சேதமடைந்த ஆலயத்தைப் பாலஸ்தாபனம் செய்து புனருத்தாரணம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. புனருத்தாரண வேலைகள் பூர்த்தியடைந்ததை அடுத்து 1989-06-08 ஆம் திகதி வியாழக்கிழமை மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. குடமுழுக்கைத் தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றது.

1991 ஆம் ஆண்டு மார்கழியில் உக்கிரமடைந்த போரைத் தொடர்ந்து கிராம மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்து ஊரே வெறுமையான சூழலில் ஆலயத்தின் நித்திய, நைமித்திய பூசைகள் ஆறு வருட காலம் முற்றாகத் தடைப்பட்டு இருந்தன. இந்தக் காலப்பகுதியில் ஆலயம் பல்வேறுவிதமான சேதங்களுக்கு உள்ளாகிய போதிலும் ஆலயத்தின் பெறுமதிமிக்க உடைமைகளும் காணாமல் போயின. 1997 இல் இருந்து கிராமத்தில் வாழ்ந்த மக்கள் மீளக்குடியமர்தலை அடுத்து ஆலயத்தின் பூசை வழிபாடுகள் இயல்பு நிலையில் மேற்கொள்ளப்பட்டு புதிய கட்டுமானப் பணிகளும் நடைபெற்றன. 2005.04.22 ஆம் திகதி அன்று மகாகும்பாபிஷேகமும் அதைத் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் நடைபெற்றன.

> 1997 இல் இருந்து கிராமத்தில் வாழ்ந்த மக்கள் மீளக்குடியமர்ந்ததை அடுத்து ஆலயத்தின் பூசை வழிபாடுகள் இயல்பு நிலையில் மேற்கொள்ளப்பட்டு புதிய கட்டுமானப் பணிகளும் நடைபெற்றன. 2005.04.22 ஆம் திகதி அன்று மகாகும்பாபிஷேகமும் அதைத் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் நடைபெற்றன.

போர் அழிவுகளின் போது ஆலயத்தில் பிரதிஷ்டை செய்து வழிபட்ட பெறுமதிமிக்க ஐம்பொன்னால் செய்யப்பட்ட அம்மன் விக்கிரகம் காணாமல் போனதோடு பரிவார மூர்த்தங்களும் சேதமடைந்தும், இல்லாமலும் போயிருப்பது கண்டு துன்பமடைந்த அடியார்கள் மற்றும் உபயகாரர்கள் பரிபாலன சபையினர் பெரும் பொருள் செலவில் ஆலயத்துக்குத் தேவையான அனைத்தையும் குறுகிய கால இடைவெளியில் சீர்செய்து ஆலய பூசை வழிபாடுகளை இயல்பு நிலைக்குக் கொண்டு வந்தனர். ஆலயத்துக்கு சித்திரத்தேர் இல்லாத குறைபாட்டை போக்கும் வகையில் இடைக்காட்டைச்சேர்ந்த நிலஅளவையாளர் எம்.சிவஞானசுந்தரம் குடும்பத்தினர் புதிய சித்திரத்தேரையும் அதற்கான தேர்முட்டியையும் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணம் செய்து உபயமாக்கியுள்ளனர்.

பூர்வீகமாக ஆலயத்தின் உரிமையாளராகவும் பரிபாலகராகவும் இருந்து வந்த படிமத்தார் வேலரின் வழித்தோன்றல்கள் வரிசையில் வந்த சு.ஞான சபேசன் 1982.09.22 ஆம் திகதி ஆலயத்தின் உரிமைகள் உடைமைகளைச் சட்டரீதியாக ஊர்ப் பொது மக்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட பரிபாலனசபையிடம் கையளித்தார். முதலாவது பரிபாலன சபையின் தலைவராக மின்பொறியியலாளர் வே.சுவாமிநாதன் பொறுப்பேற்றுக்கொண்டார். பரிபாலன சபையின் செயலாளராக எஸ்.ஆறுமுகசாமி பொறுப்பேற்றுக்கொண்டார்.

தற்பொழுது இரண்டாவது பரிபாலனசபை ஆலயத்தைப் பரிபாலனம் செய்து வருகின்றது. அதன் தலைவராக என்.சுவாமிநாதனும் செயலாளராக கே.ரகுநாதனும் செயற்பட்டு வருகின்றனர். இரண்டாவது பரிபாலனசபை 2009 ஆம் ஆண்டில் இருந்து பணியாற்றி வருகின்றது. பரிபாலனசபையில் பிரதான நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர்கள் திருவிழா உபயகாரர்களில் ஒருவராக இருக்கவேண்டும் என்ற நடைமுறை ஒழுங்கு பின்பற்றப்பட்டு வருகின்றது.

ஆலயத்தின் பரம்பரை உரிமையாளர் ஆலயத்தை பரிபாலனசபையிடம் ஒப்படைக்கும் போது நூற்றுக்கணக்கான பரப்பு நன்செய் புன்செய் நிலங்களையும் ஆலயத்தின் சொத்தாக கையளித்துள்ளார். அவற்றில் இருந்து பெறப்படும் வருமானமும் ஆலய பரிபாலனத்துக்கான செலவில் உள்ளடக்கப்பட்டு பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றது.

2009 ஆம் ஆண்டு வரை அலங்கார உற்சவமாக நடைபெற்று வந்த ஆலய வருடாந்த உற்சவம் 2009 ஆம் ஆண்டில் இருந்து வேதாகம விதி முறைப்படி கொடிமரம் நாட்டி கொடியேற்றி திருவிழா நடைபெறுகின்றது. சித்திரைப் பௌர்ணமி அன்று தீர்த்தோற்சவமாகக் கொண்டு பத்துத் தினங்கள் வருடாந்த மகோற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. வருடாந்த உற்சவத்தோடு மாதப்பிறப்பு, தைப்பொங்கல், தைப்பூசம், அபிராமிப் பட்டர்விழா, அமாவாசைப்பூசை, சதுர்த்தி, நவராத்திரி, கண்ணகை அம்பாள் பொங்கல், வரலட்சுமி விரதம், கேதாரகௌரி விரதம், தீபாவளி, திருக்கார்த்திகை, திருவெம்பாவை உள்ளிட்ட விஷேட காலப்பகுதியில் விஷேட உற்சவங்களும் பூசை வழிபாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

படிமத்தார் வேலரிடம் தெய்வீகப் பெண் கையளித்த செம்பினால் ஆன சிலம்பை கண்ணகை அம்மனுக்கு உரியதாகக் கருதி கண்ணகை அம்மன் வழிபாடு அம்மனோடு தொடர்பான உற்சவங்களும் விஷேட உற்சவங்களாக நடைபெற்று வருகின்றன. வைகாசி மாதத்தில் வரும் கண்ணகை அம்மன் உற்சவத்தில் வழுந்துவைத்தல், பொங்கல் செய்தல், விஷேட உற்சவம் செய்தல் என்பன சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன.

ஆலயத்தோடு இணைந்த நிலையில் கல்விப்பணி, சமூகப் பணி, அறநெறிப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புவனேஸ்வரி அம்மன் பெயரில் அறநெறிப் பாடசாலையும், பாலர் முன்பள்ளியும் அமைத்து சிறுவர் கல்வியும்; அறநெறியும் போதிக்கப்படுவதோடு பாடசாலை மாணவர் மட்டத்தில் பேச்சுப்போட்டி, மனனப்போட்டி, கட்டுரைப்போட்டி, மாலைகட்டுதல், கோலம் போடுதல் உள்ளிட்ட நிலையில் சமய அறிவைத் தூண்டி வளர்க்கும் போட்டிகளும் அதற்கான பரிசளிப்புவிழாவும் ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகின்றன. மாதர் சங்கம் திருத்தி அமைக்கப்பட்டு மாதர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி மற்றும் குடும்ப மேம்பாட்டுக்கான தொழிற்பயிற்சி கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த வகையான பணி முன்னெடுப்புகள் இந்துநெறிக் கழகத்தோடு இணைந்த நிலையில் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆலயமும் சமூகமும் ஒன்றிணைந்த நிலையில் செயற்பட்டு வருவது அறநெறிசார் நிலையில் சமூகத்தை மேம்படுத்துவதற்கும் கல்வி முன்னெடுப்புக்களை உயர்நிலையில் பேணிக் கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளன. அம்பாள் அருள் பெற்று உய்வோமாக.



நாட்டின் கல்வி முறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கக் கோரி முன்னிலை சோஷலிசக் கட்சியினர் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# தரம் குறைந்த எரிபொருள் விநியோகம்; ஆராய சுதந்திரமான விசாரணைக்குழு

## நியமிக்க வேண்டும் என வலியுறுத்து

கொழும்பு,ஓக.17

தரக்குறைவான எரிபொருள் விநியோகம் தொடர்பாக ஆராயவென அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழு வினைத்திறன் அற்றுக் காணப்படுவதால் சுதந்திரமான விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்று பெற்றோலிய தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தற்போதைய விசாரணைக்குழு உறுப்பினர்கள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குள்ளிருந்து நியமிக்கப்பட்டவர்கள். இவர்களால் பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்த முடியாது என்று தொழிற்சங்கங்கள் கூறியுள்ளன. கலப்பட பெற்றோல் இறக்குமதிக்கு பொறுப்பானவர்கள் முன்பு தண்டிக்கப் பட்டிருந்தால் இரண்டாம் தடவையும் இது நடந்திருக்காது என்று ஜாதிக சேவா சங்கத்தின் தலைவர் ஆனந்த பாலித கூறினார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் 2011 ஆம் ஆண்டிலிருந்து அரசியல் தலையீடு காரணமாக பல ஊழல்கள் இடம்பெறுகின்றன.

அரசியல் அடிவருடிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொன்றிலும் தரகு மற்றும் வேறு நன்மைகள் காணப்படுகின்றன என்று அவர் தெரிவித்தார்.

எங்களது கூட்டுத்தாபனம் தரமான பெற்றோலை குறைந்த விலையில் வாங்க விரும்பினால் நிறுவனங்களுடன் நீண்ட கால ஒப்பந்தங்களை செய்வதே ஒரேவழி என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(ச)

# தவறான எஸ்.எம்.எஸ். அனுப்பியோர் கைது

**தவறான குறுந் தகவல்கள் கொடுத்தனர் என்ற குற்றச் சாட்டில் 100 பேரை கைது செய்துள்ளனர்.**

கொழும்பு,ஓக.17

பொலிஸ் அவசர குறுந் தகவல் சேவையான 119 தொலைபேசி இலக்கத்துக்கு தவறான குறுந் தகவல்கள் கொடுத்தனர் என்ற குற்றச் சாட்டில் 100 பேரைக் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார்.

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் முகமாக அண்மையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அவசர எஸ்.எம்.எஸ். சேவையிலேயே இந்தத் தவறான அணுகுமுறைகள் இடம்பெற்றுள்ளதாகவும், சேவையைத் தவறாகப் பயன்படுத்த முற்பட்டவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு அனுப்பப்படும் தவறான குறுந்தகவல்கள் கூட சில குற்றச் செயல்களைத் தடுக்க வாய்ப்பாக இருக்கலாம். ஆனால் அது தவறு எனின் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதும் தவிர்க்க முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# ஓய்வுபெற்றோருக்கு நியமனம்; அச்சுறுத்தும் நடவடிக்கையா?

## கண்டிக்கின்றன தொழிற்சங்கங்கள்

கொழும்பு,ஓக.17

5000 ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு மீண்டும் நியமனம் வழங்குவது தொழிற் சங்கங்களை அச்சுறுத்துவதற்கானதும் பகிஷ்கரிப்பை கைவிட வலியுறுத்துவதற்குமான நடவடிக்கை என்று இலங்கை மின்சார சபை தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

45,000 பட்டதாரிகளை மின்சார சபையில் பணியாற்றுவதற்காக இணைத்துக் கொள்வது தவறாகும். சில கடமைகளை நிறைவேற்றுவதற்கான விசேட திறமைகள் அவர்களிடம் இல்லாததால் பிரச்சினைகள் ஏற்படும் என்று இலங்கை மின்சார சபையின் ஐக்கிய தொழிற் சங்க முன்னணியின் பேச்சாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பட்டதாரிகளை மின்சார சபையில் இணைந்துக்கொள்வது தரம்குறைந்த எரிபொருளைக் கொள்வனவு செய்தமை போன்றதைப் போலாகிவிடும்.

சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பது உட்பட தமது கோரிக்கைகள் நிறை வேற்றப்படும் வரை பகிஷ்கரிப்பைத் தொடர்வதற்கு மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.- என்றார்.

அதேவேளை, மக்களுக்குப் போதுமான சேவையாற்றுவதற்கு அதிகாரிகள் தவறியதால் மின்சார விநியோகப் பற்றாக்குறை காரணமாக நாட்டின் பல பாகங்கள் இருளில் மூழ்கியிருந்ததாக இலங்கை மின்சார சபையின் ஐக்கிய தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது. (ச)

# சம்பள உயர்வு வழங்க வேண்டும்

## தபால் ஊழியர்கள் கோரிக்கை

கொழும்பு,ஓக.17

முன்வைக்கப்படவுள்ள அடுத்த நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று தபால் ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து நிதி அமைச்சின் செயலாளரை தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை தபால் சேவை சங்கத்தின் தலைவர் ஜயந்த விஜேசிங்க தெரிவித்தார்.

சம்பள உயர்வு குறித்து பேச்சு நடத்த சந்தர்ப்பம் வழங்குமாறு நிதி அமைச்சின் செயலாளரிடம் நேற்று முன்தினம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்ததாக அவர் குறிப்பிட்டார்.

தபால் திணைக்களத்தில் பணிபுரியம் அதன் சேவையாளர்களுக்கு பல வருடங்களாகக் காணப்படும் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப்பெறவில்லை என்று அவர் மேலும் கூறினார். (ச)

# அபராதம் செலுத்தாது 15,000 கைதிகள்

## சிறைச்சாலைகள் திணைக்களம் சுட்டிக்காட்டு

**2011 ஆம் ஆண்டு அபராதத் தொகையைச் செலுத்த முடியாது 15,306 பேர் சிறைக்குச் சென்றதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

கொழும்பு,ஓக.17

இலங்கைச் சிறைகளில் உள்ள 15 000 கைதிகள் நீதிமன்றால் விதிக்கப்பட்ட அபராதத் தொகையைச் செலுத்த முடியாது சிறைத் தண்டனை அனுபவித்து வருபவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

2011 ஆம் ஆண்டு அபராதத் தொகையைச் செலுத்த முடியாது 15,306 பேர் சிறைக்குச் சென்றதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரு வருடத்தில் சிறைக்குச் செல்லும் கைதிகளில் 50 சதவீதமானோர் இவ்வாறு அபராதத் தொகையைச் செலுத்த வழியில்லாதவர்கள் என்று திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இலங்கையில் உள்ள சிறைகளை சர்வதேச தரத்துக்கு உயர்த்த கொழும்பு உள்ளிட்ட முக்கிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சிறைகள் இடமாற்றம் செய்யப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச)

# வீட்டில் கைக்குண்டு: இருவருக்கு விளக்கமறியல்

பொலிஸ் சார்ஜன் வீட்டிலிருந்து கைக்குண்டு ஒன்று மற்றும் கஞ்சா கைப் பற்றப்பட்டன.

கொழும்பு,ஓக.17

கைகுண்டு மற்றும் கஞ்சா வைத்திருந்த குற்றச் சாட்டில் கைதான பொலிஸ் சார்ஜன் மற்றும் அவரது மனைவி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த பொலிஸ் சார்ஜன் வீட்டிலிருந்து கைக்குண்டு ஒன்று மற்றும் கஞ்சா கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவத்தினால் கைது செய்யப்பட்ட பொலிஸ் சார்ஜன் மற்றும் அவரது மனைவி நேற்று முன்தினம் புதன்கிழமை பிபில நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்டனர்.

இவர்கள் இருவரையும் எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பிபில நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவர்களது வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட கைக்குண்டு செயலிழக்கப்பட்டுள்ளது. (ச)

# சிகரெட் பைக்கற்றுக்களில் இனி பட வடிவில் எச்சரிக்கை

கொழும்பு,ஓக.17

புகைப்பிடிப்பதால் ஏற்படும் பாதிப்புகளை குறித்த படங்கள் மூலமான எச்சரிக்கைகளை சிகரெட் பைக்கற்றுகளில் பொறிக்கும் திட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதத்தில் அறிமுகமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உலக சுகாதார அமைப்புகளின் புகையிலை கட்டுப்பாடு தொடர்பான கட்டமைப்பு மாநாட்டு ஆவணத்தில் முதலில் கையெழுத்திட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இதில் கையெழுத்திட்ட நாடுகள் குறித்த பட எச்சரிக்கைகளை சிகரெட் பைக்கற்றுகளில் பொறிக்கும் திட்டத்தை மூன்று வருடங்களுக்குள் அறிமுகப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், புகைப்பட எச்சரிக்கைகள் குறித்த கலந்துரையாடல்கள், எச்சரிக் கைகளை மூன்று மொழிகளிலும் மொழிபெயர்த்தல் மற்றும் தொழில்நுட்ப காரணங்களால் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் திட்டத்தின்படி சிகரெட் பைக்கற்றில் வர்ணத்தில் பட எச்சரிக்கைகள் பொறிக்கப்பட வேண்டும். இதுவரை ஆஸ்திரேலியா, பிரேஸில், கனடா, ஹொங்கொங், இந்தியா, மலேஷியா, தாய்லாந்து, தாய்வான், சிங்கப்பூர் ஆகியன உட்பட 15 இற்கும் மேற்பட்ட நாடுகள் குறித்த திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

# இந்தியாவின் புனித தாது இலங்கையில் வழிபாட்டுக்கு

கொழும்பு,ஓக.17

புத்தரின் புனித தினத்தை முன்னிட்டு இந்தியாவிலிருந்து கபிலவஸ்து புனித தாது மக்களின் வழிபாட்டுக்காக இலங்கைக்கு எடுத்து வரப்படவுள்ளது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை புனித தாது இலங்கை மக்களின் வழிபாட்டுக்காக நாட்டின் ஏழு இடங்களில் வைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்குச் சென்றிருந்தபோது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் விடுத்த வேண்கோளுக்கு இணங்க புனித தாது இலங்கை மக்களின் வழிபாட்டுக்காக விமானம் மூலம் எடுத்துவரப்படவுள்ளது.

இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட ஏழு இடங்களில் குறித்த புனித தாது மக்களின் வழிபாட்டுக்காக வைக்கப்படும் என்று ஜனாதிபதியின் பௌத்த விவகார இணைப்பாளர் கெட்டமானே குணானந்த தேரர் அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

(ச)

# குடும்பப் பிரச்சினையால் ஒருவர் அடித்துக் கொலை

கொழும்பு,ஓக.17

வத்தளை - ஹெந்தல - கலகஹதுவ டொனி மாவத்தையில் வசிக்கும் ஒருவர் நேற்று அதிகாலை அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அடிகாயங்களுக்கு உட்பட்ட நிலையில் ராகம வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இவருடைய தந்தையும் சகோதரரும் இணைந்து தாக்கியதில் இவர் உயிரிழந்துள்ளார். சந்தேகநபர்களான தந்தையும் சகோதரரும் கைது செய்யப்பட்டுள்ளனர். வத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்களுக்குக் கிடைக்கும் தகவல்கள் மகிழ்ச்சி தரும். பணியில் பளு கூடிய போதும், சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். ஒரு காரியத்துக்காகத் திட்டமிட்ட பணம் ஒன்று, மற்றொரு காரியத்திற்காக பயன்படுத்த வேண்டியிருக்கும். தொழிலில், சிற்சில பிரச்சினைகள் ஏற்பட்டு விலகும்.

**இடபம்:** உங்களின் மனதில் குழப்பம் சற்று கூடுதலாகவே காணப்படும். குழப்பத்தைத் தவிர்த்து, பணியை வரிசைப்படுத்தி செயற்படுத்துங்கள், எதிர்பார்த்த வரவுகள் சற்று தாமதப்படும். வியாபாரத்தில் மாற்றங்களுக்கு முயற்சிப்பீர்கள். தொழிலில் புதிய தொடர்புகள் ஏற்படும்.

**மிதுனம்:** மன உற்சாகம் தரும் நிகழ்ச்சிகள் அதிகம் இருக்கும். பற்றாக்குறை வரவுகள் என்ற போதும், தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் சிரமம் இருக்காது. உறவினர் ஒருவரின் வருகை, சில சங்கடங்களை ஏற்படுத்தலாம்.

**கடகம்:** உங்களின் பணிகளை தெளிவாகவும், விரைவாகவும் செய்து முடிப்பீர்கள். பணம் பற்றிய கவலைகள் மறையும். குழந்தைகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு, அதற்காக சில ஏற்பாடு மேற்கொள்வீர்கள். அலுவலகப் பணிகளில், எதிர்பாராதவிதமாக பணியில் பளுகூடும்.

**சிங்கம்:** திட்டமிட்ட பணிகளைத் திட்டமிட்டபடி செய்து முடிப்பீர்கள். பணவரவுகள் மகிழ்ச்சி தரும். தொழிலில் எதிர்பாராத இடையூறுகள் ஏற்பட்டபோதும், தகுந்த நபர்களின் துணையோடு முடிவுக்குக் கொண்டு வருவீர்கள். பெற்றோருக்காகச் சில செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

**கன்னி:** பணிகள் மற்றும் அலைச்சல் காரணமாக, உடல் நிலையில் சோர்வு காணப்படும். வீட்டுக் காரியம் ஒன்றை சிரமத்தை பொருட்படுத்தாது செய்து முடிப்பீர்கள். அரசியல்வாதிகளின் தொடர்புகள் பயன் தரும். உறவினர்களின் வருகை ஏற்படும்.

**நாளை**

ஆவணி 02 சனிக்கிழமை 18.08.2012
திதி: பிரதமை மு.இ. 09.23 வரை
நட்சத்திரம்: மகம் மு.இ. 08.46 வரை
சுபநேரம்: 03.05- 04.35 வரை
ராகு காலம்: 09.05- 10.35 வரை

**துலாம்:** எடுத்த காரியங்களை, தங்கு தடையின்றிச் செய்து முடிப்பீர்கள். ஆரோக்கியக் குறைவுகளால் அவதிப்படலாம். சிறிய தவறு ஒன்று, பெரிய பிரச்சினையாகி விடுமோ என, கலக்கம் அடையலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். மறதியால் அவ்தியுண்டு.

**விருச்சிகம்:** கடன் பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். முன்யோசனை இல்லாமல் செய்த காரியம் ஒன்றால், பிரச்சினைகள் உருவாகலாம். வெளியிடங்களுக்குச் செல்லும்போது, புதியவர்கள் சிலரின் உதவி கூடுதல் வேலைப் பளுவைச் சந்திக்கலாம்.

**தனுசு:** எதிர்பாராத செலவுகள் இருந்தாலும், அதைச் சமாளிக்கப் புதிய வரவுகள் வந்து சேரும். தொழில் முன்னேற்றத்திற்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும். அதிக விலையுள்ள பொருளை, குறைந்த விலைக்கு வாங்கலாம்.

**மகரம்:** முக்கியஸ்தர்கள் சந்திப்பால் பெருமை அடைவீர்கள். அரசியல் வாதிகள் தலைமை மற்றும் சக தலைவர்களை விமர்சிப்பதைத் தவிர்க்க வேண்டும். புதிய முதலீடுகள் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். தாய் வழியில் நல்ல உதவிகள் கிடைக்கலாம். வாக்குவாதத்தைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** பிரியமான நபர் ஒருவர் வீட்டுக்கு வரலாம். உடன் பிறப்புகளுடன் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் தீரும். கொடுக்கல், வாங்கல்களை சீரமைத்துக் கொள்வீர்கள். சில விடயங்களில் கர்வமாக நடந்து கொள்வீர்கள்.

**மீனம்:** குடும்பத்தினரின் விமர்சனங்களைச் சந்திக்கலாம். சில பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்கி விட்டு, கவலை அடைவீர்கள். சேமித்த பணத்திற்கு திடீரென செலவு ஏற்படலாம். சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்தி ஒன்றை கேட்கலாம். சிலரை எதிர்பாராமல் பார்க்க நேரிடலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | 9 | 6 | | | | | |
| | 3 | | | | | 9 | | |
| 7 | | | | | 4 | 2 | | 3 |
| | 7 | 3 | 9 | 4 | | | 8 | 2 |
| 2 | | | 3 | 1 | 5 | | | 7 |
| 9 | 6 | | | 8 | 2 | 4 | 3 | |
| 3 | | 4 | 1 | | | | | 5 |
| | | 2 | | | | | 4 | |
| | | | | | 3 | 8 | | 6 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 1 | 5 | 7 | 6 | 4 | 8 | 2 |
| 4 | 2 | 7 | 3 | 8 | 9 | 6 | 1 | 5 |
| 8 | 6 | 5 | 1 | 2 | 4 | 9 | 3 | 7 |
| 7 | 8 | 2 | 6 | 4 | 3 | 5 | 9 | 1 |
| 5 | 9 | 6 | 2 | 1 | 7 | 3 | 4 | 8 |
| 1 | 4 | 3 | 8 | 9 | 5 | 2 | 7 | 6 |
| 6 | 7 | 9 | 4 | 5 | 8 | 1 | 2 | 3 |
| 3 | 1 | 8 | 9 | 6 | 2 | 7 | 5 | 4 |
| 2 | 5 | 4 | 7 | 3 | 1 | 8 | 6 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள்; கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


விழுது, ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் அழைப்பின் பேரில்

கொழும்பு அரசியல் கல்லூரி

நடத்தும் கருத்தரங்கு

"அரசியலமைப்புச் சட்டத்தின் உருவாக்கமும், அதில் மக்கள் பங்களிப்பும்"

காலம் : சனிக்கிழமை , ஓகஸ்ட் மாதம் 18 ம்திகதி
நேரம் : காலை 9.00 மணி முதல் மாலை 5.15 மணி வரை
இடம் : மூர்த்தி கலர் லாப் மாநாட்டு மண்டபம்
62 /17, ஸ்ரான்லி வீதி, (யாழ். பஸ் தரிப்பு நிலையத்திற்கருகில்) யாழ்ப்பாணம்

நல்லாட்சி, ஜனநாயகமயமாக்கல், பொதுக்கொள்கை உருவாக்கம் போன்ற விடயங்களில் ஆர்வமுள்ளவர்கள் யாவரும் கலந்து கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : 021 222 9866

Colombo College of Politics

(21738)(6-8)

VILUTHU



# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சின்னட்டி இராசதுரை

பிறப்பு 19.06.1938

இறப்பு 11.09.2007

நிந்தைப் பதியின்
நீறு என அமைந்தவரே!
மாய்ந்தவரெல்லாம் – வருவாரில்லை
எனத் தெரிந்தும்.........
ஆண்டுகள் கழிந்தாலும்
வாழ்கின்றோம் உம் நினைவில்
இராசதுரை என்ற நாமங்கள்
இராசாவே...............
மீளாதையா எம் வாய்விட்டு
எம் இருதயங்கள் ஓய்ந்தாலும் – என்றும்
உம் நினைவோடு நாமிருப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.

நிற்சாமம்,
சங்கானை மேற்கு, சங்கானை.

(19306)(45.6)


## பொதுக்கூட்டம்

கோண்டாவில் கிழக்கு வல்லிபுரநாதர் தேவஸ்தான அன்னதான சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை செ.யேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சென்ற வருட பொதுக் கூட்ட அறிக்கை சமர்ப்பிப்பு, 2011 கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிப்பு, புதிய அங்கத்தவர் தெரிவு என பல விடயங்கள் நடைபெறவுள்ளன. அங்கத்தவர்களை தவறாது சமுகம் தருமாறு ஆலய அன்னதான சபைத் தலைவர் அறிவித்துள்ளார். (3)

## வாராந்தச் சொற்பொழிவு

வடமராட்சி,ஓக.17

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாரம் தோறும் நடத்தி வரும் ஆன்மிக நிகழ்வுகள் வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை 'குருவாய் அருள்வாய் குகனே' எனும் தலைப்பில் சொற்பொழிவு நடைபெறும்.

இந்தச் சொற்பொழிவை சிவத்திரு. வ.குமாரசாமி ஐயர் நிகழ்த்துவார். (3-8)


# 22 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 18★06★1933

உதிர்வு 20★08★1990

தோலகட்டி – வசாவிளான்

அமரர் வைத்திலிங்கம் நடராசா

(முன்னாள் பொறுப்பதிகாரி, வலி. கிழக்கு பிரதேச சபை, அச்சுவேலி)

திதி: 17.08.2012

பாசமுள்ள அப்பாவே!
ஆண்டுகள் இருபத்திரண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் பாசங்கள் நினைவுகள் என்றும் எங்கள்
நெஞ்சங்களை விட்டு அகலாது
வருடம் தவறாமல் கந்தனின் தீர்த்தத்தில் உங்கள்
காலடியில் நின்று கண்ணீர் பூக்களால்
அஞ்சலி செலுத்தும்

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ந.சிவபாக்கியம், துஷா இல்லம்,
கற்பக்குணை, உடுவில், சுன்னாகம்.

(21401)(45-6)

## பம்பஹின்னகந்த வனப் பகுதியில் தீ

இரத்தினபுரி, ஓக.17

பலாங்கொடை, பம்பஹின்ன கந்த வனப்பகுதியில் தீ பரவியுள்ளது. ஹல்பே புவக்கஹ ஹெல வரையான பகுதிக்கு தீ பரவியுள்ளது என்று இரத்தினபுரி மாவட்ட இடர் முகாமைத்துவ பதில் பணிப்பாளர் லசந்த நீல்சிறி குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் மாலை ஏற்பட்ட தீயினால் இதுவரை சுமார் 150 ஏக்கர் பாதிப்படைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக வனப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச மக்கள் கூட்டாக முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மன்னார் மடு தேவாலயத்திற்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியிலும் நேற்றுமுன்தினம் மாலை தீ பரவியுள்ளது. பொலிஸாரும் பிரதேசமக்களும் கூட்டாக தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ச)

## பண மோசடி செய்தவர் கைது

அரச தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவரை கல்கமுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் அநுராதபுரம், அம்பாறை, மொனறாகலை, வவுனியா மற்றும் கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்தவர்களிடம் அரச தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி, நிதி மோசடி செய்துள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட வரிடமிருந்து வெளிநாடு செல்வதற்கான விண்ணப்பப் பத்திரம் மற்றும் அரச பணிக்கான விண்ணப்பப் பத்திரம் என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச)

# இராஜதந்திரப் போரில் வெற்றிபெற கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள்

## மாவை எம்.பி. அழைப்பு



எருவில்,ஓக.17

எமது போராட்டத்தில் நாம் வெற்றி பெறவும் சர்வதேசம் எங்களை அங்கீகரிக்கவும் தமிழ் மக்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்யவேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் புதன் கிழமை மாலை மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிர சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கிலே தேர்தலை வை என்று உலகமே கேட்கின்றது. ஆனால், அதை வைக்காமல் கிழக்கிலே முன் கூட்டியே தேர்தல் வைக்கப்படுகின்றமைக்கு என்ன அர்த்தம் என்று நாங்கள் சிந்திக்கவேண்டும்

கடந்த தடவை நாங்கள் இந்தத் தேர்தலில் கலந்து கொள்ளவில்லை. அதேபோன்று இந்தத் தடவையும் நாங்கள் கலந்துகொள்ள மாட்டோமென்று அரசு நினைத்தது.

தற்போது நடக்கின்ற இந்த இராஜதந்திரப் போரில் உங்களுடைய வாக்குகள் மிகவும் பிரதானமானவை.

முள்ளிவாய்க்காலிலே போர் முடிந்துவிட்டது. நாங்கள் போரிலே வென்று விட்டோம். தமிழர் கதையை தோற்கடித்துவிட்டோம் என்று ஜனாதிபதி சொன்னபோது இந்த ஜனநாயக ரீதியான தேர்தலில் நாட்டில் ஜனநாயகம் இருக்கிறது என நாங்கள் சொல்லவில்லை. என்றாலும் இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் உங்களைத் தோற்கடிப்பார்கள் நாங்கள் வெற்றிபெறுவோமென அடித்துச் சொன்னோம். வெற்றியும் பெற்றோம்.

இன்றைக்கு இராஜதந்திர ரீதியாக - சர்வதேச ரீதியாக இந்த அரசு தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டிலே ஜனநாயகம் இல்லை. இந்த நாட்டிலே மனித உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன. ஆயிரம் ஆயிரமாக ஒரு மக்கள் கூட்டம் கொல்லப்பட்டிருக்கிறது.

மனித உரிமைகளை மீறியதற்காக - காணிகள் சுவீகரிக்கப்பட்டதற்காக - இராணுவம் அங்கிருந்து வெளியேறி தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகத் தீர்வுகாணப் படவேண்டும் என்பதற்காக சர்வதேசம் இராஜதந்திர ரீதியாக அத்தனை முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருக்கின்றது. இதற்கு எதிராகவேதான் கிழக்கு மாகாணத்திலே தேர்தலை நடத்தினால் உலகம் சொல்வது பொய். தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் எல்லாம் என்னை ஆதரித்து நிற்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்காகத் தான் அவசரமாக இந்தத் தேர்தலை அரசு நடத்துகின்றது.

> தமிழர் கதையை தோற்கடித்துவிட்டோம் என்று ஜனாதிபதி சொன்னபோது இந்த ஜனநாயக ரீதியான தேர்தலில் நாட்டில் ஜனநாயகம் இருக்கிறது என நாங்கள் சொல்லவில்லை.

எமது போராட்டத்தில் நாம் வெற்றி பெறவும் சர்வதேசம் எங்களை அங்கீகரிக்கவும் தமிழ் மக்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து பெற்றிபெறச் செய்யவேண்டும். எதிர்வரும் 8ஆம் திகதி நாம் பெற்றிபெற்று இந்த அரசுக்கும் சிங்கள மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் ஒரு செய்தியைச் சொல்பவர்களாக நாங்கள் இருக்கவேண்டும்- என்றார். (ச-31)

## தேர்தல் பிரசாரத்துக்கு உதவிய அமைச்சரின் அலுவலகத்துக்கு 'சீல்'

கேகாலை,ஓக.17

கேகாலை மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள அமைச்சர் அதாவுத செனவிரத்னவின் அலுவலகம் ஒன்று முத்திரை ('சீல்') வைத்து மூடப்பட்டுள்ளது.

குறித்த அலுவலகம் தேர்தல் பிரசாரத்துக்காகப் பயன்படுத்தப்பட்டதையடுத்தே குறித்த அலுவலகம் மூடப்பட்டது.

சப்ரகமுவ மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் தேர்தல் பிரசார பதாகைகள் குறித்த அலுவலகத்தில் இருந்தன என்று தேர்தல்கள் செயலகப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து மேற்கொள்ளப்பட்ட சோதனையை அடுத்தே குறித்த அலுவலகம் முத்திரை வைத்து மூடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச)

## உன்னிச்சை பள்ளிவாசல் தீக்கிரை முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல்

மட்டக்களப்பு,ஓக.17

மட்டக்களப்பு மாவட்டத்தின் உன்னிச்சைப் பகுதியில் அமைந்துள்ள முகைதீன் ஜும்ஆ பள்ளிவாசல் தீ வைக்கப்பட்டு எரிக்கப்பட்ட சம்பவமானது சமாதானத்தை விரும்பும் மக்களிடையே கவலையைத் தோற்றுவித்துள்ளது என்று காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

கடந்த 30 வருடங்களாக இடம்பெற்றுவந்த இன முரண்பாடுகள் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டவர்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முஸ்லிம்களும் உள்ளடங்குகின்றனர். உயிர் மற்றும் உடைமைகளையும் இழந்தது மாத்திரமல்லாமல், தமது வாழ்விடங்களைக்கூட இழந்து அகதி என்ற பட்டத்துடன் பல ஆண்டுக நாட்டின் பல பகுதிகளிலும் சித றுண்டு வாழ்ந்து வருகின்றனர்.

தற்போதைய சமாதான சூழலில் தமது பூர்வீக கிராமங்களில் மீள்குடியேறிக் கொண்டிருக்கும் உன்னிச்சைப் பகுதியின் முஸ்லிம்கள் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு தொடர்ந்தும் ஆளாக்கப்பட்டு வருகின்றனர். இதன் ஒரு அங்கமாகவே கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பள்ளிவாசலுக்கு தீ வைப்பு சம்பவத்தை கருதவேண்டியுள்ளது.

இந்தச் சம்பவமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் சமாதானத்தை விரும்பும் மக்களிடையே கவலையைத் தோற்றுவித்துள்ளது. தற்போது தேர்தல் காலமாக இருப்பதால் இனக்கலவரத்துக்கான ஒத்திகையாகவும் இருக்கலாம் என்ற சந்தேகத்தினையும் தோற்றுவிக்கின்றது. இவ் வாறான ஈனச் செயல்களில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் முன் கொண்டுவந்து உரிய தண்டனைவழங்கவேண்டும்-என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச)



திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது. சுவாமி தேருக்கு எழுந்தருளுவதையும், வில்லூன்றிக்கந்தன் ஸ்ரீவள்ளி, தெய்வானை சகிதம் பக்தர்கள் புடை சூழ தேரில் வீதிவலம் வருவதையும் காணலாம்.

## கட்டாக்காலி நாய்களால் தொல்லை; கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

நுவரெலியா,ஓக.17

நுவரெலியா மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது என்று பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக நுவரெலியா மாநகரசபை உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

நுவரெலியா நகரில் தற்பொழுது வெளிநாட்டு உல்லாச பிரயாணிகளின் வருகை அதிகரித்துக் காணப்படுவதால் அவர்களை சிலவேளைகளில் இந்த நாயகள் கடிக்க நேரிடலாம். இது பல பாதிப்புகளை ஏற்படுத்தலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக நுவரெலியா மாநகரசபை ஆணை யாளரிடம் கேட்டபோது,

தற்போது நுவரெலியா மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் 650 கட்டாக்காலி நாய்கள் உள்ளன. இது தொடர்பாக மாநகரசபை என்ற வகையில் தமக்கும் பல முறைப்பாடுகள் கிடைத்திருந்தாலும் கடந்த காலங்களைப் போல அவற்றைக் கொல்ல முடியாது. எனவே, எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதென நாமும் ஆலோசித்து வருகிறோம். மிகவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ச)

## போலி நாணயத்தாள்களுடன் 2 பேர் வசமாகச் சிக்கினர்

எருவில்,ஓக.17

மட்டக்களப்பு வெல்லாவெளி இலங்கை வங்கிக் கிளையில் போலி நாணயத்தாள்களை வைப்பிலிடச் சென்ற ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மக்கள் வங்கி வெல்லாவெளிக் கிளைக்கு நேற்று முன்தினம் மாலை சென்ற குறித்த நபரிடம் போலி நாணயத் தாள்கள் இருப்பதை வங்கி முகாமையாளர் கண்டுபிடித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

உடன் குறித்த இடத்துக்கு விரைந்த வெல்லாவெளி பொலிஸார், சந்தேகநபரை கைது செய்ததோடு அவரிடம் இருந்து 2000 ரூபா போலி நாணயத்தாள்கள் இரண்டையும் ஆயிரம் ரூபா தாள்கள் ஆறையும் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த நபர் களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.


இதேவேளை, மாவடிக்கம் வைத்தியசாலைக்கு




அருகில் 500 ரூபா போலி நாணயத்தாளுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்றுமுன்தினம் பிளெஸ்ஸ நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (ச-31)

# கணினி விளையாட்டுக்கு புதிய தொழில்நுட்பம்







பொழுதுபோக்குக்காகவும், மூளை விருத்தியை அதிகரிக்கவும் அதிகமானவர்களால் கணினி விளையாட்டுக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனால் நாளுக்கு நாள் கணினி விளையாட்டானது புதிய தொழில்நுட்பங்கள் உட்புகுத்தப்பட்டு மெருகூட்டப்பட்டு வருகின்றது. இந்தமாற்றங்களின் அடிப்படையில் தற்போது கணினி விளையாட்டுக்களைக் கட்டுப்படுத்து வதற்கென புதுடுத் தொழில்நுட்பத்துடன்கூடிய புதிய தொடு திரைக் கட்டுப்படுத்திகள் உருவாக்கப்பட்டு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

ரிங்போல் என அழைக்கப்படும் இந்த நவீன தொழில் நுட்பமானது அன்ராயிட் சாதனங்கள் மற்றும் ஐ.ஓ.எஸ். சாதனங்கள் போன்றவற்றில் செயற்படக்கூடியதுடன் ஒருமுறை மின்னேற்றம் செய்து தொடர்ச்சியாக ஐந்து மணி நேரங்கள் வரை பயன்படுத்தக்கூடியது.

# சோனியின் புதிய தயாரிப்பு




ஏனைய முன்னணி கணினி உற்பத்தி நிறுவனங்களுக்குப் போட்டியாக நவீன வடிவமைப்பிலும், வினைத்திறன் வாய்ந்ததாகவும் உருவாக்கப்பட்ட தனது Tegra 3 டேப்லெட்களை விரைவில் சோனி நிறுவனம் அறிமுகப்படுத்துகின்றது.

அன்ரோயிட் இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த டேப்லெட்கள் மக்னீசியத்தினாலும், அலுமினியத்தினாலும் ஆன வெளிஉடலமைப்பைக் கொண்டுள்ளன.

மேலும் இவற்றில் பயன்படுத்தப்படும் RAM PÒ 16GB, 32GB, 64GB ஆகிய வெவ்வேறு அளவுகளைக் கொண்டதாக காணப்படுவதனால் ஏனைய டேப்லெட்களுடன் ஒப்பிடும்போது வினைத்திறன் அதிகமாகக் காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய வசதிகளுடன் 'வைபை ரூட்டர்'





வின்க்நெட் நிறுவனம் அண்மையில் ஒரு வைபை ரூட்டரை சந்தையில் களமிறக்கி இருக்கிறது. இந்தச் சாதனத்துக்கு எம்.எப்.50 3ஜி பக்கெட் வைபை ரூட்டர் என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய சாதனம் ஏராளமான தொழில்நுட்ப வசதிகளுடன் வருகிறது. குறிப்பாக அதிகமாக பயணத்தில் இருக்கும் வர்த்தகத்தில் ஈடுபடுவோரை குறி வைத்து இந்த புதிய சாதனம் வருகிறது.

அடிப்படையில் இந்த சாதனம் ஒரு எச்.எஸ்.பி.ஏ. யு.எஸ்.பி. மோடம் ஆகும். இது ஒரு எல்.சி.டி. டிஸ்ப்ளேயுடன் வருகிறது. இந்தத் திரையில் சமிக்ஞை மற்றும் பற்றரியின் சார்ஜ் அளவு ஆகியவற்றை பார்க்கலாம்.

இந்தச் சாதனம் சிக்னல் பூஸ்டர் கொண்டிருப்பதால் சிக்னல் குறை வாக இருக்கும் போதும்கூட இணையத்தளம் சிறப்பான வேகத்தில் இயங்கும். அதுபோல் இந்தச் சாதனம் 14.4 எம்.பி.பி.எஸ். பதிவிறக்க வேகத்தையும் 5.76 எம்.பி.பி.எஸ். பதிவேற்ற வேகத்தையும் சப்போர்ட் செய்யும். அதோடு இந்த சாதனத்தை மிக எளிதாக எடுத்துச் செல்ல முடியும்.

இதை இன்ஸ்டால் செய்வது மிகவும் எளிது. அதற்காக இது ஒரு இணையம் அடிப்படையிலான இன்டர் பேஸைக் கொண்டுள்ளது. ஒரே நேரத்தில் இந்தச் சாதனம் 10 கணினி சாதனங்களுக்கு இணைப்பு வழங்கும். மேலும் இந்தச் சாதனம் மைக்ரோ எஸ்டி கார்டு ஸ்லாட் வசதியையும் வழங்குகிறது. இதன் மூலம் மெமரியை 32ஜிபி வரை அதிகரிக்க முடியும்.

# வயர்லெஸ் வசதியுடன் வருகிறது டேப்லெட்



வயர்லெஸ் சார்ஜர் வசதியுடன் புதிய டேப்லட்டை அறிமுகம் செய்யத் திட்டமிட்டுள்ளது ஐ.சி.இ. எக்ஸ். மின்சாதன நிறுவனம். லப்ரொப், டேப்லெட் போன்ற எலக்ட்ரோனிக் சாதனங்களுக்கு சார்ஜ் செய்வது ஒரு பெரிய வேலை என்றுதான் சொல்ல வேண்டும். அதுவும் வயர் கொண்ட சார்ஜர்கள் என்றால் பயணம் செய்யும் தருணங்களில் மின்னேற்றம் செய்வது இன்னும் சிரமம். இதனால் புதிய வயர்லெஸ் சார்ஜர் வசதி கொண்ட டேப்லெட்டை வழங்க திட்டமிட்டுள்ளது இந்த நிறுவனம்.

வயர்லெஸ் சார்ஜர் வசதி கொண்ட டேப்லெட்டை வழங்குவதாகக் கூறும் மேற்படி நிறுவனம், ஐ.சி.இ. எக்ஸ்ட்ரீம்-II என்ற பெயரில் டேப்லெட்டை அறிமுகம் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி வயர்லெஸ் டேப்லெட்டை வெற்றிகரமாக ஐ.சி.இ. எக்ஸ். நிறுவனம் அறிமுகம் செய்தால், வாடிக்கையாளர்களுக்கு அது மிகவும் பயனளிக்கும் ஒன்றாக இருக்கும்.

வயர்லெஸ் சார்ஜர் கொண்ட டேப்லெட்டை வழங்க திட்டமிட்டிருப்பது மட்டுமல்லாமல், ஐ.சி.இ.எக்ஸ்ட்ரீம் என்ற அன்ட்ராய்டு இயங்குதளம் கொண்ட டேப்லெட்டையும் அறிமுகம் செய்கிறது ஐ.சி.இ. எக்ஸ். மின்சாதன நிறுவனம். எங்கு சென்றாலும் எளிதாக எடுத்துச் செல்வதற்கு வசதியாக இருக்கும் இந்த டேப்லெட்டை திரும்பத் திரும்ப பயன்படுத்தவும் ஆர்வமாக இருக்கும். இளைஞர்களை எளிதாக ஈர்க்கும் வகையில் இந்த டேப்லெட்டின் வடிவமைப்பும், தொழில்நுட்பமும் இருக்கும்.

இந்த டேப்லெட் 7 இஞ்ச் திரை வசதியினை கொண்டதாக இருக்கும். கையில் வைத்துப் பயன்படுத்துவதற்கு எளிதாக இருக்கும் இந்தத் திரை, டபிள்யூ.விஜிஏ தொழில்நுட்பத்தினை வழங்கும். இதனால் காட்சிகளைத் தெளிவாகப் பார்க்க முடியும். தொடுதிரை வசதி கொண்ட இந்தத் திரை 800 X 480 பிக்ஸல் திரை துல்லியத்தினை கொண்டது.

2ஜி, 3ஜி போன்ற வசதிகளைப்பெற எக்ஸ்டர்னல் டோங்கில் சப்போர்ட்டும் இந்த டேப்லெட்டில் பெறலாம். இதில் 2 மெகா பிக்ஸல் கமராவும் கொடுக்கப்பட்டுள்ளது. 8ஜிபி இன்டர்னல் மெமரி வசதி கொண்ட இந்த டேப்லெட்டில், 32 ஜிபி வரை மெமரி வசதியை விரிவுபடுத்திக் கொள்ளலாம். வைபை வசதிக்கு சப்போர்ட் செய்யும் இந்த டேப்லெட்டை ரூ. 6,999 விலையில் பெறமுடியும்.

ஆனால் இந்த ஐ.சி.இ. எக்ஸ் நிறுவனம் இந்திய மக்களுக்கு அவ்வளவு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்பதால், குறிப்பிட்ட சில மின் சாதன ஸ்டோர்களில் சிறந்த தொழில்நுட்பத்தை வழங்கும் இந்த ஐ.சி.இ. எக்ஸ்-7 டேப்லெட்டைப் பெறலாம்.


# பேஸ்புக் டிப்ஸ்

சமூக இணையத்தளங்களுள் முன்னணியில் திகழும் பேஸ்புக் தளமானது தனது பயனர்களின் தனிப்பட்ட விவரங்களைப் பாதுகாப்பதற்கென புதிய பொறிமுறை ஒன்றைக் கையாண்டுள்ளது.

அதாவது பயனர்கள் நேரடியாக பேஸ்புக் இணையத் தள நிபுணர்களைத் தொடர்பு கொண்டு, அவர்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் முகமாக மின்னஞ்சல் முகவரி ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் மூலம் கணக்குகள் திருடப்பட்டாலோ அல்லது கடவுச்சொற்கள், வியாபாரங்கள் தொடர்பான தகவல்கள் திருடப்பட்டாலோ, இம்மின்னஞ்சல் முகவரி மூலமும் நிபுணர்களைத் தொடர்பு கொண்டு இழந்த கணக்குகள், கடவுச்சொற்கள், தனிப்பட்ட, வியாபாரம் தொடர்பான தகவல்கள் என்பவற்றை மீட்டெடுக்க முடியும்.

# மல்வேர்களில் இருந்து கணினிகளைப் பாதுகாக்க



தற்போது அதிகரித்து வரும் இணையத்தள பாவனையால் இணையம் மூலமாக கணினிகளுக்கு வைரஸ்கள், மல்வேர்களை அனுப்பி கோப்புக்களுக்கு சேதத்தை விளைவித்தல், தகவல்களைத் திருடுதல் போன்ற சட்டவிரோத செயற்பாடுகளும் அதிகரித்து வருகின்றன.

இவ்வாறாக இணையத்தளம் மூலம் கணினிகளுக்கு அனுப்பப்படும் adware, spyware, worms, trojans, dialers அவசியமற்ற அல்லது ஒவ்வாத மல்வேர்களை நீக்குவதற்கு Network Malware Cleaner எனும் மென்பொருள் பெரிதும் உதவியாகக் காணப்படுகின்றது.

50.9 MB கோப்பு அளவுகொண்ட இந்தமென்பொருளை தொழில் நிலையம், சேவர்களிலும் நிறுவி அவற்றின் பாதுகாப்பை அதிகரிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஃபயர்பொக்ஸை 'ப(B)க்கப்'செய்வதற்கு...




அதிகளவான பயனர்களால் விரும்பிப் பயன்படுத்தப்படும் இணைய உலாவிகளில் ஒன்று பயர்பொக்ஸ். இதனை மேம்படுத்தும் [upgrade] சந்தர்ப்பங்களில் முந்தைய பயர்பொக்சில் காணப்படும் புக்மார்க்ஸ், ஏனைய தரவுகள் போன்றவற்றை புதிய பயர்பொக்ஸுக்கு மாற்றும் பொருட்டு அவற்றை பக்கப் செய்வது அவசியமாகின்றது.

இச்செயன்முறைக்கு MozBackup எனும் மென்பொருள் ஒன்று பயனுள்ளதாகக் காணப்படுகின்றது.

இந்தமென்பொருளைத் தரவிறக்கம் செய்து கணினியில் நிறுவிய பின்னர் இயக்கியதும், பாதுகாப்புக் கருதி சுயவிவரம்[profile] ஒன்றைத் தெரிவு செய்து கடவுச் சொல் ஒன்றையும் உட்புகுத்திய பின்னர் பக்கப் செய்ய வேண்டிய அம்சங்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

அவ்வாறே குறித்த தகவல்களை Restore செய்வதற்கு, Restore ஐ தெரிவு செய்து செயன்முறைப்படுத்த வேண்டும்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
**09.04.1935**

உதிர்வு
**29.08.2011**

## அமரர் மாரிமுத்து சிதம்பரம் (சீர்காழி)

அன்பாலும் பண்பாலும் எம் எல்லோரையும்
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று ஆனாலும் — உங்கள்
இன் முகத்தின் புன்சிரிப்பும் இனிய வார்த்தைகளும்
என்றும் மறவோம் — அப்பா!
துன்பத்தில் உங்கள் தோள் சாய்ந்தோம் — அப்பா
இன்பத்திலும் உங்களுடன் கலந்தோம் அப்பா!
எம்மைவிட்டு மறைந்து ஓராண்டு ஆனாலும்
என்றும் மறையாது உங்கள் நினைவுகள்
உங்கள் கரம் பற்றி — நாம் உங்கள் வழியில்
நடந்தோம் — அப்பா கைபிடித்து
அரவணைத்த நீங்கள் இன்று எம்முடன் இல்லையே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

39, வளாக வீதி, திருநெல்வேலி

(சி/2382) (45.6.7)

# டயலொக் வடக்கில் தசாப்த கால நிறைவினை கொண்டாடும் முகமாக இடம்பெறும்

# கோலப் போட்டி



2012 ஓகஸ்ட் 21ம் திகதி பூங்கா வீதி, யாழ்ப்பாணம்

**பரிசுகள்**

1ம் பரிசு
ரூ.50,000/-
பணப்பரிசு

2ம் பரிசு
ரூ.30,000/-
பணப்பரிசு

3ம் பரிசு
ரூ.20,000/-
பணப்பரிசு

ஓகஸ்ட் 18ம் திகதிக்கு முன்பு பின்வரும் டயலொக் வாடிக்கையாளர் சேவை நிலையத்துக்கு விஜயம் செய்து பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

- இல. 141 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
- இல. 31A மாணிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
- இல. 138, கண்டி வீதி, சாவகச்சேரி
- இல. 19, விக்னேஷ்வரா கல்லூரி வீதி, நெல்லியடி
- இல. 60, முதலாம் குறுக்கு தெரு, வவுனியா

இணைபிரியாத 10 வருடங்கள்

Dialog

(C/2264)

முதலில் பதிவு செய்பவர்களுக்கு மட்டுமே வாய்ப்பு

# அடியார்க்கு அருளும் சந்நிதியானுக்கு இன்று கொடியேற்றம்

ந.அரியரத்தினம்
தொண்டைமானாறு



ஆயிரக்கணக்கான அடியார்கள் நாள்தோறும் உள்ளன்புடன் சந்நிதியானை நாடிச்சென்று வழிபடுவதும், அதனால் தமது வாழ்க்கையில் பெற்றுக் கொள்ள முடியாத மனநிறைவைப் பெற்றுக்கொள்வதும், எத்தகைய வேண்டுதல்களுடன் அடியார்கள் சந்நிதியானை நாடிச் சென்றார்களோ, அவற்றைச் சந்நிதியான் தமக்கு அருள்வான் என்ற முழுமையான மன நிறைவுடன் வீடு திரும்பும் நிகழ்வுகளும் தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் ஒரு முருகதிருத்தலம் தான் சந்நிதி முருகன் குடிகொண்டிருக்கும் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமாகும்.

கடந்த காலங்களில் வடபகுதி மக்களின் வாழ்க்கை நிலையும் வாழ்விடங்களும் சிதறடிக்கப்பட்டு, அவர்களில் பெரும்பாலானோர் வேறு இடங்களுக்கும், வேறு நாடுகளுக்கும்புலம்பெயர்ந்து சென்றமை வரலாறு. உலகின் எப் பகுதியில் இவர்கள் வாழ்ந்தாலும், அவர்களது ஆழ்மனதிலும் ஆழமாக இடம் பிடித்திருப்பவன் சந்நிதி முருகனாவான். அந்த அளவுக்கு சைவ சமய அடியார்களின் ஆன்மீக ஈடேற்றத்துக்கான புனித தலமாக செல்வச்சந்நிதி ஆலயம் விளங்குகின்றது. அதுமட்டுமன்றி இது வைத்தியசாலைகளுக்கெல்லாம் மிகப் பெரிய வைத்தியசாலையாகவும், நீதிமன்றங்களுக்கெல்லாம் மிகப்பெரிய நீதிமன்றமாகவும், மனிதர்களால் தீர்வுகாண முடியாத பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு காணுகின்ற சந்நிதானமாகவும் விளங்கிக் கொண்டிருப்பதுதான் இந்த ஆலயத்தின் தனித்துவமாகும்.

கல்வியங்காட்டைச் சேர்ந்த அரசபிள்ளை என்பவருக்குத் தீராத நோய். குடும்பத்தில் மோசமான வறுமை. இதனால் வாழ்க்கையில் தொடராகத் துன்பம். வாழ்க்கை என்றால் துன்பம் தான் என்ற கசப்பான அனுபவத்தால் துன்பத்தின் விளிம்பிற்கே சென்றவர். சந்நிதிக்கு வந்து வழிபடும் அடியவர் ஒருவரின் வழிப்படுத்தலால் அரசபிள்ளை சந்நிதியானின் திருப்பாதங்களில் சரணடைந்தார். தவறாது சந்நிதியானிடம் வந்து தரிசனம் செய்தார். இன்று உடல் நோய் உட்பட எல்லாவிதமான துன்பங்களும் நீங்கிவிட்டது. கனடாவில் தொழில் புரியும் தனது மகனைக் காண கனடாவுக்கு விஜயம் செய்து திரும்பியுள்ளார். வாழ்க்கை என்றாலே துன்பம் என்று வாதிட்டவர், இப்பொழுது மன நிறைவுடனும் சந்நிதியானின் நினைவுடனும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இன்றும் தவறாது வெள்ளி தோறும் சந்நிதியானிடம் சென்று தொழுது வருகிறார். இவரைப் போன்று இன்று சந்நிதியானிடம் நம்பிக்கை வைத்து அனுக்கிரகம் வேண்டித் தொழும் அடியவர்கள், அவனது அருட்கடாட்சம் பெற்று வாழ்க்கையில் சிறப்புற வாழ்கின்றனர்.

1950 மற்றும் 60 தசாப்த காலத்தில் நாட்டில் பல புகழ்பூத்த நீதிபதிகள், வழக்கறிஞர்கள் கடமையாற்றிக் கொண்டிருந்தனர். சட்டத் திறமைகளால் மட்டுமன்றி தற்றுணிவுடனும், சமயோசிதமாகவும் செயற்படக்கூடிய வல்லமைகளாலும் இவர்கள் சர்வதேச ரீதியாகவும் அறியப்பட்டவர்களாக வாழ்ந்து வந்தனர்.

இத்தகையோரின் நீதிபதி ஸ்ரீஸ்கந்தராசா ஆழமான சட்ட அறிவும், அனுபவமும், திறமையும், துணிவும் நிறைந்தவராக காணப்பட்டார். பூரணமான இறை நம்பிக்கை கொண்டவர். நியாயங்களை சீர்தூக்கிப் பார்த்து நிதானமாக தீர்ப்புகளை வழங்கும் இயல்புள்ளவர். இதனால் அவர் வழங்குகின்ற தீர்ப்புகள் தொடர்பாக மேன்முறையீடு செய்யப்பட்டாலும் அதில் மாற்றங்கள் எதுவும் இடம்பெறுவதில்லை.

கொழும்பில் ஒரு சமயம் அவர் நீதிபதியாக கடமையாற்றிக் கொண்டிருந்த வேளை அவருக்கு நீதியாகவும், நியாயமாகவும் கிடைக்க வேண்டிய பதவி உயர்வை மேலிடம் அவருக்கு வழங்க மறுத்தது. இதனால் மேலிடத்தின் முடிவை துணிந்து நிராகரித்தது மட்டுமன்றி தனது பதவியைக் கூட இழப்பதற்கு தயாரானார்.

அவர் தமது சொந்தக் கிராமமான தொண்டைமானாற்றுக்கு வந்து சேர்ந்தார். சந்நிதியானுடைய திருப்பாதங்களில் தன்னுடைய மனக் குறையை ஒப்புவித்தார். தனக்கு நீதி வழங்குமாறு சந்நிதியானை வேண்டித் தொழுது அவனிடம் சரணாகதி அடைந்தார். சந்நிதியானுக்கு தன்னால் முடிந்த சரியைத் தொண்டுகளையும் ஒரு சாதாரண அடியார்போலசெய்யத்தொடங்கினார்.

இதற்கு ஒரு வார காலத்தின் பின் கொழும்பில் இருந்து அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் அவருக்கு வழங்க மறுக்கப்பட்ட அந்தப் பதவி உயர்வை வழங்குவதாகவும் அதனை உடனே வந்து பொறுப்பேற்குமாறும் குறிப்பிடப்பட்டிருந்தது. நீதிமன்றங்களுக்கெல்லாம் நீதிமன்றமாய் விளங்கும் இடம் சந்நிதியானுடைய சந்நிதானம் தான் என்பது இதிலிருந்து உறுதியாகிறது. இதனால்தான் குடும்பத்தில் நீதி மறுக்கப்பட்டவர்கள், சமூகத்தில் நீதி மறுக்கப்பட்டவர்கள், வேலைத் தளத்தில் நீதி மறுக்கப்பட்டவர்கள் என எல்லோரும் இன்றும் சந்நிதியானை நாடி வந்தவண்ணம் உள்ளனர்.

அது மட்டுமல்ல உலகியலில் மக்களுக்கு என்னென்ன செல்வங்கள் வேண்டுமென்று நினைக்கின்றனரோ அந்தச்செல்வங்களைப் பெறுவதற்காகவும் கூட இந்த கலியுகக் கந்தனைத் தான் அடியார்கள் நாடிய வண்ணமுள்ளனர்.

சந்நிதியில் கொடியேற்றம் என்பது சாதாரண நிகழ்வு அல்ல. அது உலகம் முழுவதும் பரந்துவாழும் சந்நிதியான் அடியார்களுக்கு உவகை ஏற்படுத்தும் நிகழ்வு. ஆனாலும் ஆலயச்சூழலில் உள்ளவர்கள் இரட்டிப்பு மகிழ்வுடனும், இரட்டிப்பு புனிதத்துடனும் இந்த உற்சவத்தை எதிர்கொள்வார்கள் .

**வரலாற்றுப் புகழ்மிக்க தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று (17.08.2012 வெள்ளிக்கிழமை) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.**

உற்சவகாலத்திற்கு அறிகுறியாக ஆலயத்தில் வள்ளிக்கிழங்கு முளைப்பது போல ஆலயச்சூழலில் உள்ள மக்களுக்கும் ஒவ்வொரு வருடமும் சந்நிதியான் தனது உற்சவத்தை தெரியப்படுத்தி அவர்களையும் பக்குவப்படுத்தும் அதிசயம் இன்று வரை நடைபெறுகின்றது. ஆம் தொண்டைமானாற்றுக் கிராமத்தில் மீனவத் தொழில் செய்யும் மக்களுக்கு மீன்பிடிவருமானம் ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே படிப்படியாகக் குறைவடைய ஆரம்பிக்கும். இந்த மக்களும் சந்நிதியானின் கொடியேற்ற தின அறிகுறியை இதன்மூலம் உணர்ந்து தமது தொழிலை முழுமையாக நிறுத்தி எம்பெருமானுக்கு தொண்டுகள் செய்வதற்கு தம்மைப் பக்குவப்படுத்த ஆரம்பித்துவிடுவார்கள். சந்நிதியானுக்குப் பூ எடுப்பவர்கள் ஒரு வாரத்திற்கு முன்பிருந்தே அசைவ உணவு உண்பதை நிறுத்தி, வீடுவாசல்களை சுத்தம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். ஆம் சந்நிதியான் உற்சவம் நடைபெறும் காலங்களில் உற்சவ காரியங்களை எல்லாம் செயற்படுத்துவதற்காக அடியார்களை இவ்வாறெல்லாம் வழிப்படுத்தி காரியங்களைச் செயற்படுத்தி முடிப்பது மட்டுமன்றி முருகப்பெருமான் பத்தாம் திருவிழாவிற்கு பிற்பட்ட நாள்களில் தானே அடியார்களில் ஒருவர் போல உலாவந்து காரியங்களை கண்காணித்து நிறைவுசெய்யும் அதிசயமும் இந்த ஆலயத்தில் அன்று தொட்டு இன்று வரை நடைபெறுவதான நம்பிக்கை சந்நிதியானின் பக்தர்கள் மத்தியில் இன்றும் நிலவி வருகின்றது.

இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் சந்நிதியானின் இவ்வாண்டுக்கான பெருந்திருவிழாக்கள் எதிர்வரும் 30.08.2012 வியாழக்கிழமையன்று தேர்உற்சவம் மற்றும் மறுநாள் 31.08.2012 வெள்ளிக்கிழமையன்று இடம்பெறும் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும். சந்நிதியானின் அருட்கடாட்சம் நம் அனைவருக்கும் கிட்ட அவன் தாழ்பணிவோமாக.


## முடிவில்லாத் துயரின் ஆறாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
1981
★
04
★
22

மறைவு
2006
★
08
★
17

அமரர் சுகுணராசா
நிமலன்

ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை நம் துயரம்,
நித்தம் நித்தம் உம் நினைவுகளுடன்
உம் ஆத்ம சாந்திக்காய் தொழுது நிற்கும்,

அம்மா, அப்பா, அண்ணா, அண்ணி,
அக்கா, அத்தான், மனைவி, மகன், மருமக்கள்.

கரந்தன்,
நீர்வேலி.
(சி/2381)(6-8)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
1942
★
06
★
19

உதிர்வு
2012
★
07
★
21

அமரர் சிவதாசன் புஸ்பராணி

கடந்த (21.07.2012) அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி சிவதாசன் - புஸ்பராணி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (18.08.2012) சனிக்கிழமை கீரிமலையில் நடைபெறும். தொடர்ந்து 20.08.2012 அன்று திங்கட்கிழமை அன்னாரின்இல்லத்தில்(சுன்னாகம்) நடைபெறவுள்ள சபிண்டீகரண கிரியை களிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்தை தெற்கு வீதி, சுன்னாகம். (21803)(6-8) குடும்பத்தினர்.

## வீடு, களஞ்சியம் வாடகைக்குண்டு

மந்திகை மில்லடியிலிருந்து புற்றளைக்குச் செல்லும் ஒழுங்கையில் வீடும், பிரதான வீதியின் அருகில் களஞ்சியம், வியாபாரத்துக்கு ஏற்ற கட்டடமும் தனித்தனியே வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 9810 961
(18722)(45-6-)

## காணி விற்பனைக்கு

சுதுமலை மத்தி மானிப்பாயிலுள்ள 15½ பரப்பு வீட்டுக் காணியுடன் கூடிய வயல் காணி விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை

தொடர்பு: 0774911 362
(21775)(45-6-)

## காணி விற்பனைக்கு

நீர்வேலி பழைய இனிப்பு கொம்பனிக்கு முன்னால் உள்ள 9 பரப்புக் காணியில் 4½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 6337 084
(21814)(45-6-7)

## வீடு வாடகைக்கு

சோதி வேம்படி லேன், மானிப்பாய் சாயிபாபா பாடசாலை அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 642 1706
077 974 7765
(21793)(45-6-7)

## பெயர் மாற்றம்

கொக்கன் வளவு, இணுவில் கிழக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த
கந்தையா - சச்சிதானந்தன் ஆகிய நான்
இன்று (17.08.2012) முதல் கந்தையா சச்சிதானந்தசிவம்
என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

கந்தையா சச்சிதானந்தசிவம்,
கொக்கன் வளவு, இணுவில் கிழக்கு.
(21840)(45-6)

## Happy BirthDay




25th
17.08.2012
K.Sanjeevkumar
Demonstrator
B.c.t & N.c.e.c.p

On your special day,
a wish from all of us
to say........
Thank you........
For all you caring ways!
may you have a day
that's as wanderful as you are!

Best wishes
Building Construction Technology
Students 2011 & 2012
College Of Technology,Jaffna.
(21809)(45-6-7)




வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட வவுனியா சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை மாணவிகள் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்கள் மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகளுடன். (ங-400)

# மாகாண கடற்கரை கரப்பந்தாட்டத்தில் மன்னார் வவுனியா அணிகள் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஓக,17

வடமாகாண விளையாட்டுத்திணைக்களம் முதல் முறையாக மாவட்டங்களுக்கிடையே நடத்திய கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு கடற்கரையில் இடம்பெற்றது. இதில் ஆண்களுக்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் மாவட்ட அணியும், பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வவுனியா மாவட்ட அணியும் வெற்றி பெற்று வடமாகாணச் சம்பியன் பட்டத்தை வென்றன.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து யாழ். மாவட்ட அணி மோதிக் கொண்டது.

3 செற்களை கொண்ட ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி முதலாவது சுற்றினை 21:18கள் என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. ஆயினும் தளராது போராடிய மன்னார் மாவட்ட அணி இரண்டாம் , மூன்றாம் சுற்றுகளை 21:14 , 15:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் தனதாக்கி யாழ். அணியை வீழ்த்தி ஆண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்டத்தில் வடமாகாணச் சம்பியன் ஆனது.

பெண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து முல்லைத் தீவு மாவட்ட அணி மோதிக் கொண்டது.

3 செற்களை கொண்ட இந்த ஆட்டத்தில் வவுனியா மாவட்ட அணி 21:5 ,21:13 என்ற நேர் செற்கணக்கில் முல்லைத்தீவு அணியை வெற்றி கொண்டு மகளிர் பிரிவில் வடமாகாண சம்பியன் ஆனது . (ங-23)

## விக்னேஸ்வரா, நவஜீவன் அணிகளுக்கு வெற்றி

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த செவ்வாய்க் கிழமை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக 'பி' அணி மோதிக் கொண்டது.

3 செற்களை கொண்ட இந்த ஆட்டத்தில் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி 25:22, 25:23 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.

அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக 'பி' அணிக்கும் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழக அணி 25:23, 27:25 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)



பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவுடன் பாஷையூர் மக்கள் படை அணியினர் உள்ளூர் உதைபந்தாட்ட அணிகளுக்கிடையில் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் சிறந்த கோல் காப்பாளராக தெரிவு செய்யப்பட்ட கப்பினஸ் அணி வீரன் ஜதீபனுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது . (ங-23)

## புத்தூர் வளர்மதி வெற்றிக்கிண்ண கரப்பந்தாட்ட முடிவுகள் சில

யாழ்ப்பாணம்,ஓக.17

புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியிலான மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு,

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழக அணி 25:22, 25:23 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி முதல் சுற்றில் 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

எனினும் சுதாகரித்துக் கொண்ட அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியினர் 2 ஆம், 3 ஆம் சுற்றுக்களை தலா 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் தம்வசமாக்கி புத்தூர் கலைமதியை வெற்றி கொண்டது. (ங-23)

## உதயதாரகை சுற்றுத்தொடர் பொம்மர்ஸ் அணி அபாரம்

யாழ்ப்பாணம்,ஓக.17

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலை ஆதரவுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இடம்பெற்ற ஆட்டமொன்றில், பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகமும் நவஜீவன் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காமல் இறுதிவரை மோதிக்கொண்டன. மாறி மாறி இரு அணிகளும் கோல் அடித்ததால் எந்த அணி வெற்றிபெறப் போகிறது என்பதனை கடைசி வரை கணிக்கமுடியாது இருந்தது. எனினும் இறுதி நிமிடங்களில் அபாரமாக ஆடி முன்னிலை பெற்ற பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல்கணக்கில் நவஜீவன் அணியை வீழ்த்தியது. (ங-23)

## தேசியமட்டத்தில் இரண்டாமிடம்



38 ஆவது தேசிய மட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட வடமாகாண அணி வீரர்களை படத்தில் காணலாம். (23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.17

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலை ஆதரவுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்றுவெள்ளிக் கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

**பி.ப. 3.30 மணி**

நவசக்தி விளையாட்டுக்கழகம் எதிர் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம்

**பி.ப. 4.30 மணி**

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் எதிர் நக்கீரன் விளையாட்டுக்கழகம்.

* * *

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு -

**இரவு 7 மணி**

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக 'பி' அணி எதிர் அச்சுவேலி விக்னேஸ்வரா 'பி'

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக் கழகம், 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரை நடத்தி வருகிறது. இன்று வெள்ளிக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

**பி.ப. 4 மணி**

கொலின்ஸ் விளையாட்டுக் கழக ''ஏ'' அணி எதிர் வல்வை விளையாட்டுக் கழக ''ஏ'' அணி

(ங-23-8)

# நவஜீவன், சிவானந்தா உதைபந்தில் அசத்தல்

யாழ்ப்பாணம் ஓக.17

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக் கழகம், 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரை நடத்தி வருகிறது. கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு-

திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் நவஜீவன் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது .

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நக்கீரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இரு அணியினரும் தலா ஒரு கோல்களைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் சிவானந்தா விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. [ங-23]

## மன்னிப்புக் கோரினார் பீற்றர்சன்



தென்னாபிரிக்க வீரர்களுக்கு 'டுவிட்டர்' செய்தி அனுப்பியது தவறு தான், என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபையிடம் பீற்றர்சன், மன்னிப்பு கேட்டார்.

இங்கிலாந்து வீரர் பீற்றர்சன் (வயது-32). அணித் தலைவர் ஸ்ரோரஸ், பயிற்சியாளர் அன்டி பிளவர் குறித்து, அவதூறான முறையில், தென்னாபிரிக்க வீரர்களுக்கு 'டுவிட்டரில்' செய்தி அனுப்பினார். இதையடுத்து மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதனால், பீற்றர்சனின் கிரிக்கெட் வாழ்க்கை முடிந்து விட்டது என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் ஒரு திருப்பமாக, திடீரென இங்கிலாந்து கிரிக்கெட் சபையிடம் தனது செயலுக்கு மன்னிப்பு கேட்டுள்ளார். இதன் மூலம், நாளை அறிவிக்கப்படும், உலகக் கிண்ண 'ரி-20' அணியில் இடம்பெற, பீற்றர்சன் கடைசியாக முயற்சி செய்துள்ளார்.

இந்த மன்னிப்பு ஏற்கப்படும் பட்சத்தில், பீற்றர்சனுக்கு சில காலம் தற்காலிக பணிநிறுத்தம் அல்லது அதிகப்படியான அபராதம் அல்லது இந்த இரண்டும் சேர்ந்த தண்டனையாக வழங்கப்படும். ஒருவேளை, இப்போதுள்ள நிலையே தொடர்ந்தால், உலகக் கிண்ண அணியில் இடம் பெறவே முடியாமல் போய்விடும். (5)

## ஐ.பி.எல். அழைக்கின்றது உலகின் வேக மனிதர்களை



உலகின் மிக வேகமான மனிதர்களாக உசைன் போல்ட், யோஹன் பிளேக் இருவரும் விரும்பினால் இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றலாம் என்று இந்தியன் பிறீமியர் லீக் அமைப்பு அறிவித்துள்ளது. வித்தியாசமான பிரிவுகளிலுள்ள நபர்களையும் இணைத்துக் கொள்ள இந்தியன் பிறீமியர் லீக் தயாராகவுள்ளதாக அவ்வமைப்புத் தெரிவித்துள்ளது.

ஜமைக்காவைச் சேர்ந்தவர்களான உசைன் போல்ட்டும், யோஹன் பிளேக்கும் குறுந்தூர ஓட்டத்தைத் தங்கள் துறையாகத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் கனிஷ்ட மட்டக் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றியிருந்ததோடு, கிரிக்கெட் மேல் ஆர்வம் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

உசைன் போல்ட் ஆஸ்திரேலியாவின் பிக்பாஷ் தொடரில் பங்குபற்றலாம் என்று எதிர்பார்க்கப்படுவதோடு, ஐ.பி.எல். போட்டியில் பங்குபற்றும் தனது விருப்பத்தை யோஹன் பிளேக் வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில் குறித்த வீரர்களது ஆர்வம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இந்தியன் பிறீமியர் லீக் அமைப்பின் பிரதான ஏற்பாட்டுக் குழு அதிகாரியான சுந்தர் ராமன், இந்தியன் பிறீமியர் லீக் போட்டிகளில் உசைன் போல்ட்டும், யோஹன் பிளேக்கும் பங்குகொள்வதில் எந்தவிதமான தடைகளும் இல்லை எனத் தெரிவித்தார்.

விதிகளைப் பின்பற்றித் தங்களை வெளிநாட்டுக் கிரிக்கெட் வீரர்களாக இந்தியன் பிறீமியர் லீக் அமைப்பில் பதிவுசெய்தால் ஏலத்தின் போது இருவரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனத் தெரிவித்த அவர், ஏலத்தின் போது குறித்த வீரர்களை எந்த அணியாவது கொள்வனவு செய்தால் குறித்த அணி சார்பாக இவர்கள் பங்குபற்றலாம் எனத் தெரிவித்தார்.

இந்தியன் பிறீமியர் லீக் அமைப்பில் பதிவு செய்வதற்கு அந்த நாட்டுக் கிரிக்கெட் சபையின் அனுமதியை வீரர்கள் பெற்றிருக்க வேண்டும் என்ற நிலையில், இவர்கள் இருவரும் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (5)

## தங்கம் வென்றவர் அரசியலில்



அண்மையில் லண்டனில் நடந்து முடிந்த ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்ற சீன வீராங்கனை ஜியாவோ லியூயாங்வுக்கு அரசியல் பதவி வழங்கப்பட்டுள்ளது.

சீனாவை சேர்ந்த நீச்சல் வீராங்கனை ஜியாவோ லியூயாங் (வயது - 21). இவர் ஒலிம்பிக் போட்டியில் 200 மீட்டர் பட்டர்பிளை நீச்சல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார். மேலும் 200 மீட்டர் பட்டர் பிளை நீச்சல் போட்டியின் முந்தைய சாதனைகளை முறியடித்தார். இவரது இந்த சாதனை சீனாவுக்கு பெருமை சேர்த்துள்ளது.

எனவே அவரை சீன அரசு, கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியலமைப்பு குழுவில் உறுப்பினராக நியமித்து கௌரவித்துள்ளது. இந்த குழு உறுப்பினர்கள் தான் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் மற்றும் சீனாவின் ஜனாதிபதி போன்ற தலைவர்களை தேர்ந்தெடுக்கும் அதிகாரம் படைத்தவர்கள்.

எனவே இந்த உறுப்பினர் பதவி மிகவும் கௌரவம் மிக்க ஒன்றாக கருதப்படுகிறது. (5)

## இலங்கையுடன் கைகோர்க்கும் ஹரூண் லோகார்ட்

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹரூண் லோகார்ட் - இலங்கைக் கிரிக்கெட் சபையால் பணிக்கமர்த்தப்பட்டுள்ளார். இலங்கைக் கிரிக்கெட் சபைக்கான விசேட ஆலோசகராகவே அவர் இலங்கைக் கிரிக்கெட் சபையுடன் இணைந்துள்ளார்.

இலங்கையின் உள்நாட்டுக் கிரிக்கெட் கட்டமைப்பை மீளக் கட்டியெழுப்புவதற்காகவும், கிரிக்கெட் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்குமாக இலங்கைக் கிரிக்கெட் சபையின் விசேட ஆலோசகராக அவர் பணிபுரிவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அறிக்கையொன்றை வெளியிட்ட இலங்கைக் கிரிக்கெட் சபையின் தலைவர் உபாலி தர்மதாச, ஹரூண் லோகார்ட்டிற்கு பரந்தளவு அறிவும், அனுபவமும் காணப்படுவதாகவும், அவர் இலங்கைக் கிரிக்கெட் சபையோடு இணைந்து செயற்பட சம்மதம் தெரிவித்தமை குறித்துத் தாங்கள் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார்.

ஒரு கிரிக்கெட் சபையாக தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும், சவால்களையும் சிறப்பாக எதிர்கொள்ளவும், இலங்கையில் கிரிக்கெட் நிர்வாகத்தை மேம்படுத்தவும், உள்ளூர் கிரிக்கெட் கட்டமைப்பை மீளக் கட்டியெழுப்பவும் ஹரூண் லோகார்ட்டின் ஆலோசனைகள் தங்களுக்கு உதவியாக அமையும் என்று நம்புவதாக அவர் தெரிவித்தார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக நான்காண்டுகள் பதவி வகித்த ஹரூண் லோகார்ட் கடந்த ஜூன் மாதம் அந்தப் பதவியிலிருந்து நீங்கியிருந்தார். இதற்கு முன்னர் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபையுடன் பிரதம தேர்வாளராகவும், பின்னர் 2003 ஆம் ஆண்டு உலகக்கிண்ண ஏற்பாட்டுக் குழுவில் நிதி மற்றும் ஏற்பாட்டுக் குழுவிலும் அவர் பதவி வகித்திருந்தார். (5)

## பயிற்சியாளர்களை அதிகாரிகள் தடுத்தனர்

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளின்போது, தமது உள்ளூர் பயிற்றுநர்கள் தம்முடன் இணைந்துகொள்வதை அதிகாரிகள் தடுத்ததாகவும் இதனால் தமது செயற்பாடுகள் பாதிக்கப்பட்டதாகவும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றியபின்னர் நாடு திரும்பிய இலங்கை போட்டியாளர்கள் தெரிவித்தனர்.

தனது பயிற்றுநர் தன்னுடன் இணைந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரிகளிடம் தான் கோரிக்கை விடுத்ததாகவும் ஆனால் அதற்கு பலன் கிடைக்கவில்லை எனவும் துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் பங்குபற்றிய மங்கள சமரகோன் கூறினார்.

'பிரிகேடியர் கே.டபிள்யூ.எட்மன்ட் மற்றும் புஷ்பமாலி ராமநாயக்க ஆகிய எனது இரு பயிற்றுநர்களில் ஒருவரை அனுமதிக்கமாறு நான் அதிகாரிகளிடம் கோரினேன். போட்டியின்போது ஒரு பயிற்றுநர் அவசியம் என்று நான் விளக்கினேன். போட்டியின்போது பயிற்றுநர் மிக அவசியம் என்பதை நான் மிகவும் உணர்ந்தேன்' என்று அவர் கூறினார்.

'பொலிஸ் பயிற்றுநர் ஒருவரதும் எனது தந்தையினதும் உதவி எனக்கிருந்தது. ஆனால், இந்தியருடன் நான் போட்டியிட்டபோது, சர்வதேச அனுபவம் கொண்ட பயிற்றுநர் ஒருவர் என்னுடன் இருக்க வேண்டுமென்பதை உணர்ந்தேன் என்று அவர் தெரிவித்தார்.

லண்டன் ஒலிம்பிக்கில் இலங்கையின் சார்பில் 7 போட்டியாளர்கள் பங்குபற்றிய நிலையில் அவர்களின் 30 அதிகாரிகள் கலந்து கொண்டதாக செய்திகள் வெளியாகிருந்தன. [5]

# இந்தியா நஷ்டஈடு தரவேண்டும்




2009 ஆம் ஆண்டு கைவிடப்பட்ட இந்திய - பாகிஸ்தான் தொடருக்காக இந்தியக் கிரிக்கெட் சபையானது பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் இஜாஸ் பட் தெரிவித்துள்ளார். எனினும் தற்போது திட்டமிடப்பட்டுள்ள இந்திய - பாகிஸ்தான் தொடரை அவர் வரவேற்றுள்ளார்.

கிரிக்கெட் தொடரொன்றிற்காக பாகிஸ்தான் அணியை இந்தியாவிற்கு அழைத்துள்ளமை குறித்து இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்த இஜாஸ் பட், எனினும் இந்தத் தொடரின் மூலம் நிதி ரீதியான நன்மைகளை அடைய பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முயல வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

2008 ஆம் ஆண்டு மும்பையில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலை அடுத்து, அடுத்தாண்டு இந்தியாவில் இடம்பெற விருந்த இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான தொடரை இந்திய அரசும், இந்தியக் கிரிக்கெட் சபையும் கைவிடத் தீர்மானித்தது. அந்தத் தொடருக்கான நஷ்ட ஈட்டையே இஜாஸ் பட் கோரியுள்ளார்.

அப்போது பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராகக் காணப்பட்ட இஜாஸ் பட், அது குறித்து இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடன் பேச்சுவார்த்தை நடாத்தி புதிய திட்டங்களை முன்வைத்ததாகவும், அவை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் நிராகரிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த இஜாஸ் பட், சர்வதேசக் கிரிக்கெட் சபையின் போட்டி அட்டவணையின் படி இந்திய அணியும், பாகிஸ்தான் அணியும் தற்போது சந்திக்கும் போது அந்தத் தொடரை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையே ஏற்பாடு செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

(5)

# எஸ்.எல்.பி.எல்லில் ஊழல்

இலங்கைக் கிரிக்கெட்டோடு சம்பந்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் ஊழல் முறைகேடுகள் சம்பந்தமான மேலதிக தகவல்கள் வெளியாகியுள்ளன. குறித்த பதிவு செய்யப்பட்ட ஒலிநாடாக்கள் இலங்கையின் பத்திரிகை இணையமான டெய்லிமிரரிற்கு வழங்கப்பட்டுள்ளன.

டெய்லிமிரருக்கு வழங்கப்பட்ட இந்த ஒலிநாடா, டெய்லிமிரர் நிறுவனத்தால் இலங்கைக் கிரிக்கெட் சபைக்கும் அவர்களூடாகவே சர்வதேசக் கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவிற்கும் வழங்கப்பட்டுள்ளது.

டெய்லிமிரரில் எஸ்.எல்.பி.எல். அமைப்பாளர்களைக் கேள்விக்குட்படுத்தி ஆக்கமொன்று வெளியாகியிருந்தது. அந்த ஆக்கத்தை எழுதிய எழுத்தாளர்களைத் தேடிய ஒருவர் தன்னிடம் எஸ்.எல்.பி.எல் பற்றிய ஒலிநாடா ஒன்று காணப்படுவதாகவும் அதில் எஸ்.எல்.பி.எல். அணியின் உரிமையாளர் ஒருவர் போட்டிகளை நிர்ணயம் செய்வதற்கு முயற்சிப்பது பற்றிய விடயங்கள் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

வழங்கப்பட்ட ஒலிநாடாவில் ஹிந்தியில் அமைந்த உரையாடல்கள் காணப்பட்டதோடு மொழி பெயர்ப்பாளர்களின் உதவியுடன் அவற்றைச் செவிமடுத்தபோது எஸ்.எல்.பி.எல். அணியின் உரிமையாளர் ஒருவர் போட்டிகளை நிர்ணயம் செய்வதற்கு முயற்சிப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அதன் பின்னர் குறித்த செய்தியை முழுமையாக உறுதிப்படுத்தமுடியாத நிலையில் அதை வெளியிடுவதைத் டெய்லிமிரர் தவிர்த்துள்ளது. குறித்த ஒலிநாடாவைச் செவிமடுக்க எஸ்.எல்.பி.எல். அமைப்பின் விளம்பரப்படுத்தலுக்குப் பொறுப்பான சமர்செட் என்டெர்டெய்ன்மென்ட் நிறுவனத்தின் சார்பில் ஒருவரை இலங்கைக் கிரிக்கெட் சபையின் பிரதிநிதியோடு டெய்லிமிரர் அலுவலகத்திற்கு வருகை தருமாறு டெய்லிமிரர் நிறுவனத்தினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

எஸ்.எல்.பி.எல்லின் ஆரம்ப விழாவிற்கு முன்னையதினம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட அப்போது உரிமையாளர்களுடன் இறுதிக்கட்டச் சந்திப்பு ஒன்று திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அதை முடித்துவிட்டு டெய்லிமிரர் அலுவலகத்திற்கு வருகைதருவதாகவும் சமர்செட் நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டது.

குறித்த சந்திப்பின் பின்னர் சமர்செட் நிறுவனத்திலிருந்தும் இலங்கைக் கிரிக்கெட் சபையிலிருந்தும் இரண்டு உயர்நிலை அதிகாரிகள் டெய்லிமிரர் அலுவலகத்திற்கு சென்றதோடு அவர்களுக்குக் குறித்த ஒலிநாடா ஒலிபரப்பிக் காட்டப்பட்டுள்ளது. சமர்செட் நிறுவனத்தின் சார்பில் வருகை தந்த அதிகாரி இந்தியாவைச் சேர்ந்தவராகக் காணப்பட்டதோடு அவர் குறித்த ஒலிபரப்பை அவர் உன்னிப்பாக செவிமடுத்திருந்தார்.

அதன் பின்னர் அந்த ஒலிபரப்பின் பிரதியொன்று டெய்லிமிரரினால் அவர்களுக்கு வழங்கப்பட்டதுடன் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடி ஒழிப்புப் பிரிவிற்கு அவற்றை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன் பின்னரே அவை சர்வதேசக் கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடி ஒழிப்புப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளன. (5)



SRI LANKA PREMIER LEAGUE

# விசாரிக்கிறது ஐ.சி.சி.

இரகசியமாக ஒலிநாடாவில் பதியப்பட்ட ஓர் உரையாடல் தொடர்பில் நடந்ததாகக் கூறப்படும் ஊழல் ஒன்றை சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி.) விசாரணை செய்துவருவதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உரையாடலின் ஒலிநாடாப் பிரதிகள் இலங்கை ஊடகம் ஒன்றுக்கும் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டுக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா கிரிக்கெட் இந்த ஒலிநாடாவை ஐ.சி.சி.யின் ஊழல் எதிர்ப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவிடம் ஒப்படைத்தது. ஐ.சி.சி.யின் ஒத்துழைப்புடன் விசாரணைகள் நடைபெறுவதாக ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பிரீமியர் லீக் தொடர்பான விடயங்களை அவதானிப்பதற்காக ஐ.சி.சி.யின் ஊழல் எதிர் மற்றும் பாதுகாப்பு பிரிவு தற்போது இலங்கையில் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

NALIN IT இன் திருநெல்வேலி
Show Room 4 ஆவது ஆண்டு ஆரம்பத்தை முன்னிட்டு
MEGA OFFER


* Lap Top
* Assempled PC
* Branded Pc
* Computer Parts...
அனைத்திற்கும் விசேட விலைக்கழிவு
மேலதிக விவரம் நாளைய உதயனில்: (சி/2391)
NALIN Information Technologies Pvt Ltd 195/2, Parameswara Junction , Jaffna
Web - www.nit.lk 077 7667975 / 74, 222 1121

PHYSICS
* A/L - 2013 - *A/L 2014 வகுப்புக்கள் நடைபெறுகின்றன. விரைவில் வினாவிடை வகுப்பு ஆரம்பிக்கப் படும் Personal Class, Group Class ஆகவும் கற்கலாம்.
Mr. M. ஸ்பெல்மன் (B.Sc)
18, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(பெரிய கோயில் அருகில்)
(21834)(6-8)

வீடு வாடகைக்கு உண்டு
வவுனியா 2ஆம் குறுக்குத்தெருவில், பஸ் நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள இல.42, 42A இலக்கமுடைய, மூன்றாம்மாடி 5 அறைகள் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு - 0773638471, 0770584925
(21836)(3,6)

மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 80இல் பிறந்த 1இல் செவ்வாய் 78¼ பாவமுடைய கனடா குடியுரிமை உடைய மண மகனுக்கு தகுந்த மணமகள் தேவை.
தொடர்பு - 0774829787 / 0779913966
(21839)(3,6)

இந்திய சாஸ்திரியார் வருகை
யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா , குடும்பப் பிரச்சினையா ? வெளிநாடு செல்லத்தடையா ?, மன உளைச்சலா ? எந்தப்பிரச்சினைக்கும்
நேரில்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(20772) (15-14)

வங்கியியற் கற்கை நெறி
துரித மீட்டல் வகுப்பு
Structure Of Accounts
Sat 10-12 ஆரம்பம் 18.08.2012
K. ஸ்ரீபரன் BBA (FM.spl)
கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை அருகில்
0774598430 (21859)(3.14)

கடை தற்காலிக இடமாற்றம்
இல.57,K.K.S. வீதியில் இயங்கிவந்த ''தேவன்சன்'' எலற்றிக்கல் நிறுவனம் இன்றிலிருந்து அருகிலுள்ள கடையில் இயங்கும் என்பதை அறியத்தருகின்றேன்.
உரிமையாளர்.
(21862)(3.14)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.